KALKI 10.4.94 ரூ. 3.00

கல்கி



அவசர யுகத்தின் அதிவேக உணவு!

ஸ்ரீ கந்தசுவாமி
பர்மனென்ட் பண்டு லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட **நிதி நிறுவனம்** துவக்கம் 1990
பதிவு அலுவலகம்: 60, சாமிபண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002
கிளை அலுவலகம்: 36, ஜீனிஸ் ரோடு, சென்னை - 600 015.

கனகதார முதலீட்டுத் திட்டம்

உங்கள் குழந்தை செல்வங்களை கோடீஸ்வரனாக்குங்கள்!
ரூ. 50,000/- செலுத்துவீர். 10 ஆண்டுகளில் ரூ. 50,000/-ஐ திரும்ப பெறுவீர்.
மீண்டும் 20ம் ஆண்டு நிறைவில் **ஒரு கோடியை** பெறுவீர்

வெகுமதி முதலீட்டுத் திட்டம்

ரூ. 580/- செலுத்துவீர். 252 மாதங்கள் நிறைவில் ரூ. 40,000/- பெறுவீர்.

பிக்சட் டிபாசிட் திட்டம்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு*
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

மாத வட்டிக்கான செக்குகள் முன்கூட்டியே கொடுக்கப்படும்.
உங்கள் டிபாசிட்டுகள் 45 மாதங்களில் 2 மடங்காகிறது
90 மாதங்களில் 4 மடங்காகிறது.

காமதேனு மணிபேக் திட்டம்

வைப்புத் தொகை	முதல் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	இரண்டாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை	மூன்றாம் ஐந்தாம் ஆண்டு முடிவில் கிடைக்கும் தொகை
ரூ. 6,320/-	ரூ. 6,000/-	ரூ. 6,000/-	ரூ. 56,320/-
ரூ. 12,640/-	ரூ. 12,000/-	ரூ. 12,000/-	ரூ. 1,12,640/-

பென்ஷனர் நலத் திட்டம் - வட்டி 19.5%

வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

செல்வக்களஞ்சியம் டிபாசிட் திட்டம்

உங்கள் குழந்தையைக் குபேரனாகக் காண ஆசையா! இதோ
ரூ. 7500/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,25,000/- பெறலாம்
ரூ. 9000/-ஐச் செலுத்தி 15 வருட முடிவில் ரூ. 1,50,000/- பெறலாம்
சேவிங்ஸ் கணக்குகள் மீது 10% வட்டி

கடன்
நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்.
வட்டி வீதம் ரூ. 1.85

H.O. : Friday Holiday
B.O. : Tuesday Holiday
Business Hours
Week Days 9.00 A.M. - 1.00 P.M. &
2.00 P.M. - 6.00 P.M.
பங்குதாரர்களுக்கு மட்டும்

சேர்மன் P. பாலசுப்பிரமணியம், B.Sc.,
சீனியர் டிரஸ்டி
ஸ்ரீ கந்தகோட்டம்
சென்னை - 3.

சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டி

SURESH

பாதுகாப்பு பெட்டகம் குறைந்த வாடகைக்கு கிடைக்கும்

அடுத்த இதழ்...

தமிழ்ப் புத்தாண்டை யொட்டி விடுமுறைச் சிறப்பிதழாக மலருகிறது...

தேன் துளிகள் சில :

●● மெர்க்காரா, தலகோணா - சுற்றுலாக் கட்டுரைகள்

●● ரேவதியின் வெளிநாட்டு அனுபவம்

●● எகிப்து - ஒரு நேரடி ரிப்போர்ட்

●● விடுமுறையை வீட்டிலேயே அனுபவிக்கச் சில புதிய விளையாட்டுகள் மற்றும் மறக்கப்பட்ட விளையாட்டுகள்

●● ஒரு கோடி செலவில் ஓர் உல்லாச ரயில்.....

★

பெனிட்டோ குமார் எழுதிப் பரிசுபெற்ற

நரகமான நகரம்

தொடர்கதை ஆரம்பம்!



அதே விலையில் 112 பக்கங்கள்! ஏராள வண்ணங்கள்!

தமிழக பா.ஜ.க.: புகையும் பகை!

பிற கட்சிகளைப் போலல்லாமல் பாரதிய ஜனதா கட்சி, ஒரு கட்டுக்கோப்பான அமைப்பு என்றுதான் நம்மை நம்பச் சொல்கிறார்கள், அதன் தலைவர்கள். ஆனால் அதுவும் உரசிப் பார்த்தால் பித்தளையாகத்தான் இருக்கிறது!

தேசிய அளவிலாவது இந்த அதிகாரக் கைப்பற்றல் பூசலை ஒருவாறு புரிந்து கொள்ள முடிகிறது; ஆனால் தமிழகத்தில் பா.ஜ.க.வினர் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கும் வாய்ப்பு எந்த நூற்றாண்டில் வரப்போகிறதோ என்கிற நிலையில் இப்படியோர் பூசல் எதற்கு?


'எல்லாவற்றுக்கும், தமிழ்நாடு பா.ஜ.க.வின் பொதுச் செயலாளர் எல். கணேசன்தான் காரணம்' என்று சொல்லுகிறது, நமக்கு வந்த ஒரு பிட் நோட்டீஸ். நிறையவே சென்ஸார் செய்யப்பட வேண்டிய விகார வார்த்தைகள் கொண்ட அந்த நோட்டீஸ், தமிழக பா.ஜ.க.வில் உள்ள கோஷ்டிப் பூசலின் வெளிப்பாடு. கட்சி நடத்திய ரயில் நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொள்ளாவிடினும், கலந்து கொண்டதாகச் செய்தி வரவழைத்துக் கொண்ட கணேசனை ''ஓடிப் போன மாமா'' என்று இடித்துரைக்கிறது அந்த நோட்டீஸ்.

அதை அனுப்பியதாகக் குறிப்பிட்ட இருவரைத் தொடர்பு கொண்டபோது, தங்களுக்கும், அதற்கும் சம்பந்தமேயில்லை என்று அடித்துச் சொன்னாலும் கட்சிக்குள் புகை மூட்டம் இருப்பது புரிய வந்தது. மேலும் துருவிய போது, தென்மாநில பொறுப்பாளர் ஒருவர் சொன்னார்: ''தலைவர் சந்திர போஸ், ஒப்புக்குத்தான். சர்வாதிகாரத்தனமாகவும், ஜாதீரியாகவும் கட்சியை நடத்திக் கொண்டிருப்பவர் கணேசன். ஆர்.எஸ்.எஸ். இயக்கம்தான் கணேசனைக் கட்சிப் பணி செய்ய அனுப்பி வைத்திருக்கிறது. நிறையப்பேர் கட்சியில் சேர்ந்தாலும் இங்கே 'சங்க'த்தைச் சேர்ந்தவர்களுக்குத்தான் தனி மதிப்பு, மரியாதை. மற்றவர்கள் இளக்காரம்தான்.

''இவர்களுடைய அட்டகாசம் பொறுக்க முடியாமல் தென் சென்னை மாவட்டத் தலைவர் துரை ராஜினாமா செய்துவிட்டுப் போய் விட்டார். அ.இ.அ.தி.மு.கவுக்கு எதிராக மக்கள் மத்தியில் அதிருப்தி இருக்கிறது. ஆனால் எங்கள் கட்சியோ ஜெ.எட்டி உதைத்தாலும், அவர் காலில் விழத் தயாராக இருக்கிறது. ஆளும் கட்சியைக் கடுமையாக விமர்சிக்காததால் எங்கள் தோழர்கள் மிகவும் கொதித்துப் போய் இருக்கிறார்கள். சமீபத்தில் தாம்பரத்தில் ஆஞ்சநேயர் கோயில் இடிக்கப்பட்டதைப் பெரிய அளவில் எதிர்த்திருக்க வேண்டும். ஆனால் தனக்கு ரெண்டு கண் போனாலும் பரவாயில்லை; மற்றவனுக்கு ஒரு கண்ணாவது போனதே என்ற அற்ப சந்தோஷத்தில், மசூதியும் இடிக்கப்பட்டதைக் காரணம் காட்டி, தொண்டர்களின் போராட்ட உணர்வை மழுங்கடித்து விட்டது கட்சித் தலைமை...''

பல அதிருப்திக் குரல்கள் கணேசனுக்கு எதிராக ஒலித்தாலும் அவரது கடுமையான உழைப்புத்தான் பா.ஜ.க.வை தமிழகத்தில் வளர்த்திருக்கிறது என்று சொல்பவர்களும் உண்டு.

''சுருக்கமாகச் சொன்னால் தூங்கிக் கொண்டிருந்த கட்சியைத் தட்டியெழுப்பி நடைபோட வைத்தவர் அவர்தான்'' என்கிறார் அர்ஜுனன். இவர் தமிழக பா.ஜ.க.வின் தாழ்ந்தப்பட்டோர் பிரிவுத் தலைவர். ''கடந்த



வருடம் நடந்த கட்சித் தேர்தலில், தோல்வியடைந்தவர்கள் பொருமிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் கட்சி என்ன செய்யும்? கணேசன்தான் என்ன செய்ய முடியும்? இன்றைக்குத் தமிழகத்தில் 31 மாவட்டங்களிலும் (கட்சி ரீதியான மாவட்டங்கள்) தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருக்கிறார்கள். ஏராளமானோர் தினமும் கட்சியில் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள். பணத்துக்குக் கணக்குக் கொடுப்பதில் தொடங்கி, எல்லா விஷயங்களிலும் ஒழுக்கம், நேர்மையை எதிர்பார்க்கிறார் கணேசன்.. அதைக் கடைப்பிடிக்க முடியாதவர்கள்தான் குதிக்கிறார்கள்.

'ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கம் பற்றி பேசப்படுகிறதே?' என்றால், அர்ஜுனன் தயாரான பதில் வைத்திருக்கிறார்: ''அதற்கென்ன செய்ய, இந்துத்துவம், தேசியம் இரண்டிலும் நம்பிக்கை கொண்டவர்கள் எங்கள் சங்கக் குடும் பத்தில்தான் இருப்பார்கள்!''

– ப்ரியன்



அவசர அதிவேக


✱ பார்த்தாலே பசியைக் கிளப்பும் தினுசுகள்

ஏழைக்கு 'பன்'; ஜுரத்துக்கு மட்டுமே 'பிரெட்' என்ற அந்தக் கால உணவுக் கோட்பாடுகள் உடைபட்டுக் கொண்டு வருகின்றன. இட்லி, தோசை போன்ற காலை டிபன்களை இன்று பிரெட் வெற்றிகரமாக வாபஸ் வாங்க வைத்திருப்பது நிஜம்! ''இதற்கு முக்கிய காரணம், அதன் சௌகரியம்தான்'' என்று கோரஸாகச் சொல்கிறார்கள் சவிதா தாவேயும், பிரபா கருணாகரனும்.


''வேலைக்குப் போகும் பெண்களுக்கு இதுவோர் வரப்பிரசாதம். கொத்துமல்லிச் சட்னியிலிருந்து, கொத்துக்கறி மசாலா வரை எதை வேண்டுமானாலும் நடுவில் வைத்து ஸாண்ட்விச் தயாரித்துச் சாப்பிடலாம். தவிர, நேரம் இருந்தால் ரொட்டியைப் பயன்படுத்தி எத்தனையோ விதமான புதிய புதிய ருசிகரமான உணவு வகைகளைப் படைக்கலாம். தெருவுக்குத் தெரு எல்லாக் கடைகளிலும் ரொட்டி எளிதாகக் கிடைப்பது மற்றொரு வசதி!''

இன்று அனைத்து டைனிங் டேபிள்களிலும் இடம் பெற்றிருக்கும் இந்த ரொட்டியை நமக்கு அறிமுகம் செய்தவர்கள் ஆங்கிலேயர். ஆயிரம் விளக்கில் 1903ல் துவக்கப்பட்டு, இன்று கிளை கிளையாய்த் தழைத்திருக்கும் மெக்ரென்னெட்டின் நிர்வாக இயக்குநர் செல்வராஜன் சொல்கிறார்: ''ஒருவர் சாப்பிடும் ரொட்டியை வைத்தே அவர் எந்த நாட்டவர் என்று கண்டு பிடித்துவிடலாம். தனக்கென்று தனியொரு சுவை இல்லாமல், சீஸ், பட்டர் இப்படி எதனுடன் சேருகிறதோ அதே சுவை

✱ பாக்கிங்கிலும் படு சுத்தம்....



யுகத்தின் உணவு!



● முற்றிலும் நவீனமான, கைபடாத தயாரிப்பு...

யைக் காட்டும் ரொட்டி என்றால் பிரிட்டிஷ்காரர்கள்; வெளியே மொறுமொறுவென்றும் உள்ளே மிருதுவாகவும் இருக்கும் ரொட்டி ஃபிரெஞ்சு லோஃப்; பால், சர்க்கரை எல்லாம் அதிக விகிதத்தில் கலந்த ரிச் பிரெட் மீது அமெரிக்கர்களுக்குக் காதல்; ஜெர்மானியர், ரஷியர் ஆகியோரின் விருப்பம் ரை பிரெட் என்று அழைக்கப்படும் டார்க் பிரெட். டேனிஷ் வகைகளில் முட்டை, எண்ணெய், சர்க்கரை எல்லாமே தூக்கலாக இருக்கும்!''

இது மாதிரி எல்லா நாட்டவர்களின் விருப்பத்துக்கும் ஏற்பத் தன்னை விதம் விதமாக மாற்றிக் கொள்ளும் ரொட்டியின் பல்வேறு ரூபங்களை 'ஹாட் பிரெட்'டில் (அட்டைப் படம்) காணலாம்.

பூண்டு வாசனையைப் பூசிக் கொண்ட கார்லிக் பிரெட், மசாலா, வெஜிடபிள் என்று எல்லாக் கலவைத் திணிப்புகளையும் தாங்கிய பன்கள் இங்கு உண்டு. தவிர, அசைவப் பிரியர்களுக்கு ஏற்ற வகைகள். வெண்ணெய், சீஸ் ஊடுருவிய ரோல்கள், முழு நீளத்திற்கு உருட்டப்பட்ட ஃபிரெஞ்சு லோஃப், ஐம்பதுக்கு ஐம்பது விகிதத்தில் மைதாவும் கோதுமையும் சேர்த்துச் செய்யப்பட்ட பிரௌன் பிரெட், உலர்ந்த பழ வகைகளை உள்ளடக்கிய ரெய்சின் பிரெட் என, ரொட்டியின் பலவித அவதாரங்கள்.

மாவைப் பிசைவதில் இருந்து, வார்ப்புகளில் அடைத்து, ஒரு தட்டுக்கு முப்பது வீதம் நான்கு தட்டுகளில் ரொட்டிகளை 'பேக்' செய்வது வரை எல்லாம் கைபடாமல் நடக்கிறது. இதற்கான இராட்சத 'அவன்' (oven) உட்பட அனைத்தையும் கண்ணாடிச் சுவர் வழியே யாரும் பார்க்க முடிவது ஹாட் பிரெட்டின் ஸ்பெஷாலிட்டி.



● அம்மாவின் உதவியுடன் பிடித்ததைத் தேர்ந்தெடுத்த குழந்தை...

''குரோயிசான்ட்ஸ் எனப்படும் பிரெஞ்சு வகைக்கு மட்டும் வடிவம் கொடுப்பது என் கைகள்தான். அங்கே மிஷினின் ஜம்பம் சாயாது'' என்று பெருமை

யுடன் சொல்கிறார் இங்கு பணிபுரியும் சமையல்கலை வல்லுநர் சுந்தர். பெரிய கடல் சிப்பி வடிவில் இளம் பழுப்பு நிறத்தில் பளபளவென்று இருக்கும் இதனைப் பார்த்தாலே நாவில் நீர் ஊறுகிறது! சுவையோ அபாரம்.

நீரிழிவு நோயாளிகளுக்கான கோதுமை ரொட்டி 'கேக்ஸ் அன்டு பேக்'கில் மிகப் பிரபலம். ஒரு நாளில் தயாராகும் அத்தனை ரொட்டிகளும் கடைக்கு வந்தவுடனேயே பறந்து விடுகின்றன. "பெயர் அப்படியிருந்தாலும் கோதுமை மட்டுமே வைத்து ரொட்டி செய்ய முடியாது. மைதாவின் எண்ணெய்ப்பசை இல்லாவிட்டால் மாவு உடைந்து விடும். கோதுமை ரொட்டியில் 75 சதம்தான் கோதுமை. தயாரிக்கும் நேரமும் கூடுதலாகும்" என்று விளக்கம் கிடைக்கிறது.

"ஹாட் பிரெட்'டின் ஒருநாள் வியாபாரம் ரூ. 20,000 த்திலிருந்து 25,000 வரை. இது சாதாரண ரொட்டிக் கடைகளைப் பாதித்திருக்கிறதா?"

"இல்லை!" என்று மறுக்கிறார் 'பான் பேக்கர்'சின் உரிமையாளர் ரகுநாத ரெட்டி. "12 வருடங்களுக்கு முன்னால் ரூ.60,000 மூலதனத்தோடு நான் துவங்கிய ரொட்டி வியாபாரம், இன்னும் வளர்வான முறையில் வளர்ந்து கொண்டுதானிருக்கிறது. அன்று நான் மட்டும் இருந்த இடத்தில் இன்று பத்துப் போட்டியாளர்கள். அதனால் பாதிப்பு இல்லை. மார்க்கெட் விரிவடைந்து கொண்டே போவதால் இன்னும் கூடப் பலருக்குப் போட்டிபோட இடமிருக்கிறது!"

ரொட்டிக்கு உள்ள முக்கியத்துவத்தையும் அதிகரித்துவரும் தேவையையும் உணர்ந்து, வருடா வருடம் தமிழ்நாடு பேக்கர்ஸ் ஃபெடரேஷன், ஓர் அமெரிக்க நிறுவனத்துடன் இணைந்து இரு வாரப் பயிற்சி முகாம் நடத்துகிறது. இதற்கு அமோக வரவேற்பு.

"என்றாலும் உறுத்தும் விஷயம் ஒன்று உண்டு!" என்கிறார் ஃபெடரேஷன் தலைவர் செல்வராஜன். பிரிட்டிஷ் காலத்தில் ரொட்டி தயாரிக்கும் தொழிலை 'அபாயகரமான, தீங்கு விளைவிக்கும் தொழில் வியாபாரம்' என்பதாகச் சட்டப்படி குறித்திருந்தார்கள். காரணம் இயந்திரங்கள் தோன்றாத அந்தக் காலத்தில் ரொட்டி மாவைக் கையால்தான் பிசைந்தார்கள். சில சமயம் அழுத்தப் பிசைய கைகளுக்குப்பதில் கால்கள் பயன்பட்டன. இப்போது கூடச் சில இடங்களில் இந்த எரிமிதிக்கும் பழக்கம் நீடிப்பதாகக் காற்று வாக்கில் செய்திகள் வருகின்றன. ஆனால் "முற்றிலும் நவீனமயமாக்கப்பட்டுவிட்ட கைபடாத எங்கள் தயாரிப்புகளையும் அவற்றுடன் சேர்த்து, அபாயகரமான தீங்கு விளைவிக்கும் பிரிவில் சேர்க்கலாமா? இந்தச் சட்டத்தை தேவையானபடி திருத்தி அமைக்கக் கூடாதா? இது தான் இன்றைய நவீன பேக்கரி உரிமையாளர்களின் காரமான கேள்வி.

– நிர்மலா சக்கரவர்த்தி


அட்டையில்:
ஸ்ரீவித்யா காமேஸ்வரன்,
கலா காமேஸ்வரன்


அட்டை வண்ணப்படமும் படங்களும்:
கோபிநாத்

"உன் கணவர் ரொம்பப் பெரிய சிரிப்பு எழுத்தாளர்தான்னு ரொம்ப நாளைக்குப் பிறகு புரிஞ்சுக்கிட்டயா, எப்படி?"

"அவருடைய சிரிப்பைப் படிச்சிட்டு ஒரு வெளியூர் வாசகர் நேரடியாகவே வந்து திட்டிட்டுப் போனாரே, அதை வைச்சுத் தான்!"

- சுபா சிவம்





"என்னடி உங்கம்மா சாதம் பிசைஞ்ச கையில சோறு தராங்க, எல்லாருக்கும்...!"

"தண்ணி கஷ்டத்துல தனித்தனியா தட்டை அலம்பிட்டிருக்க முடியுமா...? அதான் இப்படி...!"

- ஆர். உமா

Kalki Shopping Page

Kalki Shopping Page

வர்ணம் ஆர்ட் ஸ்கூல்



தபால் மூலம் ஓவியக்கலை

உங்கள் ஓய்வு நேரத்தில் வீட்டிலிருந்தவாறே
நீங்கள் ஓவியம் கற்கலாம்.
ஏராளமான விளக்கப் படங்களுடன்
எளிய முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.
விவரங்களுக்கு 2 ரூபாய் தபால்தலை
கவரினுள் வைத்து அனுப்பவும்.

வர்ணம் ஆர்ட் ஸ்கூல்

115, பாரக்கா ரோடு, வரதாம்பாள் தோட்டம்,
சென்னை-600 010

B. M. SILK SAREES

B. M. சில்க் சாரீஸ்
காஞ்சிபுரம்
பட்டுசேலை
தயாரிப்பாளர் :

5, வடக்கு மாட வீதி,
மைலாப்பூர்,
சென்னை - 600 004.
Phone : 4940291

Avail Fabulous Discount
on Cotton Sarees
upto 10.4.94

குறிப்பு : அனைத்து
பட்டு சேலைகளும்
தறி விலைக்கே கிடைக்கும்.

Sri Ramajayam

BEST WISHES FOR TAMIL NEW YEARS DAY TO OUR REGULAR CUSTOMERS

MAHENDRA JEWELLERS

AIR CONDITIONED SHOW ROOM

APPROVED BY GOVT. 22 CT. GOLD JEWELS

PRESENTS OUR SEASON'S GREETINGS AND WISHES FOR A VERY PROSPERO!'S YEAR.

THREE ATTRACTIVE OFFERS on this occasion


NO
- Making Charges
- Wastages
- Stone Coral & Pearl Cost.

Also for 22 ct. Cadmium Soldered Chains & Bangles & Rings
ORDERS ACCEPTED UNDER THE ABOVE SCHEME

OFFER VALID FROM :
10th APRIL 1994 TO 20th APRIL 94

No. 59, USMAN ROAD, T.NAGAR, (Near Panagal Park)
Madras - 600 017. Phone : 446572
(MJ GOLD IS CASH IN HAND)

Kalki Shopping Page



நீதான் புலியைக் கண்டுக்காம இருந்து இடம் கொடுத்துக் கெடுத்தே... ரொம்ப மோசம்!
நீங்கதான் அது காதோட ரகசியம் பேசி, ஒப்பந்தம் பண்ணிக்கிட்டு-ருக்கீங்க... பச்சைத் துரோகம்!
டேய், அரிக்கேன் விளக்கு, பென்சில், ரப்பர், பேனா, மை, நோட்டு, பாடப் புஸ்தகம் எல்லாத்துக்கும் வரி போட்டிருக்-காங்க... நல்லாப் படிச்சுத் தொலை!
பருப்பு, பயறு, மாவு, உமி, நொய், தீப்பெட்டி, கெரசின் ஸ்டவ்வு, விறகுக்குக் கூடத்தான் வரி போட்டிருக்காரு... நல்லாச் சாப்பிட்டுத் தொலையன்னா சொல்கிறே?...
பண்ருட்டி உள்ள வரவே முடியாது... பாண்டியனை வளைச்சுப் போட்டாச்சு... அந்த ... களுக்கு நோட்டீஸ் குடுத்திடலாம்... காங்கிரஸ் காரங்க மன்னிப்புக் கேட்டாத்தான் வாய் திறக்கவே முடியும்.... ரெண்டு தி.மு.க.வும் ஆளுக்கு ஒரு திசை... திருநாவுக்-கரசையும் ஒரு வழி பண்ணிட்டா....
சேடப்பட்டி
ஆமாமாம்... இங்கே ஒண்ணும் குறைச்சல் இல்லே! சென்னா ரெட்டிக்கிட்ட உன் ஜம்பம் பலிக்காதேய்யா, என்ன ப்ரயோஜனம்?...



கல்கி



1994
ஏப்ரல் 10
மலர்: 52
இதழ்: 37
ஸ்ரீமுக
பங்குனி 28

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்

முதல்வரின் மோதல் அரசியல்!

முதல்வர், மத்திய அரசுடன் நடத்தும் மோதல் அரசியல், நிச்சயமாக அவருக்கு நல்லதல்ல. ஏதேனும் ஒரு விதத்தில் மத்திய அரசின் எரிச்சலைக் கிளப்ப வேண்டும் என்பதற்காகவே பேசுவதுபோலிருக்கிறது. அல்லது தமது பதவி நாட்கள் எண்ணப்படுவதாக அவரே ஒரு முடிவுக்கு வந்து, ஒரு விரக்தியில் ஏற்பட்ட பதற்றத்தினால் நிதானமிழந்து பேசுவதாக இருக்க வேண்டும். சமீபத்திய விடுதலைப்புலிகள் விவகாரம் அந்தகைய ஒன்று.

ஏதோ ஒரு பத்திரிகையில், பிரதமர் மேல்நாடு சென்றபோது அவருக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து நேராதிருக்க, புலிகளுடன் மத்திய அரசின் உளவுத் துறை(ரா)ஒரு ரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டதாகச் செய்தி வந்துள்ளதாம். 'பிரதமருக்கு ஆபத்து நேராது என்று புலிகள் உறுதி கூறினால், அவர்கள் மீது இங்கு உள்ள தடை நீக்கப்படும்' என்பதுதான் ஒப்பந்தமாம்.

இந்த அபத்தமான செய்தியைப் பிடித்துக் கொண்டு, சட்டசபையில் காங்கிரஸை 'தேசபக்தியற்றது' என்று அமைச்சர் கண்ணப்பன் ஏசியதுடன் 'ராஜீவின் ஆன்மாகூட உங்களை மன்னிக்காது' என்று திட்டியும் தீர்த்தார். இதைத் தொடர்ந்து முதல்வரும் 'உளவுத் துறைக்கும் புலிகளுக்கும் தொடர்பு உண்டு' என்று உறுதிப்படுத்திப் பேசியிருக்கிறார்.

பத்திரிகைச் செய்திகளுக்காக அடுக்கடுக்காக அவதூறு வழக்குகளைப் போடும் இயல்புடைய முதல்வர், இந்தப் பத்திரிகைச் செய்தியை மட்டும் அப்படியே நம்பியது ஆச்சர்யம். அதை விட வியப்பு, இந்தச் செய்தியில் உண்மை இல்லை என்று மத்திய அரசு மறுத்த பிறகும் அதை நம்பி, அந்த அடிப்படையில் பேசி, வெளியேற்றம் செய்த காங்கிரஸ் உறுப்பினர்களைப் 'பயந்து ஓடுகிறார்கள்' என்று ஏசியதாகும். இது முதல்வரின் தகுதிக்கு அழகல்ல என்பதுடன் தரக் குறைவான செயலும் கூட.

'விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்தில் அதிகரித்து வருகிறது' என்ற காங்கிரஸின் குற்றச் சாட்டுக்குப் பதிலளிக்க முடியாத ஜெ., மூழ்கிக் கொண்டிருக்கும் நபர் கரையோரப் புல்லையும் பற்றுவது போல, இந்தப் பத்திரிகைச் செய்தியைப் பிடித்துக் கொண்டார்.

'அந்தச் செய்தி மறுக்கப்பட்டுள்ளதே' என்றால், 'நான் கூடத்தான் புலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்ற பத்திரிகைச் செய்தியை மறுத்திருக்கிறேன்' என்கிறார் ஜெ. இந்த வாதத்தின் மூலம் என்ன நிரூபிக்க முயற்சி செய்கிறார் என்பது அவருக்கே புரிந்தால் சரி. அவர் கருத்துப்படி மத்திய அரசின் மறுப்பில் சாரம் இல்லை எனில், இவரது மறுப்பிலும் அர்த்தமில்லை என்றாகிறது. ஆகக் கூடி புலிகள் நடமாட்டம் பெருகுவதை அவரே ஒப்புக் கொண்டவராகிறார்!

இன்னொன்று 'டங்கல் திட்டத்துக்கு எதிராகத் தமிழக அரசு நீதிமன்றம் போகும்' என்றார் ஜெயலலிதா. ஆனால் நிதி அமைச்சர் நெடுஞ் செழியனோ, மற்றொரு அமைச்சர் சத்தியமூர்த்தி, டங்கல் திட்டத்தையும் அத்துடன் சேர்த்துப் பிரதமரையும் தாக்கும் போது இடை புகுந்து, 'டங்கல் திட்டம் அப்படியொன்றும் மோசமானதல்ல; அதை முழுக்க எதிர்க்கவோ ஆதரிக்கவோ முடியாது; சில விளக்கங்கள் கோரித்தான், அரசு நீதிமன்றம் செல்ல உத்தேசித்துள்ளது' என்கிறார். பிரதமரையும் தாங்கிப் பேசுகிறார்.

ஆக, அமைச்சர்களிடையிலேயே ஒரு கருத்துப் பரிமாற்றம் இல்லை; கொள்கைத் தெளிவு இல்லை; ஒருவருக்கொருவர் தொடர்பில்லாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றாகிறது. முதல்வர் ஏதோ ஒன்றைக் கூறி விட்டால், அமைச்சர்கள் அதைப் பத்தாக்கிப் பேசுகிறார்கள்; இருபதாக்கி ஏசுகிறார்கள்.

இவையெல்லாம் தமிழக அமைச்சரவை கலகலத்துப் போயிருப்பதையே உணர்த்துகின்றன. "கோபத்தில் குழப்பம் ஏற்படுகிறது; அது புத்தி நாசத்தில் கொண்டு விடுகிறது" என்கிறது கீதை.



அஸ்வினி திரைப்படம் பார்த்தோம். கீழ்மட்டத்திலிருந்து ஒவ்வொரு கட்டமாக சிரமப்பட்டு உயர்ந்து, ஓட்டத்தில் சர்வதேச முத்திரை

அறுபது மெடல்கள் ஆசியா மெடல்

பதிக்கும் பெண்ணின் கதை. ஆனால் வாழ்க்கை என்பது சினிமா மாதிரி அத்தனை சுலபமாகவா இருக்கிறது?


சோலைமதி.

இப்படி ஓர் அழகான பெயரைத் தேர்ந்தெடுத்துத் தன் மகளுக்கு வைத்தபோது, கண்ணன் என்ன நினைத்தாரோ நமக்குத் தெரியாது. பிற்காலத்தில் அவள் தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் கொண்ட புலவராக விளங்குவாள் என்று எண்ணியிருக்கலாம். ஏன் ஒரு சினிமா நட்சத்திரமாகப் பிரகாசிப்பாள் என்று கூட நினைத்திருக்கலாம். ஆனால் ஓட்டப்பந்தய வீராங்கனையாக மாறுவாள் என்று எதிர்பார்த்திருக்கவே மாட்டார். ஆனால் அதுதான் நடந்தது!

மதுரை மாவட்டம் மேலூரை ஒட்டியுள்ள சின்னக் கிராமம் கருத்தப்புளியன்பட்டி. வசதியில்லாத குடும்பத்தில் பிறந்திருந்தாலும் சோலைமதிக்குச் சிறுவயதிலிருந்தே விளையாட்டில் ஆர்வம். மேலூரிலுள்ள தமிழரசி நடுநிலைப் பள்ளியில் படிக்கும்போதே - லாங் ஜம்ப், ஹை ஜம்ப், ஷாட்-புட் ...இம்மாதிரி விளையாட்டுகளில் ஈடுபடும் போதே ஒரு சுறுசுறுப்பை உணர்ந்திருக்கிறார் இங்குள்ள விளையாட்டுப் பயிற்சி ஆசிரியரான பாண்டியன். இவர் உற்சாகப்படுத்த, மாவட்ட அளவிலான விளையாட்டுகளில் சோலைமதி முதலாவதாக வரமுடிந்தது; ஓடுவதில் கூடுதலாகப் பயிற்சி பெற முடிந்தது.

எட்டாவது வகுப்பிற்குப் பிறகு-மதுரையிலுள்ள ஓ.சி.பி.எம். பள்ளியில் சேர்ந்ததும் - 'ஸ்போர்ட்ஸ்' ஹாஸ்டலில் இடம் கிடைத்திருக்கிறது. பேட்ரிக் என்பவர் ''கோச்.'' அவர் தனி அக்கறையுடன் காலையும் மாலையும் சோலைமதிக்குப் பயிற்சி கொடுக்க, சாதனைகளும் தொடர ஆரம்பித்திருக்கின்றன.

மாநில அளவிலான நானூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் முதலிடம்; தென் பிராந்திய அளவிலான நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் 12.4 வினாடிகளில் ஓடி வந்து நிகழ்த்திய ரெகார்ட் பிரேக்; அண்மையில் நேரு ஸ்டேடியத்தில் நடந்த நானூறு மீட்டர் தொடர் ஓட்டத்தில் இரண்டாவது இடம்; ஹைதராபாத்தில் நடந்த தேசிய மகளிர் போட்டியில் நானூறு மீட்டரில் முதலிடம்; இருநூறு மீட்டர் பந்தயத்தில் 24.2 வினாடிகளில் ஓடி ஒரு புதிய சாதனை... இப்படி அடுக்கடுக்காகச் சாதனைகளைத் தொடர்ந்து கொண்டேயிருப்பவர்தான் சோலைமதி!



* பெற்றோர், தம்பி, தங்கையுடன்.



* ஹைதராபாத்தில் நடந்த போட்டி

கிடைத்தது; அடுத்தது!



* சோலைமதி

காலையில், தான் படிக்கிற (மதுரையிலுள்ள ஓ.சி.பி.எம்.மேல் நிலைப் பள்ளி) பள்ளியிலேயே முதலில் 'வார்ம்-அப்' பண்ணி, சில உடற்பயிற்சிகள். தொடர்ந்து ஓடுவதற்கான விதவிதமான பயிற்சிகள். திரும்பவும் மாலையில் பயிற்சி. பள்ளியில், தலைமையாசிரியையிலிருந்து ஆசிரியைகள் வரை உற்சாகம் கொடுத்திருக்கிறார்கள். சர்வதேசத் தடகளப் போட்டியில் கலந்து கொண்டு பரிசுடன் சோலைமதி திரும்பியதும் - பள்ளியில் பலரும் சேர்ந்து ஒரு மோதிரம் வழங்கியிருக்கிறார்கள்.

''எங்கள் பள்ளி மாணவி இந்த அளவு சாதனை புரிந்திருப்பது பெருமையாக இருக்கிறது. இருந்தாலும்- 9வது படிக்கும் சோலைமதிக்கு விளையாட்டுப் பயிற்சியினால் படிப்பு பாதிக்கப்பட்டு விடுகிறது. இதனால் சிறப்புக் கவனமும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் விளையாட்டில் ஆர்வமாக இருக்கிற மாணவ, மாணவியர்களுக்குத் தனி ஹாஸ்டல் இருப்பது மாதிரி, தனியான கல்வித் திட்டம், தனியான பள்ளியும் இருந்தால் நல்லது'' என்கிறார் சோலைமதி படிக்கும் பள்ளியின் தலைமையாசிரியையான திருமதி. கிறிஸ்டினா தேவபுத்திரா.

சோலைமதியின் தந்தை கண்ணன், மேலூரிலுள்ள கோ-ஆபரேடிவ் ஸ்பின்னிங் மில்லில் கூலித் தொழிலாளி. ''வசதியில்லாத குடும்பம்ங்க இது. ஆண்டவன் புண்ணியத்திலே 'பாப்பா' நல்லா ஓடுது. பாப்பாவுக்குக் காலிலே போடுற ஆணி பதித்த 'ஷு'வான ஸ்டைஸ், நல்ல டிராக் ஸூட் சாதாரண ஷு எல்லாம் வாங்கக் கூட எங்களுக்கு வசதியில்லை. பாப்பா எங்கே விளையாடப் போனாலும் நான் தான் கூடவே போகணும். இதனாலே மில்லிலே சம்பளம் 'கட்' ஆகிவிடும்!'' என்கிறார் ஒடிசலான தோற்றத்துடனிருக்கிற கண்ணன்.

சென்னை நேரு ஸ்டேடியத்தில் சோலை

மதி ஓடின போது, அருகிலிருந்து கவனித்திருக்கிறார் பி.டி.உஷாவின் பயிற்சியாளரான நம்பியார். வியப்புடன், ''நன்றாகப் பயிற்சி கொடுங்கள். சமயங்களில் கூடுதலாகப் பயிற்சி பெறும்போது மூக்கிலிருந்து ரத்தம் கூட வரலாம். இருந்தாலும் பயிற்சியை நிறுத்தி விடக் கூடாது. ஓட்டத்தில் இந்தப் பொண்ணுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது'' என்றிருக்கிறார் சோலைமதியின் தகப்பனாரான கண்ணனிடம். கேரளாவிலிருந்து கலந்து கொண்ட சைனி வில்சனும் சோலைமதியைக் கூப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார்.


இந்தப் பாராட்டெல்லாம் ஒருபுறமிருந்தாலும், ஓட்டப் பந்தயங்களில் கலந்து கொள்கிற பெண்ணுக்குத் திடகாத்திரமான உணவு; இதர வசதிகள்; பயணத்துக்கான சௌகர்யங்களெல்லாம் பிற மாநிலத்தவர்களுக்கு இயல்பான ஒன்றாக இருக்கையில் - சோலைமதி போன்றவர்களுக்கு?...

''சோலைமதி எங்களுக்கு முதல் குழந்தை. இவளையடுத்து ஒரு தம்பியும், தங்கச்சியும். எங்க குடும்ப வருமானத்திலே - சோலைமதிக்கு அதிகப்படியான உணவை வாங்கிக் கொடுக்க முடியாது. வசதியில்லீங்களே! என்ன பண்றது? எப்படியோ சமாளிக்கிறோம். நல்ல உதவியும், நல்ல ஆகாரமும் இருந்தால் இதைவிட சோலைமதி நல்லபடியாக வர முடியும்'' என்று முழுக்கக் கிராமியமான வார்த்தைகளில் சொல்கிறார் சோலைமதியின் தாயாரான செல்லம்மாள். இவ்வளவு சிரமப்பட்ட நிலையிலும், சொந்தக்காரர்கள் அதைரியப்படுத்தினாலும் - தங்களுடைய பெண்ணிடமிருக்கிற திறமைக்கு இவர்கள் கொடுக்கும் மதிப்பு அலாதியானது.

தேசிய அளவில் எட்டு மெடல்கள், சர்வதேச அளவில் ஒரு மெடல், மாநில அளவில், மாவட்ட அளவில்.. என்று மொத்தமாக அறுபது மெடல்கள். ஆனால் இந்தச் சாதனைகள் குறித்த எந்த விதமான கர்வமும் சோலைமதியின் முகத்தில் தெரியவில்லை. எளிமையான கிராமத்து முகம். ''1995ல் ஆசியன் கேம்ஸில் கலந்து கொண்டு முதலிடத்துக்கு வருவேன்'' என்கிறார், நம்பிக்கையுடன்.

சோலைமதியின் திறமையைப் பராமரிப்பதில் யாராவது அக்கறை எடுத்துக் கொண்டால் - பி.டி.உஷா மாதிரி தமிழ் நாட்டின் கிராமப்புறத்திலிருந்தும் விளையாட்டுத் துறையில் உலகளவில் பிரகாசிக்க முடியும் என்பதை நிரூபித்து விடலாம்.

- அகிலா நியூஸ்





★ விழாவின் போது....

டி.கே.பி.-75

'பாடும் பட்டம்மாள்' என்றும் 'பட்டங்களைக் குவித்த பட்டம்மாள்' என்றும் 'பட்டுக்குரல் பட்டம்மாள்' என்றும் பல விதமாக டி.கே.பி. வர்ணிக்கப்பட்டதுண்டு. 'பல்லவிக்கு ஒரு பட்டம்மா' என்பது அனைத்திலும் முக்கியமானது.

சிறுமி பட்டம்மா, தகப்பனாருடன் சென்னைக்கு வந்து, இசையில் டெக்னிகல் பரீட்சை கொடுக்க முற்பட்ட காலத்தில், பெண்கள் கச்சேரி செய்வது என்பதே அபூர்வமான விஷயம். தப்பித் தவறி பாட்டு சொல்லிக் கொண்டால் அது, நவராத்திரி சமயத்தில் அல்லது பெண் பார்க்க வருகிறவர் முன் பாடத்தான் பயன்பட்டது. இந்தச் சூழ்நிலையிலும் பட்டம்மாள் மேடை ஏறி பிரகாசிக்க ஆரம்பித்தார் என்றால் அதற்கு அவரது ஆற்றலும், இசை ஆர்வமும், கடும் உழைப்பும் ஒரு காரணம். அவருக்கு அமைந்த சூழ்நிலை இன்னொரு காரணம்.

பொது பரீட்சையில் பட்டம்மாளுக்கு மார்க் போட வேண்டியவர் பரவசப்பட்டுப் போனது மட்டுமல்ல; இத்தனை நன்றாகப் பாடும் இவரது கலையை இன்னும் விருத்தி செய்ய வேண்டும் என்று தீர்மானித்து, அவள் தகப்பனாரை அழைத்து அறிவுரைகள் வழங்கினார். விளைவு, பட்டம்மாள் அடுத்தடுத்துப் பல இசை மேதைகளிடம் பயிலும் வாய்ப்புப் பெற்றார்.

பட்டம்மாளின் கச்சேரிகளை ரசித்த பல்லாயிரக் கணக்கானோரில் அமரர் கல்கி ஒருவராக அமைந்தது பட்டம்மாளுக்கு மற்றொரு அனுகூலம். கல்கியின் விமர்சனங்களும் அதற்கு மாலியின் கார்ட்டூன் சித்திரங்களும் சேர்ந்து பட்டம்மாளின் புகழ் பரப்பின.

தீட்சிதர் கிருதிகளை ஆழ்ந்து உணர்ந்து பிரபலப்படுத்துவதைத் தமது நோக்கமாகக் கொண்ட உச்ச நீதிமன்ற நீதிபதி டி.எல். வெங்கடராம அய்யர் அவர்களிடம் பாடம் கேட்க நேர்ந்ததும் பட்டம்மாளின் பாக்கியம்தான்.

இவற்றோடு சேர்ந்த இன்னொரு முக்கியமான அம்சம், அந்நாளைய தேசப் பற்றும் சுதந்திர ஆர்வமும். காங்கிரஸ் கூட்டங்களில் பட்டம்மாளின் குரல் ஒலித்தது. அவரது தேசிய கீதங்கள் தியாக பூமி திரைப்படத்தில் இடம் பெற்று இதயங்களைக் கொள்ளை கொண்டன. பின்னால் ஏ.வி.எம். எடுத்த நாம் இருவர் போன்ற படங்களில் பாரதி பாடல்கள் பட்டம்மாளின் குரலில் லட்சக் கணக்கானோரைக் கவர்ந்தன. மேடைப் புகழ், சினிமாவிலும் குரல் ஒலிக்க உதவியது என்றால், சினிமா புகழ் மேடைப் புகழை நிரந்தரமாக்கியது.

சங்கீத கலாநிதி உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்று வளர்ந்த பட்டம்மாளின் இசை தனிப்பாணி கொண்டது. அது 'டி.கே.பி. பாணி' என்றே பெயர் பெற்றது. அது புது வெள்ளம் போல் பொங்கிப் பிரவகிப்பது அல்ல. கரைகளைத் தொட்டுக் கொண்டு காவேரி அழகுடன் அமைதியாகப் பாயும் நதி போன்றது. ராகத்தையோ தாளத்தையோ ஒளித்துக் கொண்டு, 'என்ன, கண்டுபிடி பார்க்கலாம்!' என்று புதிர் போடும் பழக்கம் அவருக்கு இல்லை. ராக லட்சணமும் கீர்த்தனையின் அர்த்தபாவமும் நன்கு வெளிபட தெளிவான உச்சரிப்புடன் நிதானமாகப் பாடுவார். அவரது லயஞானம் அபாரமானது. பெண்கள் பல்லவி பாடவே அஞ்சிய காலகட்டத்தில் புதுப்பாதை வகுத்துப் பெரு வெற்றி பெற்றவர் பட்டம்மாள்.

அடக்கம் மிக்க அவருக்குப் பக்க வாத்தியம் வாசித்தவர்கள் பாக்கியசாலிகள். அவர்களை உற்சாகப்படுத்துவது மட்டுமல்ல; அவர்கள் திருத்தமாக உருவாகவும் உதவினார். பட்டம்மாள் பாணிக்கு வாரிசுகளாக இன்று பலர் புகழ் ஏணியில் அடியெடுத்து வைத்திருப்பது பட்டம்மாளின் சேவைகளில் சிகரமானது.

இவ்வாறெல்லாம் ஒரு பெண்மணி பல சிறப்புக்களையும் பெற வேண்டுமானால் கணவரின் ஒத்துழைப்பு இருந்தால்தான் முடியும். கல்யாணத்துக்குப் பிறகு கலை, பரணில் உறங்கப் போனால் நஷ்டம் கலைஞருக்கு மட்டுமல்ல; கலை உலகுக்கும் கூட. ஈசுவரனோ பட்டம்மாளைக் கைப்பிடித்த பிறகு தாம் பார்த்து வந்த உயர்ந்த உத்தியோகத்தைக் கூட மனைவியின் முன்னேற்றத்துக்காகத் தியாகம் செய்ய முன் வந்தார்.

இந்த ஆதர்ச தம்பதி 75-80 வயது கண்டதைக் கொண்டாட டி.டி. வாசு தலைமையில் ஒரு குழு அமைந்தது. பொன் விழா காலமாக அகாடமியில் சன்மானம் பெறாமலேயே பாடி வரும் டி.கே.பிக்கு மியூசிக் அகாடமி அரங்கிலேயே விழா நடைபெற்றது ரொம்பப் பொருத்தம். 75-80 வயது கொண்டாடுகிறோம் என்பதாலோ என்னவோ மேடையில் பெரும்பாலோர் 70 க்கு மேற்பட்டவர்களாகவே இருந்தனர்; ஆர்.வி., டி.என்., ம.பொ.சி என்றிப்படி.... இவர்கள் பட்டம்மாளின் புகழ் பேச, கூடவே மற்றொரு நல்ல செய்தியும் காதில் விழுந்தது. அது, இந்த விழா நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, ஆனால் பின்னணியிலேயே இருந்து முனைப்புடன் செயலாற்றியவர்கள் விஜய் சிவா, ஸ்ரீராம் குமார் என்ற இளம் கலைஞர்கள்தாம் என்பது.

இளைய தலைமுறையினரின் இந்த நன்றியுணர்வும் பொறுப்புணர்வும் பட்டம்மாள் பாணி போலவே தனித் தன்மை பெற்றுப் பிரகாசிக்கிறது.

- குட்டி கிருஷ்ணன்.

படம் : கிருஷ்ணா போட்டோ ஸ்டுடியோ

●● எனது அன்னையின் நினைவாக நான் நடத்தி வரும் அன்னை நூலகத்துக்கு ஒரு இரும்பு பீரோ (6½') குறைந்த விலைக்குத் தரக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

-தெ.பா.சீதாராமன்,
AP 98, முதலாவது தெரு,
செக்டார் A,
அண்ணாநகர் மேற்கு
சென்னை - 600 101.



●● சாதாரண களிமண் மற்றும் சைனாகிளே ஆகியவற்றைப் பயன்படுத்தி, செராமிக் பண்டங்கள் தயாரிப்பதில் தொழில் நுட்ப ரீதியான ஆலோசனைகள் தர விருப்பம் இருந்தால் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். நசிந்து வரும் மட்பாண்டங்கள் கைவினைஞர்களுக்கு உதவுவ தாகும்.

- எஸ்.கண்ணன்,
12, பாரதி நகர், 3வது தெரு,
RMK நகர் பின்புறம் ,
வண்டலூர்,
சென்னை - 600 048.

பாலம்

●● ககன்யா பிரபாகர் என்பவரின் அற்புதமான இசை ஒலிபரப்பை, அகில இந்திய ரேடியோ தேசிய அலைவரிசையில் கேட்டு ரசித்தேன். அவர் முகவரி என்ன என்பதை அவரோ அல்லது அவரை அறிந்தவர்களோ எனக்குத் தெரியப்படுத்தினால் நன்றியுடையவனாவேன்.

-திருமதி எம்.எஸ்.நளினி,
AE 132, சாந்தி காலனி,
சென்னை - 600 040.

●● மனச் சிதைவினால் (Schizophrenia) பாதிக்கப்பட்டவர்களுக்காக ஒரு பகல் நேர புனர் வாழ்வு மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டாக்டர் சாரதாமேனன் கொடுத்த ஊக்கத்தின் பேரில் தொடங்கப்பட்டது. இதனால் பயனடைய விரும்புகிறவர்கள்- குறிப்பாக தாம்பரம் முதல் மாம்பலம் வரை உள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் - தரப்பட்டுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

- "ஆஷா"
2, ஓர்க்ஸ் ரோடு,
நியூ காலனி, குரோம்பேட்டை (மேற்கு)
சென்னை - 600 044.

●● பூண்டி, ஸ்ரீ புஷ்பம் கல்லூரியின் வெள்ளிவிழா மலர் (1980-81) ஓர் ஆய்வுக்காகத் தேவை. தபால் செலவுடன் தக்க சன்மானமும் தரப்படும். தொடர்பு கொள்க.

- என். ராஜசேகரன்.
44, ஐ.பி.கோ.தெற்குத் தெரு,
திருவாரூர் - 610 001.

●● பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்றிணைந்து 'இளைய ரோஜா'' எனும் பெயரில் மாணவ சமுதாய மாத இதழ் வெளியிடுகிறோம். பங்கேற்க விரும்பும் மாணவ மாணவியர் தொடர்பு கொள்க.

-பி.ஜி.கதிரவன், பி.காம்.,
43,வள்ளி இல்லம்,
போடி ரயில்வே லைன் வடபுறம்,
அரசரடி போஸ்ட், மதுரை - 625 016.

●● Modern Business Language and Usage என்ற நூலைப் படிக்க விருப்பம். யாரிடமாவது இந்தப் புத்தகம் இருந்தால் விலைக்கோ அல்லது இரவலாகவோ தந்து உதவவும்.

-கே.சிவகுமார்,
60, மெக்ரிகர் சாலை,
ஆர்.எஸ்.புரம், கோவை - 641 002.

●● எனக்கு வேலை தரும் பட்சம் (M.A. வயது 33) என்னால் ரூபாய் ஒரு லட்சம் டெபாஸிட் திரட்டித் தர முடியும். ரூ.1500 சம்பளம் எதிர்பார்க்கிறேன். நல்ல கம்பெனிகள் அல்லது நிதி நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவும்.

- ஆர்.பாலசந்தர்,
மேல் புதுப்பாக்கம்
வாழைப்பந்தல் (வழி) - 632 318.

(பாலம் மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி காரியாலயம் பொறுப்பு ஏற்க இயலாது. — ஆர்.)

சித்திரையில் செல்வம் சேரும் தங்கமே தங்கம்...! அதுக்கு சேரனில் சேரவேண்டும் தங்கமே தங்கம்!!

CHERAN CHITS 10 YEARS TRUSTED SERVICE

ரூ. 10,000/- முதல் ரூ. 10,00,000/- வரை புதிய சீட்டு குரூப்புகள் அறிமுகம்!

புதிய சந்தாதாரர்களை அறிமுகம் செய்வோருக்கென காத்திருக்கும் தகதகக்கும் தங்க நாணயங்கள்: **2500 !** நாணயங்களின் (ஒவ்வொன்றும் ஒரு கிராம்) மொத்த மதிப்பு ரூ. **11,00,000**

சித்திரை தங்கத் திருவிழா

தங்கப்புதையல் திட்டம்

ஏப்ரல் 5 முதல் 23, 1994 வரை

அறிமுகம்செய்வோர்கள் மற்றும் சந்தாதாரர்கள் பரிசு விவரம்.

தவணையும் மாதமும்	சீட்டின் மதிப்பு	அறிமுகம் செய்வோர் பெறும் பரிசுகள்	சந்தாதாரர்கள் பெறும் பரிசுகள்
250 x 40	10,000	1. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கிண்ணம்	12. 4 கிராம் வெள்ளி நாணயம்
500 x 30	15,000	2. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டம்ளர் - 2	13. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டேபிள் டிஷ்
625 x 40	25,000	3. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் லஞ்ச் பாக்ஸ்	14. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பிளேட் - 6 டம்ளர்களுடன்
500 x 60	30,000	4. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தாம்பாளம்	15. பால் குக்கர்
1000 x 50 2000 x 25	50,000	5. கையடக்கமான ஹாட் கேஸ் (500 மில்லி லிட்டர்)	16. ஹாட்லைன் ஹாட் கேஸ் (2700 மில்லி லிட்டர்)
1250 x 60	75,000	6. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் கல்யாண் பாக்ஸ்	17. ஒவின்டர் கடாய்
1500 x 60	90,000		
2500 x 40 5000 x 20	1,00,000	7. சம்மர் கூல் (6 லிட்டர்)	18. இட்லி குக்கர்
4000 x 50	2,00,000	8. 25 கிராம் வெள்ளி நாணயம் - 2	19. பிரஸ்டீஜ் பிரஷர் குக்கர் (5 லிட்டர்)
10,000 x 30	3,00,000	9. ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டின்னர் செட் (22 பாத்திரங்கள்)	20. 2 கிராம் தங்க நாணயம்
10,000 x 50	5,00,000	10. பிரீமியர் மினிமாக்ஸ் பிரஷர் பான்	21. 4 கிராம் தங்க நாணயம்
20,000 x 50	10,00,000	11. ஸ்ட்ரீட் கேட் சைக்கிள்	22. ரெஃப்ரிஜிரேட்டர் (165 லிட்டர்கள்)

பதிவு மற்றும் தலைமை அலுவலகம்

சேரன் சிட் பண்ட்ஸ் (பி) லிமிடெட்

"சேரன் டவர்ஸ்", 78 அரசு கலைக்கல்லூரி சாலை, கோயமுத்தூர்-641 018

தொலைபேசி: 216197, 217658, 215584, 217690 டெலக்ஸ்: 0855-538 CARE IN

ஃபேக்ஸ்: 0422 - 210674

தியாக பூமி

50. 'அவள் என் மனைவி!'

வக்கீல் ஆபத்சகாயமய்யர் உமாராணியின் பங்களாவை அடைந்ததும் உமாராணி அவருக்கு விஷயத்தைச் சொல்லி யோசனை கேட்டாள். ''உடனே போய்ப் போலீஸிலே எழுதி வைப்பதுதான் சரி'' என்று ஆபத்சகாயமய்யர் சொன்னதும் இருவரும் போலீஸ் டெபுடி கமிஷனர் ஆபீஸுக்குச் சென்றார்கள்.

உமாராணியைப் பற்றித் தெரியாதவர்கள் சென்னையில் இல்லையாதலால், டெபுடி கமிஷனருக்கும் உமாராணியைத் தெரிந்திருந்தது. எனவே, அவர்களை அவர் மரியாதையுடன் வரவேற்று உட்கார வைத்து, அவர்கள் வந்த காரியம் என்னவென்று விசாரித்தார். வக்கீல் விவரங்களைச் சொன்னார். கடைசியாக, உமாராணி கமிஷனரைப் பார்த்து, ''தாத்தாவும் பேத்தியுமாகத்தான் எங்கேயோ போயிருக்கிறார்கள். எப்படியாவது அவர்களைக் கண்டு பிடித்துக் கொண்டு வர வேண்டும். அதற்காக என்ன செலவானாலும் நான் ஒத்துக் கொள்கிறேன். இந்த ஒத்தாசை எனக்காகச் செய்யவேணும்'' என்று வேண்டிக் கொண்டாள். அதற்கு டெபுடி கமிஷனர், ''உங்களுக்கு ஒத்தாசை செய்வதில் எனக்கு ரொம்ப சந்தோஷம், அம்மா! ஆனால் இந்த விஷயத்திலே எனக்கு ஒன்றும் அதிகாரமில்லையேயென்றுதான் பார்க்கிறேன். நீங்கள் சொல்கிற சம்பு சாஸ்திரி குற்றம் ஒன்றும் செய்துவிடவில்லை. அவர் வளர்த்த குழந்தையைத்தான் அவர் அழைச்சுண்டு போயிருக்கிறார். நகை, கிகை ஒன்றுங்கூட எடுத்துக் கொண்டு போகவில்லை. அப்படியிருக்கிறபோது 'அரெஸ்ட்' பண்ணியோ வேறு விதத்திலோ அவர்களைக் கொண்டு வருவதற்குச் சட்டம் இடங்கொடுக்காதே!'' என்றார்.

''அரெஸ்ட்'' என்று சொன்னதும் உமாவுக்குப் பகீர் என்றது.

''நீங்கள் அப்படியெல்லாம் அரெஸ்ட் கிரெஸ்ட் ஒன்றும் பண்ண வேண்டாம். அந்தக் குழந்தை சௌக்கியமாயிருக்குன்னு எனக்குத் தெரிஞ்சால் போதும். அவா இருக்கிற இடத்தைக் கண்டு பிடிச்சுச் சொல்லுங்கோ! அதற்கு மேலே அவாளை அழைச்சுண்டு வர்றதற்கு நானே ஏற்பாடு பண்ணிக்கிறேன்'' என்றாள்.

டெபுடி கமிஷனர், ''ஆகட்டும், அம்மா! நீங்க மட்டும் 'பார்மல் பெடிஷன்' ஒன்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துவிட்டுப் போங்கள்'' என்றார்.


உமா, வக்கீலை விண்ணப்பம் எழுதும்படி கேட்டுக் கொண்டாள். வக்கீல் விண்ணப்பம் எழுத ஆரம்பித்ததும், டெபுடி கமிஷனர், ''இந்தக் காலத்திலேயே நல்லது ஆகிறதில்லை, பாருங்கள். ஏதோ ஓர் அநாதைக் குழந்தையை எடுத்து வளர்க்கலாம் என்று நீங்கள் நினைக்கப் போக, இந்த மாதிரி தொல்லை நேர்ந்தது'' என்றார். அதற்கு உமா பதில் சொல்வதற்குள் டெலிபோனில் மணி அடித்தது.

டெபுடி கமிஷனர் டெலிபோனில் பின்வருமாறு பேசினார் : ''ஹலோ-எஸ்! - பாங்கி போர்ஜரி கேஸா? - கல்கத்தாக் காரனா? - ஐஸீ! - செண்ட்ரல் ஸ்டேஷன்லேயா 'அரெஸ்ட்' ஆச்சு? - பேரென்ன? ஸ்ரீ....? ஓஹோ! - ஸ்ரீதரன்....''

இதுவரையில் மேற்படி பேச்சை அசட்டையாகக் கவனித்துக் கொண்டிருந்த உமாராணி, ''ஸ்ரீதரன்!'' என்று அழுத்தந் திருத்தமாய் டெபுடி கமிஷனர் சொன்னதும், திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

டெபுடி கமிஷனர், மேஜை மீதிருந்த நோட் புத்தகத்தில் ஏதோ குறித்துக் கொண்டு, மறுபடியும் டெலிபோனில், ''ஆல் ரைட்! - இங்கே அனுப்பு - ரிமாண்டுக்கு ஆர்டர் பண்றேன்!'' என்று சொல்லிவிட்டு, டெலிபோன் ரிஸீவரைக் கீழே வைத்தார். வக்கீலைப் பார்த்து, ''பெடிஷன் எழுதியாச்சா?'' என்று கேட்டார்.

உமாவின் உள்ளமோ அளவில்லாத குழப்பத்தை அடைந்திருந்தது. அவளால் தெளிவாகச் சிந்தனை செய்ய முடியவில்லை. 'ஸ்ரீதரன் - பாங்கி போர்ஜரி - அரெஸ்ட்; ஸ்ரீதரன் - பாங்கி போர்ஜரி - அரெஸ்ட்; ஸ்ரீதரன் - பாங்கி போர்ஜரி - அரெஸ்ட்....' இந்த வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவள் மனத்தில் சுழன்று கொண்டிருந்தன. இந்தக் குழப்பத்துக்கு மத்தியில் ஒரே ஒரு விஷயம் மட்டும் அவள் மனத்தில்



தெளிவாகத் தோன்றியது. தான் உடனே அந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டும். அவரை இங்கே கொண்டு வரப் போகிறார்கள்! அப்போது தான் இங்கே இருக்கக் கூடாது! - இப்படி அவள் மனம் பரபரப்பு அடைந்திருக்கையில், வக்கீல் ஆபத்சகாயமய்யர் தாம் எழுதிய விண்ணப்பத்தை அவளிடம் கொடுத்தார். கையெழுத்துப் போடப் போகையில் உமாவின் கை நடுங்கிற்று. மெதுவாகச் சமாளித்துக் கொண்டு கையெழுத்துப் போட்டாள். அதை டெபுடி கமிஷனரிடம் கொடுக்கக்கூட அவளுக்குத் துணிவு இல்லை. அப்படியே மேஜை மீது வைத்துவிட்டு எழுந்திருந்தாள்.

டெபுடி கமிஷனர், "நீங்க போயிட்டு வாருங்கோ அம்மா! ஏதாவது தகவல் கிடைத்தால் உடனே தெரிவிக்கிறேன்" என்றார்.

உமா நடுங்கிய குரலில் அவருக்கு வந்

அமரர் கல்கி

தனம் சொல்லி விட்டு வெளியே சென்றாள்.

டெபுடி கமிஷனர் ஆபீஸ் அந்தக் கட்டடத்தின் மேல் மாடியில் இருந்தது. உமா மாடிப் படியில் இறங்க ஆரம்பித்த போது, கீழே ஒரு மனிதனைப் போலீஸ்காரர்கள் சூழ்ந்து அழைத்து வருவதைப் பார்த்தாள். அவனுடைய கையில் விலங்கு போட்டிருந்தது. முதலில் உமாவின் பார்வை அந்த விலங்கின் மேல்தான் விழுந்தது. பிறகு அளவிலாத மன வேதனையுடன்

அந்த மனுஷனுடைய முகத்தைப் பார்த்தாள். ஆமாம்! அவர்தான். தன்னைத் தொட்டுத் தாலி கட்டிய கணவன்தான்! உமா, ஸ்ரீதரனுடைய முகத்தைப் பார்த்த அதே நேரத்தில் ஸ்ரீதரனும் உமாவின் முகத்தைப் பார்த்தான். உடனே, தலையைக் குனிந்து கொண்டான். ஒரு பெண் பிள்ளையின் முன்னால், அதுவும் இவ்வளவு நாகரிகமான ஸ்திரீயின் முன்னால், கையில் விலங்குடன் காணப்பட நேர்ந்ததைக் குறித்து ஏற்பட்ட வெட்கந்தான் அவனை அப்படித் தலைகுனியச் செய்தது. குனிந்த தலை நிமிராமல் மாடிப் படிகளில் அவன் ஏறினான். அந்த ஸ்திரீ தனக்கு வெகு சமீபமாக வந்து தன்னைத் தாண்டிப் போனபோது கூட அவளை அவன் ஏறிட்டுப் பார்க்கவில்லை. ஆனால், மேல்படிக்கு ஏறினதும் மறுபடியும் அவளைப் பார்க்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றிற்று. திரும்பிப் பார்த்தான். அதே சமயத்தில், கீழே தரையை அடைந்துவிட்ட உமாராணியும் மேல்நோக்கி அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அந்தப் பார்வை பளிச்சென்று மின்னலைப்போல் அவனுடைய உள்ளத்தில் பாய்ந்தது. அதனால் அவனுடைய மனத்தை மூடியிருந்த இருள் சட்டென்று விலகியது போல் இருந்தது.

இது யார்? இந்த முகத்தை எங்கே பார்த்திருக்கிறோம்? - ஆஹா, அப்படியும் இருக்க முடியுமா?

இதற்குள், பின்னே வந்த போலீஸ்காரர்கள், "போ அப்பா, போ!" என்று சொல்லி அவனைப் பிடித்துத் தள்ளினார்கள். உமா ராணியும் மறைந்தாள்.

அடுத்த நிமிஷம் டெபுடி கமிஷனரின் முன்னிலையில் பின் வரும் சின்ன நாடகம் நடைபெற்றது.

கையில் விலங்குடன் வந்த கைதி அவருடைய மேஜைக்கு வெகு சமீபமாக வந்து, மிகவும் நயமான குரலில், "ஸார்! கீழே இறங்கிப் போகிறாளே, அந்த லேடி யார்?" என்று கேட்டான்.

"ஷட் அப்! உனக்கு என்ன அதைப் பற்றிக் கவலை?" என்றார் டெபுடி கமிஷனர்.

உமா ராணியிடம் எவ்வளவோ இனிமையாகவும் மரியாதையாகவும் பேசிய டெபுடி கமிஷனர் இப்போது நெருப்பாக இருந்தார்.

அவருடைய அதட்டலில் மிரண்டு போன கைதி, தலையைக் குனிந்து கொண்டான். குனிந்தவனுடைய பார்வை, தற்செயலாக மேஜையின் மீது வைத்திருந்த காகிதத்தின் மேல் விழுந்தது. அது சற்றுமுன், வக்கீல் ஆபத்சகாயமய்யர் எழுதிய விண்ணப்பக் காகிதம். அதில் முதல் வரியில், சம்பு சாஸ்திரி என்ற பெயரைக் கண்டதும் ஸ்ரீதரன் திடுக்கிட்டான். உடனே, கடைசியில் பார்த்தான். கீழே, "உமா ராணி (அலயஸ்) சாவித்திரி" என்று எழுதியிருந்தது.

இதைப் பார்த்தானோ இல்லையோ, ஸ்ரீதரன் திடீரென்று திரும்பி ஓட யத்தனித்தான். ஜவான்கள் அவனைப் பிடித்து நிறுத்தினார்கள்.

டெபுடி கமிஷனர், மேஜையில் ஓங்கி ஒரு குத்துக் குத்தி, "இது என்ன கலாட்டா?" என்று கர்ஜித்தார்.

அப்போது ஸ்ரீதரனும், குரலை உயர்த்தி, "She is my wife, Sir! She is my wife! (அவள் என் மனைவி! அவள் என் மனைவி)" என்று கத்தினான்.

"நான்ஸென்ஸ்! அடுத்தாப்பலே, என்னை உன் பேரன் என்று சொல்வே போலிருக்கே!" என்றார் டெபுடி கமிஷனர்.

ஸ்ரீதரன் மறுபடியும் ஏதோ பேச ஆரம்பித்தான். அப்போது பக்கத்திலிருந்த போலீஸ்காரன், "உம்" என்று அதட்டி, இடுப்பில் ஒரு குத்துக் குத்தவே, ஸ்ரீதரனுக்குத் தன்னுடைய நிலைமை நன்கு ஞாபகம் வந்தது. தலையைக் குனிந்து கொண்டு மௌனமாய் நின்றான்.

51. உமா ராணியின் பழி

உமாராணி அன்றெல்லாம் ஒரே மனக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தாள். குழந்தையையும் தந்தையையும் பிரிந்த துன்பம் இப்போது அவ்வளவு பெரியதாயில்லை. அவளுடைய நினைவையே மறக்கச் செய்யக் கூடியதான சம்பவம் வேறொன்று நேர்ந்துவிட்டது.

விதியின் விசித்திரத்தை நினைக்க நினைக்க அவளுக்கு வியப்பாயிருந்தது. குழந்தையைக் கண்டுபிடிக்கச் சொல்வதற்காக டெபுடி கமிஷனர் ஆபீஸுக்குப் போன இடத்தில் இந்தச் சந்திப்பு ஏற்பட்டது. குழந்தையும் அப்பாவும் இராத்திரி இப்படித் தன்னை ஏமாற்றிவிட்டுப் போகாதிருந்தால், தான் டெபுடி கமிஷனர் ஆபீஸுக்குப் போக நேர்ந்திராது. அவரைச் சந்திக்கவும் நேர்ந்திராது.



பிக்பாக்கெட் (போலீஸிடம்) : இதோ பாருங்க சார்.... மாமூல் பத்தலைன்னா என்னைக் கேளுங்க, நானே தர்றேன்; அதை விட்டுட்டு பாக்கெட்ல கைவிடற வேலையெல்லாம் வச்சுக்காதீங்க.

- சீர்காழி வி. ரேவதி

ஒரு வேளை பகவானுடைய செயல் இதில் ஏதேனும் இருக்குமோ?

பைத்தியந்தான்! பகவானாவது மண்ணாங்கட்டியாவது! உலகில் தற்செயலாக இந்தமாதிரி சம்பவங்கள் எத்தனையோ நிகழ்கின்றன. தன்னுடைய வாழ்க்கையிலேயே நடந்திருக்கிறது. அதற்கெல்லாம் சுவாமி பேரில் பாரத்தைப் போடுவதில் என்ன பிரயோஜனம்? அப்பாவாயிருந்தால், 'எல்லாம் பராசக்தி செயல்' என்று சொல்லிக் கொண்டிருப்பார். மனுஷ்யர்களுடைய காரியங்களையெல்லாம் பராசக்தி நடத்துவதாயிருந்தால், உலகம் இவ்வளவு கேவலமாயிருக்குமா? இவ்வளவு அநியாயங்களும் கொடுமைகளும் நடக்குமா? தானும் குழந்தையுமாகச் சாகப் போகும் சமயத்தில் அப்பாவின் குரல் கேட்டது தன்னுடைய வாழ்க்கையில் ஓர் ஆச்சரியமான விஷயம்! அப்பாவிடம் சொன்னால், அது பகவானுடைய செயல் என்றுதான் சொல்வார். அது பகவானுடைய செயலாயிருந்தால், கல்கத்தாவில் தான் பட்ட கஷ்டங்களும் பகவானுடைய செயல்தானே? சென்னையின் வீதிகளில் தான் அலைந்து திரிந்ததும் பராசக்தியின் செயல்தானே?

அதெல்லாம் ஒன்றுமில்லை. அப்பாவினுடைய வீண் பிரமை. வாழ்க்கையில் மனுஷ்யர்களுடைய முயற்சியினால் சில காரியங்கள் நடக்கின்றன; தற்செயலாகச் சில காரியங்கள் நடக்கின்றன. அந்த மாதிரி தற்செயலாக நடந்திருக்கும் சம்பவம் இது. தன்னுடைய வாழ்க்கையிலேயே இதற்கு முன் நடந்திருப்பதையெல்லாம் நினைக்கும் போது, இது ஒரு பிரமாத அதிசயங்கூட இல்லை.

சரி; ஆனால் தான் இப்போது செய்ய வேண்டியது என்ன? அவர் எக்கேடாவது கெட்டுப் போகட்டுமென்று சும்மா இருந்து விடலாமா?

விலங்கு பூட்டிய கையுடன் கூடிய ஸ்ரீதரனுடைய தோற்றம், அடிக்கடி உமாவின் மனக் கண்ணின் முன்னால் வந்து நின்றது. அதை நினைக்கும் போதெல்லாம் ஒரு பக்கம் அவள் மனத்தில் அளவிலாத வேதனை உண்டாயிற்று. மற்றொரு பக்கத்தில் திருப்தியும் ஏற்பட்டது. தன்னை எவ்வளவோ கஷ்டங்களுக்கெல்லாம் உள்ளாக்கிய மனுஷர், இப்போது சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறார். வேண்டும், நன்றாய் வேண்டும்!

அதே சமயத்தில், தான் அவருக்கு உதவி செய்யக்கூடிய நிலைமையில் இருப்பதை நினைத்து, உமா கர்வமும் குதூகலமும் கொண்டாள். அதுதான் சரி! இந்த ஆபத்துச் சமயத்தில் அவருக்கு உதவி செய்து பழிவாங்க வேண்டும்; அப்படித்தான் புத்தி கற்பிக்க வேண்டும். தன்னை முகத்தைப் பார்த்துப் பேசுவதற்கும் தைரியம் வராதபடி அடிக்க வேண்டும். - ஆம்;



''பரீட்சை ஹாலுக்கு அந்த மாணவர் ஏதோ மிஷினோட போறாரே?''

''ஆமாம்! போர்டபிள் ஜெராக்ஸ் மிஷின் அது. பக்கத்து பையனோட ஆன்சர் பேப்பரைக் காப்பி எடுத்து, தன் நம்பரை மட்டும் எழுதிக் கொடுத்துட்டு வந்திடவாம்!''

- வி.சி. கிருஷ்ணரத்தினம்

எப்படியாவது அவரைக் கேஸிலிருந்து தப்பித்து விடுதலை பண்ண வேண்டும். விடுதலையான பிறகு நன்றி செலுத்த வருவாரல்லவா? ''உமது நன்றி எனக்கு வேண்டாம்! போய் வாரும்! உமது முகத்தில் விழிக்கக்கூட எனக்கு இஷ்டமில்லை'' என்று சொல்ல வேண்டும்.

எப்படியிருந்தாலும், எவ்வளவு கேவலமான மனுஷராயிருந்தாலும், சாருவின் தகப்பனாரல்லவா? அதற்காகவாவது அவரை விடுதலை செய்ய முயற்சி செய்ய வேண்டாமா? - நல்ல வேளை! குழந்தை இந்தச் சமயம் இங்கே இல்லாமற் போனாளே? அப்பாவும் போய்விட்டது எவ்வளவு நல்ல காரியம்! இதை நினைத்த போதுதான், உமாவுக்கு ஒரு வேளை இது தெய்வத்தின் செயல் தானோ என்று சிறிது சந்தேகம் உண்டாயிற்று. தான் சாவித்திரி என்பதையும், சாரு தன் குழந்தையென்பதையும் அப்பாவிடம் சொல்லாமலிருந்தது இப்போது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று! குழந்தை இங்கே இருந்து அவளுக்கு உண்மையும் தெரிந்திருந்தால் - ஐயோ! - தகப்பனார் கையில் விலங்குடன் நிற்கும் காட்சியையல்லவா குழந்தை பார்க்க வேண்டியிருந்திருக்கும்?

இப்படி நினைத்ததும் உமாவுக்கு இன்னொரு பெரிய பயம் உண்டாயிற்று. இவருக்குச் சாரு தன் குழந்தை என்பது தெரிந்தால் - அதனால் என்ன விபரீதம் வருமோ என்னவோ? தனக்கு இப்போது இந்த உலகத்திலுள்ள செல்வமெல்லாம் குழந்தைதானே? குழந்தையை அபகரித்துக் கொண்டு போக முயற்சிப்பாரோ, என்னவோ? - வேண்டாம், வேண்டாம். அவருக்குச் சாருவைப்பற்றித் தெரியவே கூடாது; தான் ஒத்தாசை செய்கிற விஷயமும் தெரிய வேண்டாம். ஏதோ சாருவின் தகப்பனார் என்ற தோஷத்துக்காக அவரை விடுதலை செய்து அனுப்பிவிட வேண்டும்; அவ்வளவுதான்.

மறு நாளைக்கு வக்கீல் ஆபத்சகாய மய்யர் உமாராணியின் வீட்டுக்கு வந்ததும்,

''போலீஸிலிருந்து ஏதாவது தகவல் கிடைத்ததா, அம்மா?'' என்று கேட்டார்.

''இல்லை'' என்றாள் உமா.

''போலீஸை மட்டும் நம்பியிருப்பதில் பிரயோஜனமில்லை. குழந்தையைத் தேடுகிறதற்கு நாமும் ஏதாவது ஏற்பாடு செய்தால்தான் நல்லது'' என்றார் வக்கீல்.

உமா ஏதோ சொல்வதற்கு ஆரம்பித்தாள். அதற்குள் வக்கீல், ''ஆனால், ஒரு சமாசாரம்; அந்தக் குழந்தையேதான் வேணுமென்றால், பேஷாய்த் தேடுகிறதற்கு ஏற்பாடு பண்ணுவோம். இல்லை, வீட்டுக்கு மங்களகரமாய் ஒரு குழந்தை இருந்தால் போது மென்றால், எத்தனையோ பேர் நான் தர்றேன் நீ தர்றேன்னு காத்திண்டிருக்கா. என்னுடைய 'ஒய்ஃப்' கூட அடிக்கடி சொல்லிண்டிருக்காள்...''

உமா ராணியின் எவ்வளவோ மனச் சங்கடங்களுக்கிடையில் வக்கீலின் இந்தப் பேச்சு அவள் முகத்தில் புன்சிரிப்பை வரவழைத்தது.

''குழந்தை விஷயம் இருக்கட்டும், வக்கீல் ஸார்! அதை விட முக்கியமான காரியம் இப்போது வேறொன்று வந்திருக்கு'' என்றாள்.

அப்போது அவள் முகத்தில் உண்டான கவலைக் குறியையும், மேலே பேசுவதற்குத் தயங்குவதையும் பார்த்த வக்கீல், ''என்ன விஷயமாயிருந்தாலும் என்னிடம் தைரியமாய்ச் சொல்லுங்கள், அம்மா! உங்கள் மனஸிலே ஏதோ வச்சிண்டிருக்கயள்; என்னை உங்கள் தமையன்னு நினைச்சுண்டு எல்லாத்தையும் சொல்லணும்னு முன்னயே கேட்டுண்டேன். என்னை நீங்கள் வேற்று மனுஷனாகவே நினைக்கக் கூடாது'' என்றார்.

உமா, ''உங்களை என் தமையன் மாதிரி தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். என்றைக்காவது ஒரு நாள் எல்லா விஷயங்களையும் சொல்லத்தான் போகிறேன்; சொல்ல வேண்டியும் வரும். அது வரையில் நீங்கள் அவசரப்படக்கூடாது. இப்போது ஒரு முக்கியமான ஒத்தாசை உங்களைக் கேட்கப் போகிறேன். ஏன், என்னத்திற்கு, எதற்காக என்றெல்லாம் கேட்காமல், அந்த ஒத்தாசையை எனக்கு நீங்கள் செய்யவேணும்'' என்றாள்.

''கட்டாயம் செய்றேன், அம்மா! உங்களுக்கு ஒத்தாசை செய்யணுங்கறதுதான் என் ஆசையே தவிர, உபத்திரவம் செய்யறது இல்லை''என்றார் வக்கீல்.

உமா சற்று யோசித்துவிட்டு, ''நேற்று டெபுடி கமிஷனர் ஆபீஸிலிருந்து நாம் வெளியே வந்தபோது ஒரு மனுஷரைக் கையிலே விலங்கு போட்டுக் கொண்டு வந்தார்களே; உங்களுக்கு ஞாபகம் இருக்கா?'' என்று கேட்டாள்.

''ஆமாம்; ஞாபகம் இருக்கு. நான்கூட, 'பையன் முகத்தைப் பார்த்தாக் களையாயிருக்கு. இந்த மாதிரி அகப்பட்டுண்டிருக்கானே' என்று நினைச்சுண்டேன். அவனைப் பற்றி என்ன?''

''அவரை எப்படியாவது கேஸிலிருந்து தப்ப வைக்கணும். அதற்காக எவ்வளவு பணம் செலவழிந்தாலும் பாதகமில்லை. நான் கொடுக்கிறேன்.''

வக்கீலுடைய ஆச்சரியம் நீரக் கொஞ்ச நேரம் ஆயிற்று.

''என்ன யோசிக்கிறீர்கள், வக்கீல் ஸார்? அவர் எனக்கு உறவு மனுஷர்...''

வக்கீல் திடீரென்று ஏதோ யோசனை தோன்றியவர் போல், ''ஏனம்மா? அவர் தான் ஒருவேளை உங்களுடைய....?'' என்று ஆரம்பித்தார். ''ஹஸ்பெண்டா, என்ன?'' என்று அவர் கேட்க வந்தார். அந்தச் சமயம் உமாவின் முகத் தோற்றத்தைப் பார்த்துவிட்டுச் சட்டென்று நிறுத்திக் கொண்டார்.

''இல்லை; அதெல்லாம் நான் கேட்கவில்லை. அவர் யாராக வேணாலும் இருக்கட்டும். ஆனால் என்ன கேஸோ, என்னமோ, ஒன்றும் தெரியவில்லையே? விலங்கு போட்டுக் கொண்டு வந்ததைப் பார்த்தால், 'ஸீரியஸ் கேஸா' இருக்கும் போலேயிருக்கே?...''

''டெபுடி கமிஷனர் டெலிபோனில் பேசியதை நான் கேட்டுண்டிருந்தேன். நீங்கள் பெடிஷன் எழுதிண்டிருந்தயள்; அதனாலே கவனிக்கவில்லை. பாங்கி மோசடி கேஸாம்!...''

''பாங்கி மோசடி கேஸா? சரியாப் போச்சு! இப்போ எங்கே பார்த்தாலும் பாங்கி மோசடிதான் ஜாஸ்தியாயிருக்கு. கொஞ்சம் கஷ்டமான விஷயந்தான். இருந்தாலும் என்னால் ஆனமட்டும் பார்க்கிறேன். ருசுவாகிறது கஷ்டம்னு பாங்கிக்காராளுக்குத் தோணினால், கேஸைக் கம்பவுண்டு பண்ணிக்கத் தயாராயிருந்தாலும் இருப்பா. பையனைப் பார்த்தா புத்திசாலியாத் தோணறது. ஏதாவது செய்திருந்தாலும் கெட்டிக்காரத்தனமாத்தான் செய்திருப்பான். என்னால் ஆனமட்டும் பார்க்கிறேன், அம்மா!'' என்றார்.

''அவரைத் தப்ப வைக்கறது பெரிசில்லை. அதைவிட முக்கியமான விஷயம் ஒன்றிருக்கிறது. இந்தக் காரியத்துக்கு யார் பணங்கொடுக்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியக் கூடாது. விடுதலையானதும் அவர் இந்த ஊரை விட்டுப் போய்விட வேண்டும். முன்னாலேயே அவரை நீங்கள் கண்டு பேசி இதற்குச் சம்மதிக்கப் பண்ண வேணும்'' என்றாள் உமா.

அப்படியே செய்வதாக வாக்களித்து விட்டு வக்கீல் விடை பெற்றுச் சென்றார்.

(தொடரும்)

மனவோட்டம்

முண்டியடித்துக் கொண்டு நீண்டிருந்த வரிசையில் நின்று டிக்கட் வாங்கிக் கொண்ட முருகேசன், அலுப்போடு கவுண்டரைவிட்டு விலகினான்.

சினிமாவுக்காக அந்தளவு அவஸ்தைப் படுவது அவனுக்குப் பிடிக்காத விஷயம். ஆயினும், வேலையிலிருந்து திரும்பியபின் ஒவ்வொரு மாலையிலும் அறைக்குள்ளேயே அடங்கிக்கிடக்க முடியாமல் வெளியே வருகிற நாட்களில், பொழுது போக்குவதற்கு அன்றைக்கு அதுதான் வழியென்று ஆகிறபோது, அந்தமாதிரியான அவஸ்தை பெரும்பாலும் தவிர்க்கப்பட முடியாது போய்விடுகின்றது.

தியேட்டர் முன்பாகக் கூட்டம் பெருகிக் கொண்டு இருந்தது. அன்றைக்கு இரண்டாவது நாளாக ஓடிக் கொண்டிருந்த புதிய சினிமா அது. கூட்டத்துக்குக் கேட்பானேன்? அந்த ஆரவாரங்களையெல்லாம் சற்றே ஒதுங்கி நின்று ரசிக்க விரும்புபவன் போல், தியேட்டரின் பக்க மதிலோரம் சைக்கிளை நிறுத்தி விட்டு, காரியரில் ஏறி அமர்ந்தான் முருகேசன்.

அவனுக்கு அது பிடிக்கும். தன்னைச் சுற்றிலும் மனிதர்களே நிறைந்து போயிருக்கிற இடத்தில், அவர்களிலிருந்தும் தன்னை ஒதுக்கிக் கொண்டு, அந்தக் களேபரங்களைக் கவனிப்பதில் அவனுக்கு ஒரு சுகம் கூடக் கிடைத்தது. சினிமா பார்க்க வருவதில், சினிமாவைவிடவும் அது அவனுக்கு உவப்பானதாக இருந்தது. கோவிலுக்குப் போனாலும் அப்படித்தான். சுவாமி தரிசனத்தோடு, தரிசனம் செய்யவரும் மற்றைய மனிதர்களின் போக்குகளைக் கவனிப்பதில், அவர்களது முகபாவங்களை அளவெடுப்பதில், அவற்றுக்குத் தன்னளவிலான அர்த்தம் கற்பிப்பதில் அவன் சுவாமி தரிசனத்தைப்போலவே ஒருவகையான மன நிறைவை அடைந்தான்.

வேலை, வேலை முடிந்து அறைக்கு வந்தால் சூழும் தனிமைக்குள் தன்னை ஒடுக்குதல் என்ற வழக்கமான செயற்பாட்டிலிருந்து விடுபட்டு, மாதத்துக்கு இரண்டு மூன்று நாட்கள்தான் முருகேசன் இவ்வாறு வெளியே வருகிறான். அப்படி வருகிற சந்தர்ப்பங்களிலும் கலகலக்கும் கூட்டத்துள் இருந்துகொண்டே தனக்கும் அதற்குமாய் ஓர் எல்லையைப் போட்டு, தனியனாக்கிக் கொள்கிறான். சின்ன வயதில் 'அமாண்டிப் பைய'னாக இருந்தது போலவே, வளர்ந்த அந்த வாலிபப் பிராயத்திலும் உள்மனம் காட்டாத முகத்தோடிருந்த மற்றவர் பாவங்களை அளவெடுக்கிறான்.

இவையெல்லாம் திட்டமிட்டே இவனிடத்தில் நடைமுறையாகிப் போகவில்லை. சின்ன வயதில் தாய், தந்தையர் அற்ற அநாதையாய் தூரத்து உறவுகளின் ஆதரவில் வாழத் தொடங்கிய காலத்திலிருந்து, மெல்ல மெல்ல இவனோடு கூடவே வளர்ந்த போக்குகள் இவை. இவன் தன்



உடலும் உணர்வுகளும் வதங்கி வளர்ந்த வரலாற்றில், பாவங்களே இவனுக்கு பிரதானமானவையாக இருந்திருக்கின்றன. வளர்ப்பவர், அயலவர் முகபாவங்கள் தெரிந்து, ஒட்டியும் விலகியும் நடந்தபடியால்தான் ஓர் அநாதையைப் போல் வாழ்க்கைப் போராட்டத்தில் தகங்கி விடாமல், இவனால் தப்பிப் பிழைக்க முடித்தது.

மனத்தில் உறுத்தும் ஒரு முகபாவம் கண்டால் போதும், அதையே தொடு கயிறாய்ப் பற்றிக்கொண்டு, இவன் தன்னுள்ளே ஒடுங்க ஆரம்பித்துவிடுகிறான். முகபாவம் இவனுக்கு அந்த நபரின் ஜாதகமாகிவிடுகிறது. அவரின் முக்காலங்களுமே இவனது கற்பனையில் படமாக விரிந்து விடுகின்றன.

இதுபோன்ற சமயங்களில் எந்தக் குறுக்கீட்டையும் இவன் விரும்புவதில்லை. தன்னை உசுப்பும் எந்தத் தொனியிலும் இவன் எரிச்சல் அடைகிறான். அத்தனைக்கு

தேவகாந்தன்


பின்னமாக்கப்பட விரும்பாத இவனின் மனோவலையம் அது.

ஸைக்கிள் காரியரில் ஏறி அமர்ந்த முருகேசனின் செவிகளிலும் கண்களிலும் சுற்றிவரக் கிளர்ந்த தொனித் துகள்களும், பாவம் காட்டிய காட்டாத முகங்களும் விழுந்து கொண்டிருந்தன.

அவனுக்கு ஆர்வமாய்த்தான் இருந்தது. ஆயினும், நடைபெற்றுக் கொண்டிருந்த மாட்டனி காட்சி இன்னும் முடியாததில், இயல்பான அந்த ஆர்வம் அவனில் அசிரத்தை நிலையை அடைந்து கொண்டிருந்தது.

அவன் சிகரெட் எடுத்துப் புகைத்தான். மப்பு போட்டிருந்த வானத்தை நோக்கினான். தெருவில் உறுமியபடி புகை கக்கிப் பறந்த வாகனங்களைப் பார்த்தான்.

இவ்வாறு அவனுள் இறங்கி வந்த அசிரத்தை, கூட்டத்தைத் துளைத்துக் கொண்டு, பளிச்சென்ற மஞ்சள் பாவாடை தாவணியில் ஓர் உருவம் உள்ளே நுழைந்ததும் சட்டென நின்றது. அங்கே நின்றும் நடமாடியும் உட்கார்ந்தும் கொண்டிருந்த அத்தனை நிறங்களிலும் அந்த மஞ்சள் மார்மக் கலராய் அவன் மனத்தை வசீகரித்தது.



அந்நியோன்யமற்ற ஓர் இடைவெளியில் அவளை அழைத்து வந்திருந்தவன், ஓர் ஓரமாக அவளை நிற்க வைத்துவிட்டு டிக்கட் எடுத்துவர முன்னே நடந்தான். ஆனால், கவுண்டரில் தொங்கிக் கொண்டிருந்த ஹவுஸ் ஃபுல் போர்டைக் கண்டதும் அப்படியே ஏமாந்து நின்றுவிட்டான். பின்னர் சோர்வோடு திரும்பி, 'போகலாம், வா' என்று அவளை நோக்கிச் சைகையில் காட்டிவிட்டு தியேட்டர் வெளிவாசலை நோக்கி நகர்ந்தான். ஏமாற்றத்தின் தளர்வோடு அவளும் திரும்பத் தயாரானாள்.

திடீரென என்ன நினைத்தானோ, அவளிடம் திரும்பிவந்த அந்த மனிதன், ஏதோ கூறிவிட்டு, தியேட்டர் வாசலுக்கு வெளியே இருந்த ஐஸ் கடலை வண்டிகளை நாடிச் சென்றான். அவசரமாகச் செல்லும் அவனது பார்வையிலுள்ள தேடலின் அர்த்தம் வெளிப்படையாகவே தெரிந்தது. முருகேசனும் அதைப் புரிந்து கொண்டான்.

அவன் சென்ற திசையில் பார்த்தபடி, முருகேசனின் திசைக்கு முதுகு காட்டியபடி நின்றிருந்தாள் அந்தப் பெண்.

கூந்தலில் நிறைந்த கதம்பம். மஞ்சள் நிற பாவாடை தாவணிக்கு அது மிக எடுப்பாக இருந்தது. இரட்டைப் பின்னல் பிரிப்பால் உச்சி வகிடு பிடரிவரை இறங்கியிருந்தது. பின்னல்களை முன்னால் இழுத்து விட்டிருந்தாள். கழுத்துக்குப் பின்னால் 'எஸ்'ஸாக வளைந்து கிடந்தது சங்கிலி இணைப்பு.

முருகேசனின் கூர்த்த பார்வையில் எதுவும் விட்டுப் போகவில்லை.

அவள் நல்ல சிவப்பாக இருந்தாள். தோளில் கழுத்தில் காற்றுக்குப் பறந்த கூந்தல் இழைகளால் அந்தச் சிவப்பு இன்னும் துல்லியப்பட்டிருந்தது. அவள் சற்று உயரமாகவும் தென்பட்டாள். வாழைத் தண்டின் உடல்வாகு. ஆனாலும், குச்சியாக இல்லை.

அவளது முகம் தெரியாததில் அவனது ஆர்வம் பழையபடி சோர்வு தட்டியது. அவன் தேடுவது மனிதர்களின் பாவங்களையே அல்லவா! அவற்றின் பின்னாலுள்ள உணர்வுகளையே அல்லவா! ஆனாலும், அவனே ஆச்சரியப்பட்ட படிக்கு சில கணங்கள் அந்த 'மஞ்சள்' அவன் மனத்தைச் சிறைப்பிடித்துத்தான் வைத்திருந்துவிட்டது.

அவன் தன் பார்வையை மீட்டு வேறு சலனங்களில் கவனப்பட முனைந்தான்.

பட்டென அவன் மனத்துள் ஒரு பொறி பறந்தது. அந்த மஞ்சள் சொரூபத்தின் ஏதோ ஓர் அம்சத்தில் ஒரு பேதத்தை - குறையை - அவனது கண்கள் அவசரமாய்க் கண்டனவா? என்ன பேதம் அல்லது குறை அது? அவளது கூந்தலா? கழுத்து மேடா? குதிக்காலா? அந்த சற்றே விரிந்த காதுச் சோணைகளா? அவனால் கட்டியுணர முடியவில்லை. ஒரு கணத்தின் மிகச் சிறிய பின்னப்பொழுதில் அவதானித்து, அந்தப் பெரிய அழகின் அமுதத்தில் மறந்துபோன அந்தக் குறைபாடு என்ன?

அவன் அவளை மீண்டும் நோக்கினான். தலைமுதல் கால்வரை பார்வையை ஓட்டினான். ஆயினும், அதை அவனால் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

கடைசியில் அவனது பார்வை அவளது பாவாடையில் தாவணி மூடாத பகுதியில் வந்து நிலைத்தது. அந்த மடிப்புகள்... ஆம், அந்தக் கசங்கல் மடிப்புகள்தான் அவன் பார்வையை உறுத்திய பேதம்.

உடையில் மடிப்புகள் சகஜம். ஆனால், அந்த மடிப்புகள்...? அவை முந்திய வாரத்திலோ, அதற்கும் முந்திய வாரத்திலோ அல்லது ஒரு மாதத்துக்கு முந்தியோகூட மடித்து வைத்ததால் ஏற்பட்ட அடையாளங்கள் அல்லபோல் அவனுக்குத் தோன்றியது. பெட்டியின் அடியில் கிடந்துதான் அவ்வாறான கசங்கல் மடிப்பு ஏற்படும். அதற்கு ஒரு பெரிய காலமே தேவைப்பட்டிருக்கும். ஒரு வருஷம் ஒன்றரை வருஷம்கூட ஆகியிருக்கலாம்.

அதற்குமேல் அவனுக்கு அவள் தெரியவில்லை. அந்த மடிப்புகள் மட்டுமே காட்சி என்றாகி, மனம் முழுக்கத் தெரிந்து கொண்டிருந்தன.

அந்த மஞ்சள் பாவாடை நீண்டகாலம் பாவிக்கப்படவில்லையெனில், அது பாவிக்கப்படாத கால அளவுக்கு அவளும் வெளியே வராது இருந்திருக்கிறாள் என்றே முருகேசன் எண்ணினான். அது நம்பமுடியாத வியப்பை அளித்தது அவனுக்கு. ஆயினும், உண்மை அவனுக்கு அதுவாகத்தான் தோன்றியது.

அவளிடம் அந்த மஞ்சள் பாவாடை ஒன்றுமட்டும்தானா, கறுப்பிலும், சிவப்பிலும் பச்சையிலும் நீலத்திலும்கூட ஒவ்வொன்று இருந்து, அவள் அவற்றில் ஏதாவதொன்றை அணிந்து கொண்டு கோவில், சினிமா, கடைத்தெரு என்று போய் வந்தி



"இந்தப் படத்துக்கு 'முழுநீல நகைச்சுவைச் சித்திரம்'னு விளம்பரப்படுத்தியிருக்காங்களே...?"

"ஆமாமா... நகைச்சுவைங்கிற பேர்ல ரொம்ப விரசமான ஜோக்ஸ் எல்லாம் சொல்றாங்களாம்!"

- சீர்காழி வி. ரேவதி

ருக்கக் கூடுமே என்ற சாத்தியத்தையும் அவன் ஒப்ப மறுத்தான். ஏதோ அவளை நன்கு தெரிந்தவன்போல் அவளிடம் அந்த ஒரேயொரு பாவாடையே இருப்பதாய்ச் சாதித்தான்.

அந்த நினைப்பு இன்றுபின்றுமாய் அவனது மனச் சிறகடிப்பைத் தூண்டி விட்டது.

அந்தளவு நீண்ட காலத்துக்கு ஆரோக் கியமான ஓர் இளம்பெண் வீட்டிலே அடைந்துகிடத்தல் என்பது சாதாரணமாக நிகழ்ந்துவிடக் கூடிய சம்பவமல்ல. அதற்கு ஒரு நிர்ப்பந்தமே காரணமாயும் இருக்க லாம். அப்படியான பட்சத்தில் அவள் இருக்கிற இடம் வீடாய்த்தான் இருக்க வேண்டுமென்கிற அவசியமும் இல்லை. அது ஒரு கூண்டாக - சிறையாகக் கூட - இருக்கலாம். இன்றும், அவள் இந்த ஊர்க் காரியாக, ஏன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவ ளாகக்கூட இல்லாமல் இருப்பதும் சாத்தி யம் என்றே அவனுக்குப் பட்டது.

அவ்வாறெனில் அவளைக் கூட்டி வந்த வன் அவளின் அண்ணனாக, தகப்பனாக, வேறு உறவுக்காரனாக இருப்பானென்ற அனுமானத்தைப் பொருத்தமில்லாதது என்று கருதினான் முருகேசன். தியேட்ட ருக்கு வரும்போது அவர்களுக்கிடையே இருந்த அந்நியோன்யமற்ற வெளி ஞாபகம் வந்து, அந்த முடிவை அவனிடத்தில் இறுகச் செய்தது.

ஆக, கூட வந்த மீசைக்காரன் அவளள வில் அவளுக்குக் காவலாக வந்த ஒருவனோ அல்லது மாமாக்காரனோதான். அவனது கலைந்த தலையும், சிவந்த கண்களும், பார் வையும், போக்கும் எல்லாமே அவனை அதுமாதிரியான ஓர் ஆள் எனவே முரு கேசனை சந்தேகமற எண்ண வைத்தன.

அந்தளவில் அந்த மனிதன்மீது சொல்ல முடியாத ஆக்கிரமும், வெறுப்பும் மூண்டெ ழுந்தன. தனக்கே நிகழ்ந்த அந்தளவு உக்கிரம்.

சிறிது நேரத்தில் அவன்மீதான அந்த உணர்வுகளின் மறுதலையில் அவன்மீதான அபவாதம் சுமத்தப்படுவதை அவன் உணர்ந் தான். அவனது மனவோட்டம் தடைப்பட் டது. முன்பின் அறியாத ஒரு பெண்ணின் நிறையைச் சந்தேகித்ததற்காய் மனத்தில் வருத்தம் பிறந்தது. தன் மனச் சிறகடிப்பின் மீதே அவன் ஆக்கிரம் கொண்டான்.

தன் உள்ளிலிருந்த முருகேசன் பூரண மாய் விழித்த வெளிப்பிரக்ஞை அடைந்த போது, சினிமா காட்சி முடிந்துவிட்டிருந் தது. எதிரில் நின்ற மஞ்சள் பாவாடை தாவ ணிக்காரியும் போய்விட்டிருந்தாள். ஜனங் கள் திமுதிமுவென தியேட்டருள் சென்று கொண்டிருந்தனர்.

முருகேசன் விரைந்து சைக்கிளை எடுத்துப் போய் ஸ்டாண்டிலே நிறுத்தி விட்டு தியேட்டருள் நுழைந்தான்.

சினிமா ஆரம்பமான சிறிதுநேரத்தில் மழைபெய்யத் தொடங்கியது. அதுபோல சினிமா முடிவதற்கு முன் அது ஓய்ந்தது. ஆயினும், மீண்டும் பெய்யக் கூடிய அறிகுறி, வான மூட்டத்தில் இருந்தது.

மழை விட்டிருந்த அந்த வேளையில் வீடுபோய் விடுகிற அவசரத்தோடு கூட்டம் நெருக்கியடித்துக் கொண்டு வாசல் வழியே வெளியேறிக் கொண்டிருந்தது.

பிணைந்து விட்டாற்போல சைக்கிள் கள் நெருங்குண்டு நின்றிருந்தன. சைக் கிளை இடித்துக் கொண்டு முன்னேற முயலும் மனிதர்கள் வேறு. அதுபோல எதிர்த்திசையிலிருந்து உள்ளேவர முயன்ற சைக்கிள்காரராலும் ஜனக்கூட்டத்தாலும் ஏற்பட்ட இடிபாடு ஒருபக்கம். வெளி யேறுதல் அவ்வளவு சுலபமாக இருக்க வில்லை. சைக்கிளுடன் மெல்ல ஊர்ந்து கொண்டிருந்தான், முருகேசன். டிக்கட் எடுப்பதற்குப் பட்டதைவிட அதிக அவஸ் தைப்பட வேண்டியிருந்தது வெளியேற. அவனுக்குச் 'சீ'யென்று ஆகிவிட்டது.



"என்னங்க இது, தனக்கு ப்ரமோஷன் கிடைக்குமான்னு, நம்ம மானேஜர் ப்யூன் குப்புசாமிகிட்டே கேட்டுக்கிட்டிருக்கார்?"

"உஷ்... மெதுவாப் பேசுங்க... குப்புசாமி தூக்கத்தில் அருள்வாக்கு சொல்லிக்கிட் டிருக்காரே... கவனிக்கலையா?"

- வேதபுரி எஸ். ரமேஷ்

சட்டென முன்னே ஏற்பட்ட இடை வெளியில் முருகேசன் சைக்கிளை உருட்ட நினைத்த நேரம், ஒருவன் முன்னால் பாய்ந்து நடந்தான். அவனைப் பின்தொடர முயன்றாள் ஒரு பெண். அந்த நேரம் வரை யில் சைக்கிளை உருட்ட நினைத்த எத்தனம் செயல் வடிவமாகி, சைக்கிள் மேலே உருள ஆரம்பித்துவிட்டது. அந்தப் பெண்ணின் மீது மோதாமலிருக்க பிரேக்கை அழுத்தி சைக்கிளை நிறுத்திவிட்டு கோபத்தோடு நிமிர்ந்தான் அவன். எதிரே, சினிமா தொடங்குவதற்கு முன் பார்த்த அதே மஞ்சள் பாவாடைக்காரி.

அப்போதுதான் அவளின் முகத்தை முதன் முதலாகப் பார்த்தான் அவன். அவள் அழகாகத்தான் இருந்தாள். அவள் எதுவாக இருக்கலாமென நினைத்தானோ, அதுவாக

இருக்காது என்று சொல்லுகிற அழகுகூட. ஆனாலும், அந்த மனிதன், தான் அதுமாதிரியான ஆள் என்றுதானே அப்போதும் தன் தோற்றத்தால் சொல்லிக் கொண்டிருந்தான்!

முருகேசன் அதுபற்றி மேலும் யோசிக்க விரும்பவில்லை. மேலே செல்ல முனைகிறவள் போய்த் தொலையட்டுமென சிறிது தாமதித்தான். ஆனால், முன்னே செல்லும் தன்னுடன் கூட வந்த அந்த மனிதனைப் பார்த்தபடியே, சைக்கிள் மோத வந்த திடுக்காட்டத்துடன் பின்னால் நகர்ந்து, நின்ற இடத்திலேயே அசையாமல் நின்று கொண்டிருந்தாள் அவள்.

அவனுக்கு அது ஆச்சரியமாக இருந்தது. ஆயினும், மேலே யோசிக்க முடியாதபடிக்கு பின்னால் நெருக்குதல் அதிகமாகவே, சைக்கிளுடன் முன்னேறி வெளியே வந்தான்.

போவதற்கான இடத்தையும், கால அவகாசத்தையும் தான் தாராளமாகக் கொடுத்திருந்தும் அந்தப் பெண் பின்னொதுங்கிய காரணத்தை, குறைந்தபட்சம் அவள் பின்னொதுங்கினாள்தானா என்பதையாவது அறிகிற நோக்கத்தோடு தியேட்டர் வாசலடி டீக்கடை எதிரே சைக்கிளை நிறுத்தி விட்டு டீக்கு ஆர்டர் கொடுத்தான் முருகேசன்.

சற்று நேரத்தின் பின், கேட்டை விட்டு வெளியே வந்த அந்தப் பெண், மெல்ல ஓரமிருந்த மின்கம்பத்தோடு சென்று நின்று கொண்டாள். பார்வை திருட்டுத்தனமாக எதிர்ப்பக்கத்து பஸ் ஹோல்டை எட்டிப் பார்த்துக் கொண்டது.

முருகேசனும் பஸ் ஹோல்ட் நோக்கித் திரும்பினான்.

அங்கே அவளோடு வந்திருந்த அந்த மீசைக்கார மனிதன், அவளைக் காணாததால் போலும் சுற்றிச் சுழன்று அந்த நீள பஸ் ஹோல்ட் முழுவதும் தேடி அலைந்து கொண்டிருந்தான்.

அவனது தவிப்பு அவளுக்கு ஆனந்தமாயிருந்ததோ? அப்படித்தான் தோன்றியது முருகேசனுக்கு. இன்னும், அவள் அங்கே ஒதுங்கி நிற்கவில்லை, மறைந்து நிற்கிறாள் என்ற உண்மையும் அவனுக்குப் புலனாகியது.

டீயைக் குடித்தபடி இருவரையும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான் முருகேசன்.

பஸ் ஹோல்ட் முழுக்கத் தேடியும் அவளைக் காணாது போன அந்த மனிதன், திரும்ப வீதியைக் நெருங்க, தூணோடு மறைந்து நின்றவள் அவனைத் தேடுகிற பாவனையில் எட்டி எட்டி எங்கோ பார்த்தபடி வெளிப்பட்டாள்.

அப்போதுதான் அவனது முகத்தில் ஜீவகளை திரும்பியது. அவளைப் பார்த்து அவன் கோபத்தோடு கத்தினான். அதற்கு அவள் ஏதோ சமாதானம் சொன்னாள்.

அவர்களது பேச்சுச் சப்தம் எட்டும் தொலைவில் முருகேசன் நின்றிருக்கவில்லை. ஆயினும், 'உங்க பின்னாடிதாங்க வந்துக்கிட்டிருந்தேன். திடீர்னு ஒரு தடியன் சைக்கிளைக் கொண்டு வந்து குறுக்க விட்டுட்டான். நீங்க திரும்பிக்கூடப் பார்க்காம விறுவிறுன்னு போய்க்கிட்டிருக்கீங்க. நானும் கூப்பிடத்தான் செய்ஞ்சேன். இந்த இரைச்சலில் அது உங்க காதில விழல போல. சரி, வந்து பார்த்துப்பார் தானென்னு, இங்கனமே நின்னு அழுதுக்கிட்டிருக்கேன்' என்றுதான் அவள் சொல்லியிருக்க வேண்டுமெனத் தெரிந்தது அவனுக்கு. கையசைப்பு, வாயசைவு, கண்ணின் படபடப்பு எல்லாம் அவள் அப்படித்தான் சொன்னாளென்றே அவனை நம்ப வைத்தன.

அந்த மனிதன் ஏதோ முணுமுணுத்தபடி அவளை அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டு முன்னே நடந்தான். அவள் பின் தொடர்ந்தாள்.

அப்போது அவள் கண்களில் பளீர் பளீரென மின்னல் அடித்ததுபோல் ஒரு பிரமை ஏற்பட்டது முருகேசனுக்கு. அவனது பார்வை உன்னித்தது. ஆனால், கணப்பொழுதுள் அந்த மின்னல் தொடர், அவளது கண்களிலிருந்து மறைந்துவிட்டிருந்தது. ஆயினும், அது பிரமையல்ல, உண்மைதான் என்பதை அவளது இதழ்களை இறுக்கிய சிரிப்பில் அவன் துணிந்தான்.

ஒரு சின்னப் பொழுதில் சிறைப்பிடித்த அந்த மெய்ப்பாடு நிஜமெனில், அவள் பற்றித் தான் கொண்ட ஆரம்ப அபிப்பிராயமும் தப்பாக இருக்க முடியாது என அப்போது அவன் உறுதிப்பட்டான்.

அவள் பற்றிய அந்தத் தெளிவு அவனுக்கு மகிழ்ச்சியாக இருக்கவில்லை. ஒரு கிளி கூண்டில் அடைபட்டிருக்கும் - வதக்கப்படும் சோகத்துக்காய் அவனது மனம் அழத்தான் செய்தது. ஆனாலும், அந்தக் கிளி தொடர்ந்தும் கூண்டுக் குள்ளிருந்து அழிந்து கொண்டிருக்காதென்று மனத்துள்ளிருந்து ஒரு குரல் ஆறுதல் சொன்னது.


ஆம், அந்த மனிதனிலிருந்து அவள் விலகியிருந்த பொழுதுகள், ஒரு முழு விடுதலைக்கான அவளின் ஒத்திகையாகவும் இருக்கலாம்தான்.

அந்தளவில், அந்த விஷயத்துக்கு அவன் முற்றுப்புள்ளியிட்டான்.

ஆள்களில் மட்டுமின்றி ஆடைகளிலும் பாவம் பார்க்க முடிந்ததில் அவனுக்கு அன்றைய தினம் ஒரு வெற்றி.

அந்தப் பெருமிதத்துடன் முருகேசன் சைக்கிளை எடுத்தான்.

பெறுவீர் சான்மேக் கி:ப்ட் கார்டு.



5 வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி
சான்மேக் சிட்ஸ் அளிக்கும் சிறப்புச்சலுகை

சான்மேக் கிஃப்ட் கார்ட்

எந்தவொரு சீட்டு குரூப்பிலும், சேரும் ஒவ்வொரு சந்தாதாரரும் பெறும் சிறப்புரிமை இது.

இந்த கிஃப்ட் கார்ட் பெறுவதைத் தொடர்ந்து சான்மேக் சிட்ஸிலிருந்து மட்டுமின்றி மற்ற சான்மேக் குரூப் நிறுவனங்களிடமிருந்தும் பலப்பல பயன்களை பெறலாம்.

அறிமுகம்

விசேஷ சீட்டு குரூப்புகள் ரூ.10,000 முதல் ரூ.5 லட்சம் வரை ஒவ்வொரு சந்தாதாரருக்கும் பரிசு உண்டு.

சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

தலைமை அலுவலகம்

'லஷ்மி டவர்ஸ்', 27, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, (எல்லோ பேஜஸ் அருகில்), மயிலாப்பூர், சென்னை-600 004 போன்: 8258637, 8251232.

கிளை அலுவலகங்கள்: சென்னை: அண்ணா சாலை, போன்: 8520921 • தி.நகர், போன்: 8278515. • அசோக்நகர், போன்: 4824757 • மயிலாப்பூர், போன்: 4992488 • அண்ணாநகர் மேற்கு, போன்: 6214454 • மேற்கு தாம்பரம், போன்: 401934 (PP) • புரசைவாக்கம், போன்: 6425036 • மதுரை போன்: 23334 • கோயம்புத்தூர் போன்: 46375 • திருச்சி போன்: 25324 • திருவண்ணாமலை போன்: 22922, 23333 • கும்பகோணம் • திருநெல்வேலி: போன்: 322032. • திருப்பதி போன்: 24376.

BID FOR A BETTER LIFE

தலைகீழாக மாறிய காஷ்மீர்!

காஷ்மீரின் கோடைக்காலத் தலை நகரம் ஸ்ரீநகர், மயங்கிக் கிடக்கிறது. குழந்தைகளின் முகங்களிலிருந்து சிரிப்பு பறிக்கப்பட்டு, மாயமாய் மறைந்து விட்டது. பள்ளிகளில் ஆண்டு விழாக்கள், கடந்த காலச் சொப்பனங்களாகி விட்டன! நோயாளி, கனமான போர்வைக்குள் முடங்கிக் கொள்வது போல, மாலை ஆறு மணிக்கே நகரம் அடங்கிப் போய்விடுகிறது. கடைகளின் கதவுகளெல்லாம் மூடப்பட்டு விடுகின்றன. தெருக்களெல்லாம் வெறிச்சென்று காணப்படுகின்றன. சாலைகளில் விளக்குகள் எரிவதில்லை. வாகனங்களும் விளக்கில் போவதில்லை.

'ரோஜா' படத்தைப் பற்றிக் காஷ்மீரில் நிறையப் பேர் அறிந்திருக்கிறார்கள். ஆனால், தீவிரவாதிகள் சினிமா தியேட்டர்களுக்கும், வீடியோ லைப்ரரிகளுக்கும் தடை விதித்திருக்கிறார்கள். இவை மட்டுமல்ல; கலை நிகழ்ச்சிகள், மன்றங்கள், அழகு நிலையங்கள், மதுக்கடைகள் என் பலவை கூடத் தடை செய்யப்பட்டவற்றில் அடங்குகின்றன! சீட்டு விளையாடுவது கூடத் தவறாகக் கருதப்படுகிறது.

ஒருமுறை ராணுவ அதிகாரிகள் வீடு-வீடாகச் சோதனைச் செய்தபோது, காஷ்மீர் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் வீட்டில் வீடியோ கேஸட்டுகளைப் பார்த்தார்கள். ''எங்கள் வீட்டில் கேஸட்டுகளைப் பார்த்ததாகத் தயவு செய்து வெளியில் சொல்லி விடாதீர்கள்!'' என்று அந்த வீட்டு அம்மாள் கண்ணீர் விட்டுக் கெஞ்சினார்.

● கவனிப்பாரற்றுக் கிடக்கும் படகு வீடுகள்







காஷ்மீரத்திலுள்ள தால் ஏரியில் இன்று புல்லும் பூண்டும் நிறைய மண்டிக் கிடக்கின்றன. ஒரு காலத்தில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்த படகு வீடுகள் இன்று கேட்பாரற்று, கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

மொகம்மது அமீன் மீர் என்பவர் இரண்டு படகு வீடுகள் வைத்துக் கொண்டு கோடைக் காலத்தில் ஒரு லட்சம் ரூபாய் சம்பாதித்தவர். இன்று ஜீலம் நதிக்கரையில் தினமும் முப்பது ரூபாய் கூலி வாங்கவே அரும்பாடு பட்டுக் கொண்டு இருக்கிறார். மழையோ, பனியோ பெய்தால் இந்தக் கூலி கூட அவருக்குக் கிடைப்பதில்லை.

''முன்பு ஆறுமாதம் படகு வீட்டிற்கு கிராக்கி இருக்கும். மீதி ஆறுமாதம் தூங்குவோம். இப்போது வாரத்திற்கு மூன்று நாட்கள் ஊரடங்கு உத்தரவு. ஹர்த்தால், ரகளை என்று அடங்கிக் கிடக்கவேண்டி இருக்கிறது'' - என்கிறார் அமீன்.

தால் ஏரியில் 250 ஆண்டுகளாகச் சுமார் 2000 பேர், படகு வீடுகளை வைத்துப் பரம்பரையாகப் பிழைத்துக் கொண்டிருந்தார்கள். இவர்களில் சுமார் நூறு பேர் இப்போது டூரிஸ்ட் ஏஜென்சி நடத்தத் தொடங்கி விட்டார்கள். மற்றவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் காலம் கடத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

1989-ல் ஸ்ரீநகரிலும், பதகாம் மாவட்டத்திலும் நாலாயிரம் டாக்ஸிகள் ஓடிக் கொண்டிருந்தன. இன்று ஆயிரத்து எழுநூறாகக் குறைந்து விட்டன.

காஷ்மீரில் கொடுமைகள்	1990	1991	1992	1993	மொத்தம்
கொல்லப்பட்ட தீவிரவாதி களின் எண்ணிக்கை	550	844	819	1310	3523
தீவிரவாதிகளால் கொல்லப் பட்ட அப்பாவி மக்கள்	461	382	634	747	2224
கொல்லப்பட்ட படை வீரர்கள்	154	168	177	195	694
'வெடிகள்' சம்பவங்கள் (Explosions)	1522	677	757	1005	3961
ராக்கெட் தாக்குதல்கள்	45	165	105	71	386
கடத்தல் சம்பவங்கள்	169	290	281	349	1089

- ஆதாரம்: இ-வீக்; தகவல் :ப.கணேஷ்ராகவன்

படகு வீடு வைத்திருந்த ரஷீத் என்பவர், இப்போது டாக்சி ஓட்டிப் பிழைத்து வருகிறார். அவருடைய வண்டியில் இரண்டு அமெரிக்க தாவரவியல் அறிஞர்கள் பயணம் செய்ய, ஒரு தீவிரவாதக் குழு அவர்களைக் கடத்திக் கொண்டு போய் விட்டது. அவர்களை விடுதலை செய்யத் தீவிரவாதிகள் ஐந்து லட்சம் ரூபாய் பணயத்தொகை கேட்டார்கள். நல்ல வேளை, மற்றொரு தீவிரவாதிகளின் கூட்டம், முந்தைய கூட்டத்தாரிடமிருந்து அவர்களை விடுவித்தார்கள். ''பல தீவிரவாதக் குழுக்களை விட ராணுவத்தினர் ரொம்பவும் மோசம்!'' என்கிறார் ரஷீத்.

மொகம்மது அயூப்கான் என்ற தையற்காரருக்கு நிறைய இந்துக்கள் வாடிக்கையாளர்கள். இப்போது இந்துக்கள் நிறைய பேர் நகரை விட்டுப் போய் விட்டதால் அவர் வேலை வெட்டி இல்லாமல் கம்மா ஈ ஓட்டிக் கொண்டு இருக்கிறார். போதாததற்கு, அவருடைய கடைக்குப் பக்கத்திலேயே ராணுவ வீரர்கள் தங்கும் புதை குழி ஒன்றும் தோண்டப்பட்டுள்ளது. எட்டுப் பேரை வேலைக்கு வைத்துக் கொண்டு இருந்த அயூப்கான், இப்போது தினமும் இரண்டு சீருடைகளை ரிப்பேர் செய்தாலே அதிசயம் எனலாம்.

ஸ்ரீநகரில் பெரும்பாலான வியாபாரங்கள் படுத்துப் போய்விட்டன. பல ஏஜென்சிகள் தமது கிளைகளை ஜம்முவிற்குக் கொண்டுபோய் விட்டன. பல பாங்குள் தமது கிளைகளை மூடி விட்டன. கிரெடிட் கார்டுகளைச் சீந்துவார் இல்லை. திறந்திருக்கும் ஒரு சில பாங்குகளில் மக்கள் நீண்ட 'கியூ' நிற்கிறார்கள். STD, ISD-பூத்துகளெல்லாம் கண்ணுக்கே தெரியவில்லை. கூரியர் சர்வீசுகள் நடக்கின்றன. ஆனால், அவைகூட பொருள்களை விமானத்தில் அனுப்பி வைப்பதில்லை.

அப்பாவிற்கும் மகனுக்கும் இடையில் இன்று நம்பிக்கை, பாசம் குறைந்து கொண்டு வருகிறது. ''பையனை வேலை செய்ய வெளியில் அனுப்பினால் அவன் தீவிரவாதி என்று ராணுவ வீரர்கள் அடித்துக் கொன்று விடுகிறார்கள். பையனை வீட்டிலேயே வைத்திருந்தால், தீவிரவாதிகளின் துப்பாக்கியும் வன்முறையும் அவனைக் கவர்ந்து இழுத்துத் தீவிரவாதியாக்கி விடுகின்றன''- என்கிறார் தமது மகனின் எதிர் காலத்தைப் பற்றி ஒன்றும் புரியாத சப்ரி.

ஷெபத் அஹமத் என்ற இளைஞர் புகழ்பெற்ற பார்ன்ஹால் ஆண்கள் பள்ளியில் படித்த மாணவன். ''என்று நான் தீவிரவாதிகள் இயக்கத்தில் சேர்ந்தேன் என்றே தெரியவில்லை. இன்று என் ரத்தத்தில் தீவிரவாதம் கலந்து விட்டது''- என்கிறார். ஜம்மு-காஷ்மீர் விடுதலை இயக்கத்திலுள்ள பெரிய தலைவர்கள் பலர், மாணவப் பருவத்தில் மிகச் சிறந்த புத்திசாலிகளாக இருந்தவர்கள் தான்!

கொலை, கொள்ளை, கற்பழித்தல் என்று மோசமான செயல்களைச் செய்யும் தீவிரவாதிகளும் இருக்கிறார்கள். ஆனால், இராணுவத்தினர் செய்த அட்டூழியங்களால்- அப்பாவி மக்களைத் துன்புறுத்தியதால்- பெண்ணிடம் தவறாக நடந்து கொண்டதால் - தீவிரவாதத்தில் இறங்கியவர்கள்தான் அதிகம்.

''பகல் நேரத்தில் ராணுவ வீரர்கள் முரட்டுத் தனமாக, மிகவும், கொடூரமாக நடந்து கொள்கின்றனர் என்றால், இரவில் மதுவைக் குடித்துவிட்டு மிகவும் மோசமாக

நடத்துக் கொள்கிறார்கள்'' என்கிறார் ரெசிடென்சி ரோட்டிலுள்ள ஒரு கடைக்காரர்.

அண்மையில் திடீரென்று கடைத் தெருவே அல்லோலகல்லோலப்பட்டது. ராணுவ ஜீப் வண்டிகளின் நீண்ட அணி ஒன்று வந்தது. விசாரித்தபோது, ஒரு ராணுவ அதிகாரி தமது உடைகளை வாங்கிக் கொண்டு போகக் கடைக்கு வந்திருந்தார். அவருக்குப் பாதுகாப்பாக அந்த ஜீப்புகள் வந்தன என்று தெரியவந்தது!

ஒரு புறம் தீவிரவாதிகளின் பல குழுக்கள் இயங்கிக் கொண்டு இருக்க, மற்றொரு புறம் பாகிஸ்தானத்து ஏஜண்டுகள், பாலஸ்தீனக் கொரில்லாக்கள், ஆஃப்கானிஸ்தானத்துக் கொலையாளிகள் என்று 'விருந்தாளி' தீவிரவாதிகளின் தொல்லைகள் சகிக்க முடியவில்லை.

ஷேக் முக்தியார் அஹமத் என்பவர் வழக்கொன்றில் பன்னிரண்டு லட்சம் ரூபாய் ஜெயித்தார். தீவிரவாதிகள், முக்தியாரின் எதிரிக்கு ஆதரவாக இருக்கிறார்கள். அதனால், நீதிமன்றத் தீர்ப்பு இன்னும் செயல்படாமல் தூங்கிக் கொண்டு இருக்கிறது.. அரசாங்கத்திற்கு இணையாகத் தீவிரவாதிகள் நீதிமன்றம் நடத்துகிறார்கள்.

தவறு செய்யும் தீவிரவாதிகளுக்குச் சில சமயங்களில் தண்டனையும் வழங்கப்படுகிறது. ஆர்வானி என்ற ஊரில் இரண்டு காதலர் சேர்ந்து இருந்ததைக் கண்ட தீவிரவாதி ஒருவன் அவ்விருவரையும் கொன்று விட்டான். காதலரின் பெற்றோர் தீவிரவாதி சேர்ந்திருந்த ஹிஸ்பால் குழுத் தலைவனிடம் சென்று முறையிட்டனர். நியாயம் கேட்ட குழுத்தலைவன், காதலர்களைக் கொன்ற தீவிரவாதிக்கு மரண தண்டனை விதித்தான்.


மூவாயிரம் பேர் மூன்று ஆண்டுகளாகச் சிறைகளில் போலீஸாரால் எந்தவித விசாரணையும் இன்றி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

உயர்நீதி மன்றத்தில், 'கைது செய்தவரைக் கொண்டு வந்து நேரில் காட்டுங்கள்' என்று கேட்கும் எட்டாயிரம் ஹேபியஸ் கார்ப்பஸ் மனுக்கள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. ''இது மாதிரியான வழக்குகளில் மெதுவாகத் தீர்ப்புச் சொல்லுமாறு நீதிபதிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது'' என்கிறார் கதூம்.

அரசாங்க அலுவலகங்கள் எல்லாம் ஆடிப்போய் நின்று விட்டன. இருந்தாலும், புகழ் பெற்ற சினார் மரம்போல காஷ்மீரும் மறுமலர்ச்சி பெறும் என்றுதான் மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

- 'தி வீக்'கிலிருந்து:

சேலம் சக்திக்கொடி



● அமெரிக்க நிறுவனம் ஒன்று வீடியோ மற்றும்; கம்ப்யூட்டருடன் இணைந்து இயங்கும் ஒரு குத்துச் சண்டைப் பையைக் கண்டுபிடித்துள்ளது. மனித வடிவில் தொங்க விடப்படும் இந்த மணல் பையில் தோள், கன்னம், நெற்றி என்று பல இடங்களிலும் ஸென்ஸார்கள் பொருத்தப்பட்டுள்ளன. சண்டை பழகுபவர், இவற்றைக் குத்தும்போது அவர் வலிமையும் திறமையும் ஸென்ஸார்களால் உணரப்பட்டு அவற்றின் அளவு கோல்கள் கம்ப்யூட்டரில் பதிவாகின்றன. டி.வி. திரையில் 'ஆக்ஷன் ரீப்ளே' பார்த்து தன்னைத் திருத்திக் கொள்ளவும் செய்யலாம்.

● நியூயார்க்.

உலகப் புகழ் பெற்ற எம்பயர் ஸ்டேட் கட்டடத்தில் முதல் 82 மாடிகளுக்கு 1575 படிகள். இதனை ஒரே மூச்சில் ஏறி, ஆல் வாக்கி என்ற அமெரிக்கர் 1984 ல் புரிந்த சாதனை இன்று வரை முறியடிக்கப்படவில்லை. அவர் எடுத்துக் கொண்ட நேரம் எவ்வளவு தெரியுமா? 11 நிமிடம், 29 வினாடி!

- ஆலன்

ஆதாரம் : இந்து



14

எனக்கு மூன்று மனங்கள்
மூன்று கருங்குருவிகள் இருக்கும்
மரம் போல்

- ஸ்டீவன்ஸ்.

ராத்திரி கார் கதவு சார்த்தும் வரை சாப்பிடாமல் காத்திருந்தேன். கீழே உற்சாக மான குரல்களில் 'பை பை'யும் அதன் பின் தாழ்ந்த குரலில் சொன்ன ஜோக்குக்காக நீதா சிரித்ததும் கேட்டது. பூட்ஸ் ஒலிக்க வந்து, ''அம்மா, ரேகா தூங்கியாச்சா?'' என்றார்.

''இல்லை. இன்னம் சாப்பிடக்கூட இல்லை.''

''நீங்க?''

''நாங்க சாப்பிட்டாச்சு. எங்களால கோவித்துக் கொண்டு சாப்பிடாமல் இருக்க முடியாது.''

''எடுத்துப் போடு'' என்றார் அர்ஜுன் என்னும் என் கணவர்.

நான் மௌனமாக இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க, அவர் வந்து படுத்த போது கூட என்னிடம் பேச வில்லை. என் பிடிவாதத்தைத் தொடர் வதா, இப்போதே பேசி விடுவதா என்று தீர்மானமில்லாமல் இருந்தேன். அவர் எப்போதும் போல் க்ராஸ்வேர்டு போட்டு விட்டு, எகனாமிக் டைம்ஸைப் பார்த்து விட்டு, விளக்கணைத்துப் படுத்தார்.

நான் இருட்டில் கேட்டேன்.

''சாப்பிட்டாச்சா?''

''நீ இன்னும் முழித்துக் கொண்டிருக் கிறாயா?''

''தெரியாதா உங்களுக்கு?''

''சாப்பிட்டாச்சு.''

''நான் சாப்பிட்டேனா, காத்திருக்கி றேனா... கேட்க வேண்டாமா நீங்கள்?''

''நீ இன்னும் சாப்பிடவில்லையா? போ.... போய்ச் சாப்பிடு'' என்றார்.

''எனக்குச் சாப் பாடு வேண்டாம்.''

''ப சி வி ல் லையா?''

''அன்பு இல்லை.''

''அன்புக்கும் சாப்பாட்டுக்கும் என்ன சம்பந்தம்? லுக் ரேகா! டோண்ட் சென்டி மெண்டலைஸ். அப்பா, அம்மாவுடன் உனக்குச் சரிப்பட்டு வரவில்லையென்றால், கூடிய சீக்கிரம் அவர்களை ஊருக்கு அனுப்ப முயற்சி செய்கிறேன். அதற்கென்று ஒரு ராத்திரியிலேயே முடியாது.''

''அவர்கள் இங்கே இருக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை.''

''பின் என்ன ப்ராப்ளம்?''

''ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல'' என்று படுத்துக் கொண்டேன்.

பசித்து முடிந்து கண்ணைப் பஞ்சடைத் தது. கோபம் வேறு சேர்ந்து கொண்டிருந் தது.

''இந்த மாதிரி தினம் தினம் சீன் க்ரியேட் பண்ணிக் கொண்டிருந்தால் என் னால் நிம்மதியாக ஆபீஸ் போக முடியாது.''

''உங்களுக்கென்ன, ஆபீஸில் ஒரு மனைவி. வீட்டில ஒரு மனைவி.''

''இதுக்காக நான் கோபித்துக் கொள்ள வேண்டும். ஒரு நல்ல தினத்தைக் கெடுத்துக் கொள்ள விரும்பவில்லை. பாரு, என்னைச் சரியாக புரிந்து கொள். நீ உடன் வரவில்லை என்பதற்காக நான் என் சந்தோஷத்தை ரத்து செய்ய வேண்டும் என்றால், அது நடக்காது. எனக்கு அவ்வப்போது தமாஷான படங் களைப் பார்த்தால் தான் ரிலாக்ஸேஷன் கிடைக்கும். தெரியுமா? அந்தப் படம் என் வளவு தமாஷாக இருந்தது. தெரியுமா? நீ வந்திருக்க வேண்டும். நீதாவும் நானும் சிரித்துச் சிரித்து நான் மறுபடி உன்னை அழைத்துப் போவதாக நீதாவிடம் சொல்லி யிருக்கிறேன். நீயும் பார்க்க விரும்பினால் பிக்கியுடன் போகலாம். பிக்கி இன்னும் பார்க்கவில்லை.''

''பிக்கி பிக்கியெல்லாம் வேண்டாம்!'' என்றேன்.

''ஏன்? அதில் என்ன தப்பு? ஈக்வல் ரைட் டியர் கேர்ள். நான் நீதாவுடன் சினிமா பார்க்கலாம், நீ பிக்கியுடன் பார்க்கக் கூடாது என்று எந்த சாஸ்திரம் சொல் கிறது?''

''இ ர ண் டு ம் வேறு'' என்றேன்.

என் முகத்தைத்

சுஜாதா

திருப்பி, ''ஓக் ரேகா! எதுக்காகக் கஷ்டப்பட்டு உன்னை துக்கத்தில் ஆழ்த்திக் கொள்கிறாய்? வாழ்க்கையில் கோபப்பட எத்தனையோ சமாசாரங்கள் உள்ளன. இப்போது எதற்குக் கோபம் என்றே தெரியவில்லை. எதற்குக் கோபம்?''

நான் அவர் மார்பில் சாய்ந்து கொண்டு, ஒரே ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டேன். எனக்குள் இருந்த எச்சரிக்கை உணர்வு இதற்கு மேல் கோபித்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னது. ஓர் அளவுக்கு மேல் கோபித்துக் கொள்ள எனக்கு உரிமை இல்லை போலவும் தோன்றியது. இந்த மனுஷனை எப்படி வழிக்குக் கொண்டு வருவேன் என்று மலைப்பாக இருந்தது.

''வழிக்கு கொணடு வருவது'' என்பதே என்ன என்பதைப் பற்றியே குழப்பங்கள் இருந்தன. அவர் விளக்கை அணைத்ததும் என் உடலின் மேல் எடுத்துக் கொள்ளும் சுதந்தரங்களைத் தேவைப்பட்ட அளவுக்கு அனுமதிப்பதின் மூலமா இல்லை எதிர்ப்பதன் மூலமா? அவர் மனசுக்கு நிம்மதி தருவதன் மூலமா இல்லை நிம்மதியைக் கலைப்பதன் மூலமா? இதையெல்லாம் அம்மா சொல்லிக் கொடுக்காமல் டின்னர் செட்டையும் டில்டிங் கிரைண்டரையும் வாங்கிக் கொடுத்துக் கல்யாணம் பண்ணி அனுப்பி விட்டாளே, இதெல்லாம் எந்தப் பள்ளியில் யார் சொல்லிக் கொடுப்பார்கள்?



காலை எழுந்த போது அவர் படுக்கை காலியாக இருந்தது. யாரோ பம்பாயிலிருந்து வருகிறார்கள் என்று மீனம்பாக்கத்துக்குப் புறப்பட்டு விட்டார். தூக்கத்தில் ஏதோ சொன்னதும் அவர் அவசரமாக என் கன்னத்தில் ஒத்தின முத்தத்துடன் ஞாபகம் வந்தது.

அவசரமாக எழுந்த போது, மாமியார் காப்பி போட்டுக் கொடுக்க, மாமனார் என்னைக் கண்டதும் வேறு அறைக்கு இருக்கையை மாற்றிக் கொண்டார். நான் நேராகச் சமையல் அறைக்குச் சென்ற போது, மாமியார் என்னைத் தொடர்ந்து வந்து, ''ரேகாம்மா, நீ என் பெண் போல. உன்னிடம் சொல்ல வேண்டும், ஒன்று கேட்க வேண்டும்!'' என்றார்.

''நான் இன்னும் பல் தேய்க்கக்கூட இல்லை. இப்போது ஏதாவது விவாதத்தை ஆரம்பிக்க வேண்டுமா?'' என்றேன்.

''விவாதத்துக்கு இல்லை. உன்னோட சாதாரணமாப் பேசத்தான்.''

பல்தேய்த்து விட்டு வர எனக்கு காப்பி கலந்து கொடுத்தார். மெதுவாகவே நான் அருந்த பிரேமா மாமி என் எதிரே உட்கார்ந்து கொண்டு, ''நேற்று நீ என்னைக் கேட்ட கேள்வியைப் பத்தி யோசித்துப் பார்த்த போது, எனக்கு நியாயம் இருந்ததாகப்பட்டது'' என்றார்.



இப்படியும் ஒரு போராட்டம்!

பிரான்ஸில் வாரத்துக்கு 39 மணி நேரம் வேலை என்பதை 32 மணி நேரமாகக் குறைக்க பிரதமரே ஆதரிக்க, செனட் பரிந்துரை செய்கிறது.

ஜெர்மனியிலும் தொழிலாளர்களின் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என அரசியல்வாதிகளும் தொழில் துறையும் பொருளாதார நிபுணர்களும் கூறுகின்றனர்.

கருணையினால் அல்ல; வேலை நேரத்தைக் குறைப்பது படிப்படியாக அமுல்படுத்தப்படும் ஊதிய வெட்டுதான் என்கின்றனர் தொழிலாளர்கள்.

சில மேல் நாடுகளில் பொருளாதாரச் சீர்குலைவு அந்த அளவுக்கு உள்ளது. வேலை நேரத்தையும் கூடவே ஊதியத்தையும் குறைக்க அனுமதியுங்கள்; இல்லையேல் வேலையையே இழக்க நேரிடும் என்கின்றன தொழிலக நிர்வாகங்கள்.

– மாடன்

ஆதாரம் : 'அலைவ்' இதழ்

''நான் என்ன கேட்டேன்?''

''ரொம்ப விஷயமாக'' என்றார்.

''அது ராத்திரியே சமாதானமாய்டுத்து.''

''இருந்தாலும் அந்தப் பெண்ணை அதிகம் கிட்டே சேர்க்காமல் நீ ஓர் அளவுக்குள் வைத்துக் கொள்வது நல்லது. அப்பாவின் குணம் மகனுக்கும் இருக்கலாம் இல்லையா?''

''என்ன சொல்கிறீர்கள்?''

''அவர் சின்ன வயசில் கொஞ்சம்....'' சரியான வார்த்தைக்கு சற்று தவித்து விட்டு, ''ரகளை பண்ணியவர். அது எங்கேயாவது வம்சத்தில் ஒட்டிக் கொண்டு இருக்கலாம். அதனால்தான் நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'' என்றார் என் மாமியார்.

நான் வியப்புடன் அவரைப் பார்க்க, ''என்ன பார்க்கிறாய்? தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறுதானே! அதை விட மனசு வேறு. என் பிள்ளை மேல் எனக்கு நம்பிக்கைதான். ஆனால் தினம் வீட்டுக்கு வந்ததும் நாம் இருவரும் சண்டை போட்டுக் கொண்டு புகார் கொடுத்தால் அவன் என்ன பண்ணுவான்? கிளப்பு கிப்பு என்று போய்த் திரும்பி வர லேட் பண்ணுவான். அதிலிருந்து வினை ஆரம்பிக்கும்.''

''இப்போதே கிளப்புக்கு போகிறாரே அம்மா.''

''அது வந்து ஞாயிற்றுக் கிழமைதான் போவான். இப்ப போகிறானா என்ன?''

''தினம் தவறாமல் போகிறார். ஹனிமூன் போது கூட சீட்டாடினார்.''

''நான் கேக்கறேன். வெச்சு விளாசறேன் அவனை. பாவம் குழந்தை, உன் மனசு எவ்வளவு துடித்துப் போயிருக்கும்!''

''வேண்டாம், கேட்டாக்க. அது ஒரு பாட்டம் சண்டை போட்டாச்சு. இப்போது அது எனக்குப் பழகி விட்டது.''

''எதுக்குப் போறானாம்?''

''என்னவோ அவர் வாழ்க்கையில சம்பாதிக்கப் போறாராம். ஒரு லட்சியமாம், அதனால் அதை அடைஞ்சதும் எல்லாத்தையும் விட்டுருவாராம். அதனால எல்லா விதமான சூதாட்டமும் அவருக்கு இஷ்டம் என்று தெரிகிறது.''

''விட்டுருவான். சொன்ன சொல் தவற மாட்டான். ஆனா சம்பாதிக்கக் காட்டிருவான் பாரு. கெட்டிக்காரன். புடிச்சான்னா விடமாட்டான். இந்தப் பழக்கம் எங்கிருந்து வந்தது?''

''தாத்தா கித்தா யாராவது உண்டா?'' என்றேன்.

மாமியார் என்னை நிமிர்ந்து பார்த்து, ''கேலியா சொல்றயா? எங்க குடும்பம் வசதியான குடும்பம்மா. சிரஸ்தார் நாகராஜன் இப்பவும் கோயமுத்தூர்ல டாடா பாத்லு பிரசித்தம். எதுக்கும் நாம ரெண்டு பேரும் ஒத்துமையா இருக்கலாம் கண்ணு. என் பொண்ணு மாதிரி நீ. காயத்ரியும் நீயும் ஒண்ணுதான் எனக்கு.''

''அவர் என்னவோ நீங்க சீக்கிரமே ஊருக்குப் போறாப்பல சொன்னார்'' என்றேன்.

''அப்படி சொன்னானா என்ன?'' என் நாள் முகம் சுருங்கி.

எனக்கு ஏண்டாப்பா அதைச் சொன்னோம் என்று உடனே தோன்றியது. மனம் புண்பட்டிருக்கும். ''சரியாச் சொல்லலை. நீங்க அவரையே கேட்டுருங்கோ'' என்றேன்.

''அவன் கிடக்கான். நீ நாங்க போகணும்னு விரும்பறயா?'' என்றார்.

''நீங்க போறதும் இருக்கறதும் உங்க இஷ்டம்மா. இது உங்க வீடு.''

''இது உன் வீடும்மா.''

''இல்லை.. இன்னும் இல்லை'' என்றேன்.

குளிக்கப் போனேன். ஜோவுக்கு போன் பண்ணிய போது அவருக்கு மீட்டிங் இருப்பதாகவும் சாயங்காலம் சீக்கிரம் ஆபீசிலிருந்து வருவதாகவும் சொன்னான்.
''எங்க போகணும்?''

''எங்கயாவது.''

மெல்ல குளித்து விட்டுச் சமையலை முடித்து, மத்யானம் கொஞ்சம் தூங்கி விட்டு, கால் நகங்களுக்குச் சிவப்பு பாலிஷ் போட்டுக் கொண்டு, இதுதான் என் வாழ்க்கையா என்று சற்று யோசித்து விட்டு, மாலை ட்ரஸ் பண்ணிக் கொள்ள, ஜோ என்னை அழைத்துச் செல்ல வந்தான். அவனுடன் மிக்கியும் வந்திருந்தான். ஜோ காதிக் ராஃப்ட்டில் யாரோ ஒரு விசிட்டருக்கு பரிசுப் பொருள் வாங்க வேண்டும் என்று அர்ஜுன் சொல்லியிருப்பதாக நடுவில் இறங்கிக் கொள்ள, ஜோவின் ஃப்ளாட்டுக்குப் போனோம்.

மிக்கி என்னிடம் ரொம்ப மரியாதையாக இருந்தான். அவன் புத்தகங்களைக் காட்டினான். ''உங்களுக்கு வாலஸ் ஸ்டீவன்ஸ் எல்லாம் பிடிக்குமாமே? ஜோ சொன்னான், எனக்கும் பொதுவாக பொயட்ரி என்றால் பிடிக்கும்.''

எனக்கு அமெச்சர் தியேட்டரில் நடிக்க ஆசையா என்று கேட்டான்.

''எனக்கு நடிக்கத் தெரியாது'' என்றேன்.

''டில்லியில் படித்திருக்கிறீர்கள். டில்லிப் பெண்கள் எல்லாம் படு ஸ்மார்ட் என்பார்கள்.''

டில்லியில் படித்த சதாரணப் பெண்களில் நான் ஒருத்தி. பிறந்ததிலிருந்தே கல்யாணத்துக்குத் தயார் செய்யப்பட்டவள்....'' என்றேன்.

மிக்கி, ''இப்போது நீங்கள் சொன்னதே ஒரு கவிதை போல!'' என்றான்.

லைப்ரரியில் நிறைய சுவாரஸ்யமான புத்தகங்கள் இருந்தன. நான் ரொம்ப நாள் படிக்க ஆவலாக இருந்த ஸ்டீவன்ஸின் ''கருங்குருவியைக் காண பதின்மூன்று வழிகள்'' என்கிற கவிதையை அமெரிக்கன் லிட்டரேச்சர் சர்வேயிலிருந்து எடுத்துக் காட்டினான். ''ஜோ சொன்னான், உங்களுக்கு இந்தக் கவிதை பிடிக்கும் என்று!''

நான் அதைப் புரட்டிப் பார்க்கும்போது அதிலிருந்து

I was in three minds
Like a tree
In which there are three black birds.

என்ற வரிகளைப் படித்துக் காட்டும் போது, மிக்கி என்னை கட்டிப் பிடித்தான்.

(தொடரும்)



''சென்னையிலேர்ந்து கிளம்புகிற அத்தனை விமானங்களும் ஒருமணி நேரம் தாமதமாகப் புறப்படும்னு அறிவிப்பு செய்யறாங்களே, ஏன்?''

''முதல்வர் ஹெலிகாப்டர்ல போயஸ் கார்டனிலிருந்து கிளம்பப் போறாங்களாம்.''



போலீஸ் கமிஷனரின் அறிக்கை:

''முதலமைச்சர் ஹெலிகாப்டரில் செல்லும் போது யாரும் வீட்டு மொட்டை மாடியில் நின்று வேடிக்கை பார்க்கக்கூடாது என்று எச்சரிக்கப்படுகிறார்கள். குறிப்பாக மைலாப்பூர், திருவல்லிக்கேணி பகுதியில் உள்ள மாமிகள் வடாம், வத்தல் வைக்கும் சாக்கிலோ, காயவைக்கும் சாக்கிலோ மொட்டை மாடியில் கண்டிப்பாக நிற்கக் கூடாது.''

● ● ● ● ●

''ஏன் முதல்வர் ரொம்பக் கோபமா இருக்காங்க?''

''மத்திய அரசு கவர்னர்களுக்கும் ஹெலிகாப்டர் வாங்க நிதி ஒதுக்கி இருக்காம்!''

- அஸ்வினி குமாரன்



ஸ்ரீராம் சிட்ஸ் வழங்கும்



ஒரு லட்சியம், அதை அடையும் ஆர்வம், அதற்கான உழைப்பு, வைராக்கியம்... வெற்றியின் பின்னணியில் இருப்பவை இவை. தவிர, தேவைப்படும் நிதியுதவியைப் பெறும் வாய்ப்பும் அவசியம்.

சீட்டு விழா முடிவு தேதி
14 ஏப்ரல், 1994.



வெற்றி பெறுவோருக்கே வாய்ப்புகள் கூடுகின்றன!



இந்த மகத்தான மக்கள் இயக்கம் உங்களுக்கு அளிப்பது — கௌரவமான முறையில் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ளும் வாய்ப்பு. தேவைகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப விரைவாகப் பணத்தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வசதி.

ஸ்ரீராம் சிட்ஸ் துணையுடன் 7 லட்சம் சந்தாதாரர்கள் பயனடைந்துள்ளார்கள். இன்றே நீங்களும் ஸ்ரீராம் குடும்பத்தில் உறுப்பினர் ஆகுங்கள். வெற்றிக்கு வழிகாணுங்கள்.

தவிர, சேரும் ஒவ்வொரு சீட்டுக்கும் ஒரு பரிசும் பெற்றுச் செல்லுங்கள் — எப்போதும்போல.

ரூ.75,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுப்பவர்களுக்கு, பொதுத்துறை அல்லது தனியார் துறை அல்லது அரசுப்பணி அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் மூன்று பேர் உத்தரவாதம் அளித்தால் போதுமானது.

அறிமுகப்படுத்துவோர் பரிசு இப்போதுள்ள சந்தாதாரர்களுக்கு மட்டுமே.

Shriram
Group Companies
ALL INDIA DEPOSIT MOBILISATION DRIVE IS ON.

வ. எண்	சீட்டின் மதிப்பு* ரூ.	சந்தாதாரர் பரிசு	அறிமுகப்படுத்துவோர் பரிசு
1.	250 x 40 = 10,000/-	3 கிராம் வெள்ளிக் காசு	எஸ்.எஸ். டம்ளர்
2.	500 x 30 = 15,000/-	மூடியுடன் கூடிய எஸ்.எஸ். டேபா	எஸ்.எஸ். டம்ளர் – 2
3.	625 x 40 = 25,000/-	எஸ்.எஸ். லஞ்ச் செட்	எஸ்.எஸ். இட்லி தட்டு மற்றும் கப் & ஸ்பூன்
4.	500 x 60 = 30,000/-	எச்.எம்.எஸ்.எஸ். அலுமினியம் கிளாட் மல்டிபாட்	எஸ்.எஸ். கன்டெய்னர்
5.	1,000 x 50 = 50,000/-	காளி குடம் (C.B.)	காளி எஸ்.எஸ். கட் பௌல்
6.	1,250 x 60 = 75,000/-	எஸ்.எஸ் உருளி (C.B. பெரியது)	எஸ்.எஸ். உருளி (C.B. சிறியது)
7.	1,500 x 60 = 90,000/-	பிரஸ்டீஜ் பிரஷர் பான் (மூடியில்லாமல்)	எஸ்.எஸ். டிஷ், மூடியுடன்
8.	2,500 x 40 = 1,00,000/-	காளி ஸ்டு பாட், மூடியுடன் (C.B.)	காளி எஸ்.எஸ். ரவுண்ட் மீல்ஸ் பிளேட்
9.	5,000 x 40 = 2,00,000/-	எச்.எம். அலுமினியம் கிளாட் பிரை பான்	20 கிராம் வெள்ளிக்காசு
10.	7,500 x 40 = 3,00,000/-	2 கிராம் தங்கக்காசு	25 கிராம் வெள்ளிக்காசு
11.	20,000 x 25 = 5,00,000/-	4 கிராம் தங்கக்காசு	வெள்ளி காமாட்சி விளக்கு

* நுழைவுக் கட்டணம் தனி



ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.


ஸ்ரீராம் சிட்ஸ் தமிழ்நாடு பி. லிமிடெட்.

நிர்வாக அலுவலகம்: "சுப்பிரமணியம் பில்டிங்",
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8520700|8523932|8522651|
8525536|8520797

முன் அங்கீகாரம் பெறப்பட்டது.

ஸ்ரீராம் சிட்ஸ் – உங்கள் வளமைக்குப் பாதை.

ADWAVE/SC/4687 TAM A R



* விளிம்பு வரை நீர் நிறைந்து...



* ஆலய முகப்பு...

மாணிக்கவாசகர் 'உத்தரகோச மங்கைக்கு அரசே' என்று சிவபெருமானை அழைத்து, நீத்தல் விண்ணப்பம் பாடிய பெருமைக்குரியது திரு உத்தரகோசமங்கை. 'பெண்கள் வேதம் படிக்கலாமா, கூடாதா?' என்று சர்ச்சை கிளப்புகிறவர்களை உடனே இராமநாதபுரத்துக்குத் தென் மேற்கே பதினேழு கிலோமீட்டர் தொலைவில் உள்ள இந்தத் தலத்துக்கு மூட்டை கட்டி அனுப்ப வேண்டும்.

கயிலாயத்தில் சிவபெருமான், பார்வதி தேவிக்கு வேத மந்திரங்களை உபதேசம் பண்ணுகிறார். தேவியானால்தான் என்ன? பாடம் பாடம் தானே? சரியாக 'மண்டை யில் ஏற வில்லை.'

உடனே கோபம் வந்துவிடுகிறது சிவனுக்கு... ''போ... பூலோகத்தில் ஒரு வேதியர் மகளாய்ப் பிறந்து, அவரிடம் தப்பில்லாமல் வேதம் கற்றுக் கொண்டு வா'' என்று அனுப்பி விடுகிறார்.

அப்புறம் அந்த மறையவரிடமே வந்து பெண் கேட்டுத் தம்முடைய தேவியைத் திருமணம் செய்து கொள்கிறார். இறைவன் திருநாமம் இங்கே மங்களநாதன்; கல்யாண சுந்தரன். இறைவி மங்களேசுவரி; கல்யாண சுந்தரி.

புராணக் கதைகள் எத்தனையோ உள்ள இடம் இந்த உத்தரகோசமங்கை. சிவபெருமான் வேதாகமங்களின் இரகசியங்களை மங்கை பார்வதிதேவிக்கு உபதேசம் செய்த இடம் என்பதால் தலத்தின் பெயர் உத்தரகோசமங்கை என்றாயிற்று. உத்தரம் என்றால் திரும்ப உரைத்தல்; கோசம் என்றால் இரகசியம், மறைபொருள். இப்போது சொல்லுங்கள், பெண்கள் வேதம் பயில்வது தவறா என்று!

இந்த ஆலயம் மிகப் பழைமையான ஒன்று. அண்மையில் உட்புறக் கோபுரங்களுக்கெல்லாம் கதை வேலைகள் செய்து வண்ண வேலைப்பாடுகள் எதுவுமின்றிக் கும்பாபிஷேகம் மட்டும் செய்திருக்கிறார்கள். சேதுபதி மன்னர்கள் காலத்தில் தொடங்கியிருக்கக் கூடிய திருப்பணி முழுமை பெறாமலே விடப்பட்டிருக்கிறது.

கல்யாண சுந்தரரின் சந்நிதிக்கு எதிரே இருபுறமும் கூப்பிய கரங்களோடு நிற்கும் ஆளுயரத்துக்கும் மேற்பட்ட சேதுபதி மன்

வர்கள் எப்படியாவது இந்தத் திருக் கோவிலை முழுமையாக்கக் கூடாதா என்று இறைஞ்சுகிற மாதிரி தோன்றுகிறது.

பிராகாரங்களில் ஒரு சிறு பகுதி வேலைகள் தொடங்கி அப்படியே நின்று விட்டது போல் காட்சி தருகிறது. இன்னும் அம்பிகையின் சந்நிதிக்கு எதிரேயுள்ள மிகப் பழைமையான சிலைகளில் எண்ணெய்ப் பசை வறண்டு போய் உப்புப் பூத்துப் பரி தாபமாக நின்று கொண்டிருக்கின்றன.

சுற்றுலா வருகிறவர்கள் மாதிரி மக்கள் பேருந்துகளிலும் வேன்களிலும் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் இவர்களைக் கவர்வது எல்லாம் 'மரகதத் தால் ஆனது' என்று சொல்லப்படுகிற ஒரு நடராஜர் சிலைதான். ''ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் திருவாதிரை நாளில் மரகத வடிவிலேயே ஆடல்வல்லானைக் கண்டா வந்திக்க முடியும்!'' என்றார் அர்ச்சகர்.

மற்ற நாட்களில் முழுமையாகச் சந்தனக் காப்பிட்ட திருவுருவத்தையே பூட்டிய கதவுகளுக்கு இப்பால் நின்று தரி சிக்க முடியும்.

'சந்தன நடராஜரு'க்கு அருகில் உமா மகேசுவரரின் சந்நிதி மிகவும் அற்புதமான காட்சி தருகிறது. இன்றைக்கெல்லாம் பார்த் துக் கொண்டேயிருக்கலாம். அவ்வளவு அழகு.

இங்கே கண்களையும் கருத்தையும் கவர்ந்து நிற்பது தலவிருட்சமாகிய இலந்தை மரமும் திருக்குளமும். விளிம்பு வரை நீர் ததும்பி நிற்கும் மிகப் பெரிய தடாகம் - அக்னி தீர்த்தம். அழகாகக் கரைகள் புதுப்பித்துக் கட்டப்பட்டு விளங்குகிறது. இதன் கரையில் உள்ள சகஸ்ர லிங்கக் கோவி லில்தான் தலவிருட்சம் உள்ளது.

இந்த சகஸ்ரலிங்கம் ஒரு சுவையான வரலாற்றுப் பின்னணியோடு கூடியது. பல் லாயிரம் ஆண்டுகளுக்கு முன் முனிவர்கள் பலர் தவமியற்ற எண்ணி, இந்த உத்தர கோசமங்கைக்கு வந்தார்கள். அப்போது இறைவன் மங்களநாதர் தம்மிடமிருந்த திரு முறைகளை எல்லாம் முனிவர்களிடம் பாது காப்பாக ஒப்படைத்துவிட்டு இலங்கைக் குப் போகிறார், அங்கே தவமியற்றும் சிவ பக்தையான மண்டோதரி தேவிக்குக் காட்சி தர!

அழகான சிறு குழந்தையாக மண்டோ தரி தேவியின் முன் காட்சிதர, இராவணேசு வரன் குழந்தையின் திருமேனி தீண்டு கிறான். அதே கணத்தில் உத்தரகோச மங்கை அக்னி தீர்த்தத்திலும் சோதிப் பிழம்பாய் இறைவன் காட்சிதர, முனிவர்கள் அனைவ ரும் சோதியில் இணைந்து மறைந்து போகி றார்கள். ஒரே ஒருவர் மட்டும் சிவாகமத்

வேதம் படிப்பதற்கே தேவி பிறந்த தலம்!

'மண் முந்தியோ மங்கை முந்தியோ' என்று ஒரு மூதுரை இந்தத் தலத்தின் தொன் மைக்குச் சான்று பகர்கிறது. அற்புதமான எழுநிலை மாடம், மரஞ்செடிகள் மண்டிப் போய்த் திருப்பணிக்காகத் தவமிருக்கிற மாதிரி நின்று கொண்டிருக்கிறது. அருகி லேயே அம்மன் சந்நிதிக்கு நேரே மிகவும் பிரமாதமாகத் திட்டமிட்டிருக்கக் கூடிய கோபுரம், இரண்டே தளத்தோடு இடிந்த நிலையில் சோகமாக நின்று கொண் டிருக்கிறது. 'முழுமை பெற்றிருந்தால் நான் எவ்வளவு கம்பீரமாக விளங்கியிருப்பேன் தெரியுமா?' என்று அந்தக் கோபுரம் கேட்கிற மாதிரி ஒரு பிரமை ஏற்படுகிறது.

திருமறையைக் காப்பாற்றிக் கொண்டு தீர்த்தக் கரையில் இருந்து விடுகிறார்.

அவர்தான் பின்னால் வாதவூரார் என்று அவதரித்து, மாணிக்கவாசகர் என்று சைவ மும் தமிழும் தழைத்தோங்கச் செய்யும் வரம் பெற்றவர்.

தீர்த்தப் பிழம்பில் மூழ்கிய ஆயிரம் முனிவர்களோடு தாமும் இணைந்து சகஸ்ர லிங்கமாகக் காட்சி தருகிறார் இறை வன்.

இத்தனை பெருமைமிக்க இந்தத் தலத் தில், விரைவில் திருப்பணி நிறைவுற்று இந்தத் திருக்கோவில் புகழ் உச்சிக்குச் செல்ல வேண்டும் என்கிற பிரார்த்தனை யோடு வெளிவருகிறோம்.

கமலமனராஜன்

படங்கள் : 'யெஸ்பால்'

மேலும் சில மனிதர்கள்

"பிரகாஷ், ஒரு சின்ன உதவி" என்றபடியே அருகில் வந்தாள் ராகவி.

காலையில் அலுவலகத்தினுள் நுழைந்த போது, முகத்திலிருந்த மலர்ச்சி சற்றும் குறையாமல் இருந்தாள்.

"துடைச்ச வைச்ச கண்ணாடி போலப் பளிச்சுனு இருக்கே ராகவி!"

"அதாவது, ஆபீஸ்ல நான் வேலையே செய்யாம உட்கார்ந்திருக்கேன்னு சொல்றியா?"

"தாயே ஆளை விடு. எல்லோரும் வீட்டுக்குப் போற நேரமாச்சு. இப்போ எதுக்காக வம்பு? 'அபிராமி'லே கமல் படம் 'புக்' பண்ணியிருக்கேன். போகணும்!" என்றேன்.

"அப்படியா....?" என்று யோசித்தாள்.

"என்ன ராகவி?"

"காஸ் தீர்ந்து போய் மூணு நாளாச்சு பிரகாஷ். ரெண்டு பேரும் வேலைக்குப் போற வீட்டுலே 'காஸ்' இல்லேன்னா ரொம்பவும் கஷ்டம்."

"ஓ, இது தான் பிரச்னையா? கவலையை விடு. என் அத்தைவீட்டுல எப்பவுமே மூணு சிலிண்டர் இருக்கும். நாளைக்குக் காலையிலே ஏழு மணிக்கு சிலிண்டரோடு வருகிறேன். இப்போது விடை பெற்றுக் கொள்ளவா?"

"உன் அவசரத்தைப் பார்த்தால் கமல் படம் போற மாதிரி தெரியலியே. வேற படம் மாதிரி தெரியுதே..."

"ஏய், கிண்டல் தானே வேணாங்கிறது? பேச்சுலர் பையன்னா இளப்பமா உங்களுக்கெல்லாம். நான் சுத்த சைவமாக்கும், இந்த விஷயத்துல."

"சரி, சரி, ஜூமாய்" என்று நகர்ந்தாள்.

ராகவி! இனிமையான தோழி. அலுவலகத்தில் ஏற்பட்ட பழக்கம் இறுகி, வீடு வரை தொடர்கிறது. அவள் கணவன் இவளுக்கும் மேலே! இரண்டு நாள் வீட்டுப்பக்கம் போகாவிட்டால் தொலைபேசியில் அழைத்து விடுவான்.

"என்னப்பா ஆளையே காணோம். ரொம்ப கத்தரியா? அப்படி என்ன பிசி?" என்று துளைத்து எடுத்து விடுவான்.

"பிரகாஷ், போகலாமா?" என்று செல்வம் தோளைத் தொட்டு உலுப்பவே நினைவிலிருந்து மீண்டேன்.

இருவருமாய்த்தான் படத்திற்குப் போவதாய்த் திட்டம். செல்வத் தின் வற்புறுத்தல் தாங்காமல்தான் படம் போக சம்மதித்திருந்தேன்.

அலுவலகத்தை விட்டு வெளியே வந்தோம்.

"என்னடா, ராகவி வந்து பேசினாங்க போலிருக்கு?" என்றான் செல்வம்.

தலையசைத்தபடி சொன்னேன்.

கேலியாய்ச் சிரித்தான்.

"என்னடா?"

"எல்லாப் பெண்களுமே காரியவாதிகள்!"

"டேய்!"

"உண்மையைத்தான் சொல்றேன். தங்களுக்குக் காரியம் ஆகணும்னா அவங்க காட்டும் கரிசனமும், குழைவும்... மாயப் பிசாசுகள்!" என்றான்.

செல்வம் எப்போதுமே இப்படித்தான்! எதிலும் குதர்க்க வாதம் செய்பவன்.

"உன் எண்ணம் தப்புடா" என்றேன்.

"போடா, ஏமாளி! நீ விழுந்து விழுந்து உதவி செய்யற! அதனாலே ராகவியும், அவங்க கணவரும் உன் மேலே அன்பு காட்டுறாங்க. அவங்களுக்கு இப்படி ஒரு சம்பளமில்லாத உதவியாள் யாரு கிடைப்பா?" என்றான் கிண்டல் தொனி மாறாமல்.

"சேச்சே! எல்லோரையும் ஒரே தட்டுலே வைக்கப் பார்க்கக் கூடாது செல்வம்"

"மனிதர்கள் சுயநலவாதிகள். அதிலும் பெண்கள் காரியக்காரர்கள்."

எங்கள் வாதம் இந்த ரீதியிலேயே ஹோட்டல் டிபன், டவுன் பஸ், தியேட்டர்

வாசல் வரை தொடர்ந்தது.

''சரிடா, ஒரு பந்தயம்'' என்றான்.

''சொல்லுடா.''

''நாளை முதல் நீ அவங்களுக்கு உதவி செய்வதை நிறுத்து. அப்புறம் அவங்க ளோட பழக்கம் உன்னளவில் எப்படி மாறு துன்னு பார்ப்போம்.''

''எத்தனை நாள்?'' என்றேன்.

''நீயே சொல்லுடா.''

''அடுத்த மாதம் ஆறாம்தேதி ராகவி யோட பையன் பிறந்தநாள். வருஷா வரு ஷம் நன்றாய், சிறப்பாய்க் கொண்டாடு வாங்க. கடந்த மூன்று வருடமாய் நான்தான்



வி.ஐ.பி.கெஸ்ட் அதுல. இன்னும் இருபத் தைந்து நாள் இருக்கு. உன் பந்தயத்தை ஒத் துக்கறேன். அதன் மூலம் ஏதாவது மாற்றம் உண்டான்னு பார்த்துடுவோம்'' என்றேன்.

டியோட்டர் மணி ஒலிக்க, உள்ளே சென்று பாடத்தில் ஆழ்ந்தோம்.

அடுத்த நாள் காலையில் காஸ் சிலிண்டருடன் ராகவி வீட்டுக்கு நான் போக வில்லை.

மனசுக்குள் ஒரு குற்ற உணர்வு. தேவை யற்ற விவாதத்தால் ஒரு நல்ல நட்பை இழந்துவிடுவோமோ? காரியக்காரர்களாய் இருந்துவிட்டுப் போகட்டுமே! என்னள வில் நான் ஏன் மாறவேண்டும்?

சலனங்கள் மனதில் சித்திரம் தீட்ட முயன்றது. இருந்தாலும், ஓர் எண்ணம். செல்வத்திடம் பந்தயத்திற்கு ஒத்துக் கொண் டாயிற்று. இதுவும் நல்லதற்குத்தான். மனி தர்களை எடை போட ஒரு சந்தர்ப்பம்!

''மன்னிக்கடு ராகவி! என் அத்தை வீட்டுலே சிலிண்டர் இல்லை. எப்பவும் கிடைக்கும். ஆனால், இந்த முறை...'' என்று கதைத்தேன் ஆபீசில் ராகவியிடம்.

''பரவாயில்லேப்பா, நீ என்ன செய்வே அதுக்கு'' என்று அவள் சொன்னதும் குற்ற உணர்ச்சியில் அவசரமாய் நகர்ந்து விட் டேன்.

அடுத்து வந்த நாலைந்து முறையும் அவள் கேட்ட உதவிகளுக்கு ஏதேதோ கார ணங்கள் சொல்லி தட்டிக் கழித்தேன்.

அட, எனக்குள் இத்தனை கற்பனை ஊற்றா?

குறுகுறுப்பான மனத்துடன் அவள் வீட்டுக்குச் செல்லவும் பிடிக்கவில்லை.

டெலிபோனில் கூப்பிட்டு அதட்டிய அவள் கணவனிடம் புளுகு மூட்டைகளை

கிருஷ்ணா

அவிழ்த்து விட்டேன்.

அலுவலக நேரம் முடிந்த பின்னும், மேலும் சில வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு என் பொய்யை உண்மையாக்க முயன்றேன். வருடக் கடைசி என்பதால் வேலையும் தலைக்கு மேல் இருந்தது.

''என்னப்பா, இந்த வருஷம் ப்ரமோஷன் டைமா? இப்படி வேலை செய்யற?'' என்று நண்பர்கள் கூட கிண்டலடித்தார்கள்.

''பிரகாஷ், இன்னிக்கு என்ன தேதி தெரியுமா?'' என்று என் இருக்கை முன் வந்து நின்றான் செல்வம்.

காலண்டரைப் பார்த்தேன்.

''அட, ஆமாம்! ஆறாம் தேதி என்னைப் பார்த்துக் கண் சிமிட்டியது.

செல்வத்தின் பார்வையைச் சந்திக்க முடியாமல் திணறினேன்.

ராகவி இன்று அலுவலகம் வராததும் ஞாபகம் வந்தது.

நான் எப்படி மறந்தேன் ஆறாம் தேதியை? மனசின் குற்ற உணர்வுக் குறுகுறுப்பில் மறந்து போனதோ?

''என்னப்பா வி.ஐ.பி.கெஸ்ட்? பிறந்த நாள் கொண்டாடப் போகலியா?'' என்றான் செல்வம் கிண்டலாய்.

அவன் கிண்டல் என்னை உசுப்பிவிட்டது.

இரண்டு நாள் லீவில் ஊருக்குச் சென்று விட்டு இன்றுதான் அலுவலகம் திரும்பியிருந்தேன். அதனால் சொல்ல விட்டுப் போயிற்றோ? அப்படியிருந்தாலும், காலையில் போன் செய்து என்னை அழைத்திருக்கலாமே!

இவ்வளவுதானா என்மேல் பரிவும், மரியாதையும் ராகவிக்கு?

எனக்குள் துக்கம் முட்டிக் கொண்டு அடைத்தது. எனக்குள் ஏற்பட்ட அதிர்ச்சியில் கண்களில் நீர் கூட வந்துவிட்டது.

சட்டென முடிவு செய்தேன். அலுவலகம் முடிந்ததும் நேராய் ராகவி வீட்டை நோக்கிச் சென்றேன்.

வழியில் ஒரு பொம்மையைப் பரிசாக வாங்கிக் கொண்டேன்.

'உங்களுக்கு நட்பை மதிக்கத் தெரியாது போயிருக்கலாம். ஆனால் நான் அப்படியல்ல' என்று செயலில் காட்டி, அவர்களை வெட்கப்பட வைக்கவேண்டும் என்ற வேகத்தோடு ராகவியின் வீட்டினுள் நுழைந்தேன்.

''மாமா!'' என்று வாசல் வெராந்தாவில் விளையாடிக் கொண்டிருந்த ப்ரவீன் வந்து காலைக் கட்டிக் கொண்டான்.

''ஹாப்பி பர்த் டே ப்ரவீன்'' என்று பொம்மையை நீட்டினேன்.

''ஹையா!'' என்று குதித்தபடி உள்ளே ஓடினான். கூடவே நானும் தொடர்ந்தேன்.

''அடேடே, பிரகாஷ்! வா, வா'' என்று ஹாலில் அமர்ந்திருந்த ராகவியும், அவள் கணவரும் ஏக காலத்தில் வரவேற்றனர்.

''நான் சொல்லலே, பிரகாஷ் மறந்திருக்க மாட்டான்னு. நிச்சயம் வருவான்னு'' என்றான் கோபால், ராகவியின் கணவன்.

''எப்ப ஊரிலிருந்து வந்தே? அம்மா உடம்பு எப்படியிருக்கு? உன் தங்கச்சி போயிட்ட சோகம் கொஞ்சமாவது அவங்க மனசுல குறைஞ்சிருக்கா?'' என்று ராகவி கேட்டாள்.

''ஆமாம், அதெல்லாம் இருக்கட்டும், ப்ரவீன் பிறந்த நாளைக் கொண்டாடலியா?'' என்று ஹாலைச் சுற்றிப் பார்த்தேன்.

போன முறை கலர் காகிதம் ஒட்டி, அக்கம் பக்கமுள்ள வீட்டுக் குழந்தைகளைக் கூட்டி, கேக் வெட்டி, ஒரே சந்தோஷக் கூச்சலாய்... ஏன் இன்று இல்லை அதெல்லாம்?

''நாலு மாசத்துக்கு முன்னாடி உன் தங்கை ஒரு விபத்தில் செத்துப் போய் நீ புலம்பினப்ப நான் என்ன சொன்னேன்? அந்த சகோதரி போனால் என்ன, இந்த சகோதரி இல்லையான்னு கேட்டேனா இல்லையா?''

''ஆமாம்!''

''உன் சோகம், எங்க சோகமும் தானே. எப்படி உங்க வீட்டுல ஒரு வருஷம் எந்தப் பண்டிகையும் இல்லாம, துக்கம் அனுஷ்டிப்பீங்களோ, அதே மாதிரி இருக்க நாங்களும் முடிவு பண்ணிட்டோம்.''

''ராகவி!''

''ஆனால் ப்ரவீன் குழந்தை தானே? அவன் மனசு நோகக் கூடாதுன்னு புது ட்ரெஸ் எடுத்து, கோயிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிட்டு வந்தோம்'' என்றவர்களை பிரமிப்புடன் பார்த்தேன்.

எத்தனை அருமையான மனிதர்கள் இருவரும்! என் மேல் எனக்கு வெறுப்பும், வெட்கமும் ஏற்பட்டது. பந்தயப் பொருளாய் திரௌபதியை, தர்மர் வைத்ததைவிட கேவலமாய் உணர்ந்தேன். இந்த நட்பையும், அன்பையும் போய் சோதனை செய்து பார்த்துவிட்டேனே!

''அது சரி ராகவி, என்னிடம் நீ நாலஞ்சு முறை கேட்ட உதவிகளைச் செய்யாததினால் கோபமோன்னு நினைச்சிட்டேன்'' என்றேன் குற்ற உணர்வு தாளாமல்.

என்னைப் பார்த்துச் சிரித்தாள் அவள்.

''எங்களுக்கு என்ன மனசு அவ்வளவு சின்னதா? இதோ பாரு பிரகாஷ், உன்னாலே முடியும்னா நிச்சயம் நீ செய்வேங்கற நம்பிக்கையிலே எள்ளளவும் சந்தேகம் கிடையாது எனக்கு. அதோட உனக்குன்னு தனி வாழ்க்கை இருக்கு. அதுல நாங்களும் ஓர் அங்கம்தானே தவிர, முழுதுமே நாங்களாய்த்தான் இருக்கணுங்கிறது பைத்தியக்காரத்தனம், என்ன சொல்றே?''

''ஆமாம், பைத்தியக்காரத்தனம்தான்!'' என்றேன் தெளிந்த மனத்துடன்.

அருள்வாக்கு



ராமாயண அணில் நமக்கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய சேது பந்தத்தில், 'நாம், அல்ப ஜந்து, என்ன பெரிய ஸஹாயம் பண்ண முடியும்?' என்று அது நினைத்ததா? அது பண்ணின சேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது - ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி 'நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?' என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய்தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈச்வரப் பிரஸாதம் கிடைத்து சித்தசுத்தி லபித்துவிடும்.

நம்முடைய தானம், தொண்டு இவற்றால், மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம் மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் ஸமூஹத்தில் நல்ல ஸௌஜன்யம் உண்டாகும். எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத்தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும். இந்த ஈரம் அன்பு, அருள், பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். 'பகவானிடத்தில் பக்தி வரவேண்டும். அவனருள் கிடைக்க வேண்டும்' என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜபக்தி வரும். ஈச்வராநுக்ரஹமும் வரும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

அரக்கர் மன்னன் உத்தரவை ஏற்று வேலைக்காரர்கள் ஹனுமானை வெளியே கொண்டு போனார்கள். வாலுக்குப் பழந் துணிகளைக்கொண்டு நன்றாகச் சுற்றினார்கள். வால் வளர்ந்தது. வளர வளர, கிடைத்த பழந்துணிகளைக் கொண்டு சுற்றி, எண்ணெய் விட்டு, நெருப்பு வைத்து விட்டார்கள். தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. கயிற்றால் கட்டப்பட்ட ஹனுமானை லங்கா நகரத்துத் தெருக்கள்தோறும் இழுத்துச் சென்றார்கள்.



சக்கரவர்த்தித் திருமகன்

ராஜாஜி

"இதோ நம் நகரத்துக்கு வந்த திருடன்!" என்று பெண்கள், குழந்தைகள் எல்லாரும் பார்த்துப் பரிகசித்துச் சந்தோஷப்படும்படியாக ராக்ஷசர்கள் ஹனுமானை ஊரில் எல்லாத் தெருக்கள் வழியாகவும் பெரும் வாத்திய கோஷங்களுடன் கொண்டு போய்ப் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அசோக வனத்தில் சீதைக்கு ராக்ஷசிகள் சொன்னார்கள். "உன்னோடு பேசிற்றே அந்தக் திருட்டுக் குரங்கு, அதற்கு என்னவாயிற்று தெரியுமா? வாலுக்கு எண்ணெய்த் துணி சுற்றி நெருப்பு வைத்து விட்டார்கள். வால் எரிந்து கொண்டிருக்கிறது. அவனை இழுத்துக் கொண்டு ஊர்வலம் செய்கிறார்கள்" என்று சொல்லி சீதையைப் பரிகசித்தார்கள்.

சீதை அக்கினி மூட்டி, 'ஹே! அக்கினியே, நான் செய்த புண்ணியம் ஏதேனும் இருந்தால், நான் உண்மைப் பதிவிரதையானால் நீ ஹனுமானுக்குக் குளிர்ந்து போவாயாக" என்று பிரார்த்தித்தாள்.

ஹனுமானும் எல்லா அவமானத்தையும் அடிகளையும் அக்கிரமங்களையும் பொறுத்துக் கொண்டு, தெருத் தெருவாக எல்லா இடங்களிலும் பார்த்துக் கொண்டு சென்றான். நகரத்தில் எல்லாத் தெருக்கள் சந்துகளிலிருக்கும் பெண்களும் குழந்தைகளும் வேடிக்கை பார்க்கட்டும் என்று மாருதியை எல்லா இடங்களுக்கும் கொண்டு போனார்கள். அவனும் சோர்வில்லாமல் போகாமல் நகரத்தின் கோட்டை முதலிய ரகசியங்கள் முற்றிலும் நன்றாகப் பார்த்துக் கொண்டே போனான். "என் எஜமானனுக்கு இது உதவும்" என்று பொறுமையாகப் பார்த்துக் கொண்டே சென்றான்.

"இது வென்ன ஆச்சரியம்! நெருப்பு வைத்திருக்கும் எண்ணெய்த் துணிகள் மட்டும் பற்றி எரிகிறது. என் வாலுக்கோ அந்தத் தீ குளிர்ந்தே இருக்கிறது. ராம காரியத்தில் பஞ்ச பூதங்கள் உதவுகிறது என்பதற்கு இது அடையாளம். கடலில் மலை கிளம்பி எனக்கு உபசாரம் செய்யவில்லையா? அப்படியே அக்கினி தேவனும் இப்போது என்னை வருத்தாமல் குளிர்ந்திருக்கிறான் போலிருக்கிறது. அல்லது என் தந்தை வாயு தேவனுடைய நட்பை மதித்து அக்கினி என்னை எரிக்காமல் தணிந்திருக்கிறான் போலிருக்கிறது. ஆயினும் இந்த சமயத்தை விட்டு விடலாகாது. இந்தத் துஷ்டர்களுக்குச் சரியான பயம் உண்டாக்கிப் போவதற்குத் தகுந்த சந்தர்ப்பம் தானாக வந்திருக்கிறது" என்று யோசிக்கலானான்.

திடீர் என்று தன் உருவத்தைச் சுருக்கிக் கொண்டு கட்டியிருந்த கட்டுகளையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு,

மறுபடி பெரும் வடிவத்துடன், எரியும் வாலுடன் கிளம்பிப் பெரியதொரு மாளிகை மேல் குதித்து ஏறி நின்றான். கையில் ஒரு கம்பத்தைப் பிடுங்கிக் கொண்டு அதை அனைவரும் நடுங்கச் சுழற்றினான்.

பிறகு அங்கிருந்து மாளிகை மாளிகையாகத் தாவிக் குதித்து, ஒவ்வொரு வீடும் பற்றியெரிய நெருப்பு வைத்துச் சென்றான். சிறிது நேரத்திற்குள் காற்றும் வீசிற்று. நகரமெல்லாம் தீப்பற்றி ஆகாயமளாவ எரிந்தது. அரக்கர்களும் பெண்களும் குழந்தைகளும் குய்யோ முறையோ என்று கதறிக் கொண்டு இங்கு மங்கும் அலைந்தார்கள்.

'இந்தக் குரங்கு யமனே!' என்று சிலர், 'இவன் அக்கினி தேவனே!' என்று சிலர், இன்னும் இப்படிப் பல விதமாக ராக்ஷசர்கள் கத்திக் கொண்டு, பயந்து எரியும் வீடுகளிலிருந்து தப்பியோடினார்கள்.

தான் பட்ட இம்சையை நினைத்து எரியும் லங்கையைப் பார்த்து ஹனுமான் மிக மகிழ்ச்சியடைந்தான். திரிகூட மலையில் ஒரு உயர்ந்த இடத்திலிருந்து இதைப் பார்த்துத் திருப்தி அடைந்து பிறகு கடலில் போய் மூழ்கி வாலில் இருந்த நெருப்பை அணைத்து விட்டு நின்றான்.

“ஐயோ, என்ன செய்தேன்! கோபத்தினால் மதியிழந்தேன்! எவ்வளவு பலம் இருந்து என்ன பயன்? எவ்வளவு சாமர்த்தியம் ஐசுவரியம் இருந்தாலும் கோபத்தை அடக்கத் தெரிந்தாலல்லவோ எல்லாம் பயன்படும். சீதையும் இந்தப் பெருந் தீயில் மாண்டல்லவா போயிருக்க வேண்டும்! சர்வநாசமாக அல்லவா முடிந்தது, நான் கோபத்தில் செய்த காரியம். ஐயோ! என்னைப் போன்ற மூடன் இல்லை, பாவி இல்லை! அரக்கர்கள் பேரில் கொண்ட கோபம் சீதையைக் கொன்றது. இனி நான் இங்கேயே உயிர் நீத்து என் வாழ்க்கையையும் வெட்கத்தையும் தீர்த்துக் கொள்ள வேண்டும்!'' என்று தாங்க முடியாத துக்கத்தில் மூழ்கினான்.


அப்போது ஆகாயத்தில் யாரோ பேசுவது கேட்டது. லங்காநகரம் தீப்பற்றியெரிவதைக் கண்ட சாரண யக்ஷர்கள் ஆகாயத்தில், ''ஆஹா! என்ன அற்புதச் செயல்! ஹனுமானுடைய பராக்கிரமம் வாழ்க! சீதை இருக்கும் இடம் தவிர மிகுதி லங்கை முழுவதும் தீப்பற்றி யெரிகிறது'' என்று பேசி மகிழ்ந்தார்கள்.

இது ஹனுமான் காதில் பட்டது. ''ஓ! பிழைத்தேன்! சீதையல்லவோ என் உயிரைக் காப்பாற்றினாள். அவள் புண்ணியமல்லவோ நெருப்பு என்னைத் தீண்டாமல் வாலில் குளிர்ந்து நின்றது. நெருப்பு அந்தக் கற்புத் தேவியை எப்படித் தீண்டும்? அக்கினியை அக்கினி என்ன செய்யும்? சீதையிடம் நான் வைத்த நெருப்பு செல்லவில்லை. அக்கினி தேவனே உதவியிருக்கிறான். ராம காரியமல்லவா? சமுத்திர ராஜனும் மைனாகமும் உதவவில்லையா?'' என்றிவ்வாறு எண்ணி, உடனே அசோக வனம் சென்றான்.

சிம்சுபா மரத்தடியில் உயிருடன் உட்கார்ந்திருந்த சீதையைக் கண்ணால் கண்டு மிக மகிழ்ந்து, நமஸ்கரித்து, ''தாயே! தாங்கள் க்ஷேமமாய் இருப்பதைக் கண்டேன். இது தங்கள் சக்தி. என் பாக்கியம். நான் போய் வருகிறேன்'' என்றான் ஹனுமான்.

ஜானகியும் ''நீயல்லவோ வீரன்! உன்னால் ஆகாத காரியமில்லை. சீக்கிரம் என் நாதன் வந்து அரக்கர்களை வீழ்த்தி, என்னை அடையச் செய்வாய். இது நீ ஒருவனே செய்ய முடியும்'' என்றாள்.

''கோடிக்கணக்கான வானர சைன்யத்துடன் சுக்ரீவன் ராம லக்ஷ்மண வீரர்களுடன் இங்கு வந்து சேருவான். ராவ



●● எண்பத்தியாறு ஆண்டுகளாக ஒருவரது ஒலிம்பிக் சாதனை முறியடிக்கப் படாமலே இருக்கிறது! ஜார்ஜ் லயான்ஸ் ஒலிம்பிக்கில் முதன் முதலாக கோல்ஃப் ஆட்டம் இடம் பெற்ற போது ஆடச் சென்றார். அது 1908 ஆம் ஆண்டு. இவரோடு போட்டியிட இருந்த ஒரிருவரும் வாபஸ் பெற்று விட, எதிர்ப்பின்றி தங்க மெடல் கிடைத்தது. ஆனால் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார். இதன் பிறகு கோல்ஃப் ஆட்டம் ஒலிம்பிக்கில் இடம் பெறவே இல்லை! அதனால் ஜார்ஜ் லயான்ஸ் தான் நிரந்தர சாம்பியன்! 1938 ல் காலமாகி விட்டார் ஜார்ஜ்.

- எஸ். ஆலன்



●● சந்திரனின் மேற்பரப்பில் ஒரே ஒரு மில்லி மீட்டர் உயரத்துக்குத் தூசு படிய 10 லட்சம் ஆண்டுகள் பிடிக்கின்றன. ஆகவே, ஆர்ம்ஸ்ட் ராங்கும், எட்வினும் அதில் பதித்த காலடிச் சுவடுகள் இன்னும் இரண்டு கோடி வருடங்களுக்கு மறையாமல் இருக்கும்!

- ''டைம்ஸ் ஆஃப் இந்தியா''
தகவல் : அ. ஷண்முகசுந்தரம்

ணனும் அவன் துஷ்ட கூட்டமும் மடிவார்கள். ரகுநந்தனன் உம்முடன் அயோத்திக்குத் திரும்பிப் போவான். துக்கப்படாதீர். மங்களம். சீக்கிரம் அவர்கள் வருவார்கள் என்று நிச்சயமாக இருப்பீராக.''

இவ்வாறு சமாதானப்படுத்தி விடைபெற்றுக் கொண்டு சென்றான். கடற்கரையில் அரிஷ்ட மலையென்ற அழகிய மலை பேரில் ஏறி ஆகாயத்தில் கிளம்பினான்.

வழியில் மைனாக மலை தன்னை எதிர்பார்த்து நின்றதைக் கண்டு, அதைக் கையால் அன்போடு தடவிக் கொடுத்து விட்டு, நிற்காமல் வில்லினின்று செல்லும் அம்பின் வேகத்தோடு நேராகச் சென்றான். மகேந்திர மலையின் சிகரம் தெரிந்ததும் அக்கரை வந்தது என்று அறிந்து ஒரு பெரும் கர்ஜனை செய்தான். ஆகாயத்தில் கருடனைப் போல் வரும் ஹனுமானைப் பார்த்துக் கொண்டிருந்த வானரங்கள் ''வந்து விட்டான்! வந்து விட்டான்!'' என்று ஆரவாரம் செய்தார்கள். அது வரையில் கவலையும் கண்ணீருமாக இருந்த வானரங்கள் அடங்கா மகிழ்ச்சியடைந்து குதித்தார்கள்.

ஜாம்பவான் ''நிச்சயம் வெற்றியுடன் திரும்பி வருகிறான். இல்லாவிடில் இப்படி கர்ஜிக்க மாட்டான்'' என்றான். எல்லாரும் மரங்களிலும் குன்றுகளிலும் ஏறி ஹனுமான் ஆகாயத்தில் பறந்து வருவதைப் பார்த்துக் கொண்டே மகிழ்ச்சியோடு நின்றார்கள்.

மலைகளும் மரங்களும் எல்லாம் வானரங்களால் நிறைந்து விளங்கும் காட்சியை ஆகாயத்திலிருந்து பார்த்து, ஹனுமான் மகிழ்ச்சியடைந்தான். ஆரவாரத்துக் கிடையில் மகேந்திர மலை மேல் இறங்கினான்.

ஹனுமானைப் பார்த்து மகிழ்ச்சி மேலிட்ட வானரங்கள் மகேந்திரமலை மேல் கூடினார்கள். விருத்தனான ஜாம்புவான் வாயுபுத்திரனை அன்புடன் வரவேற்று ''நடந்ததையெல்லாம் நமக்குச் சொல். எல்லாரும் அனுபவிக்கலாம். எப்படி தேவியைக் கண்டாய், அப்போது என்னவெல்லாம் நடந்தது, அவள் எப்படியிருக்கிறாள், உடல் நிலை மனோநிலை எல்லாவற்றையும் பற்றிச் சொல். ராவணன் எப்படி நடந்து கொள்ளுகிறான், அருமை ஆஞ்சனேயனே, எல்லாம் உள்ளபடி நமக்குச் சொல்லுவாய். அதன் மேல் நாம் இனி என்ன செய்ய வேண்டியது என்பதை யோசித்துத் தீர்ப்பதற்கு அனுகூலமாக இருக்கும்'' என்றான்.

ஹனுமான் மனதால் சீதையைத் தியானித்து நமஸ்கரித்து விட்டு அவர்களுக்கு விஷயம் சொல்ல ஆரம்பித்தான்.

(தொடரும்)



●● குருவும் சீடர்களும் பயணம் மேற் கொண்டனர். நடுவழியில் ஒரு காட்டாறு. வெள்ளம் கரை புரண்டோடியது... குரு ஒரு சீடனைக் கூப்பிட்டு, ''இந்த ஆற்றில் இறங்கி மறு கரைக்குச் சென்று அதோ அங்கு தெரிகிற ஆசிரம முனிவரிடம் நாம் இங்கு வந்திருப்பதாய்ச் சொல்'' என்றார்.

குருபக்தியில் ஊறிப் போன சீடன் 'குருநாத ஸ்வாமி பாதமே துணை' என்று சொல்லிக் கொண்டு ஆற்றில் இறங்கினான். வெள்ளம் அவனுக்கு ஒதுங்கி வழிவிட்டது. குருநாதருக்குப் பெருமையில் தலைகால் புரியவில்லை. என் பாதங்களுக்கு இவ்வளவு மதிப்பா என்று தமது வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக் கொண்டு ''என் பாதமே துணை'' என்று வெள்ளத்தில் இறங்கினார். வெள்ளம் அவரை அடித்துக் கொண்டு போய்விட்டது!

''தமிழக நாட்டோடிக் கதை''யிலிருந்து : என். ஜெயராமச்சந்திரன்

ஓம்



ஸ்ரீகுருதேவதத்த ஸ்ரீ ஸ்ரீ அவதூத கிருஷ்ணானந்த பிரும்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை மஹோத்ஸவம்.
ஸ்ரீதத்தாசிரமம் – சேந்தமங்கலம்

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் ஸ்ரீமுக வருடம் பங்குனி மாதம் 26ந் தேதி முதல் 29 முடிய (8.4.94 முதல் 11.4.94) பூஜ்யஸ்ரீ குருநாதர் ஸ்ரீ அவதூத கிருஷ்ணானந்த பிரும்மேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் நான்காவது ஆண்டு ஆராதனை மஹோத்ஸவம் மிகவும் சிறப்பான முறையில் தத்தாசிரமத்தில் நடைபெற இருக்கின்றது.

வழக்கம்போல் நமது ஆசிரமத்தின் மிகச் சிறப்பான ஸம்பூர்ண விதான ஸ்ரீ வித்ய லக்ஷ்மி ஸமேத மகா கணபதி ஹோமம், சதுர் வேத பாராயணங்கள், ஸௌருத்ரீய ஸம்பூர்ண மஹாயக்ஞம், அகண்ட நாம ஜபம், ஸத்ஸங்கம் இவைகள் நடைபெறும். இந்த மஹாயக்ஞத்தில் கலந்து கொள்வதால் கோசார சீதியாகவும், தசாபுக்தி சீதியாகவும், உள்ள ஸகல விதமான கிரக தோஷங்களும் நிவர்த்தியாகி அபீஷ்ட ஸித்திக்கு பேரனுகூலம் ஏற்படும். லோக க்ஷேமத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மகான் நம் ஸத்குருநாதரின் ஸான்னித்யம் சமாதியிலிருந்து அருள் பாலிப்பதை நாம் அனுபவிக்கிறோம்.

மஹோத்ஸவத்தின் எல்லா நாட்களிலும் அன்னதானம், சமாராதனம் நிறைவாக நடைபெறும். இவற்றிற்கு சுமார் 75,000 ரூபாய் செலவாகும் மஹத்தான இந்த யக்ஞங்களிலும், ஆராதனை, வேதபாராயண உத்ஸவங்களிலும் அனைவரும் பங்கு கொண்டு துன்பங்கள் நீங்கி எல்லா நன்மைகளையும் பெறுமாறு பிரார்த்திக்கிறோம்.

நன்கொடை அளிப்பவர்கள் ஸ்ரீ ஸத்குருநாதர் ஆராதனைக் கமிட்டி, ஸ்ரீ தத்தாசிரமம், சேந்தமங்கலம் 637 409 என்ற பெயருக்கு டிராப்ட்/மணியார்டர் அனுப்பலாம். திரவியங்களை ஆச்ரமத்துக்கு அனுப்பி பங்கு பெறலாம்.

தத்தாசிரமம்
சேந்தமங்கலம்,
1994

V.S. பத்மநாபன்
மற்றும்
ஸ்ரீ சத்குருநாதர் ஆராதனை குழு

ஒரு சென்ஸார் அதிகாரி கத்திரிக்கோல் நீட்டுகிறார்!

சந்த்யா

தயாரிப்பாளர்: ஸார், வணக்கம். 'பில் கலெக்டர்'-னு நாங்க ஒரு படம் எடுத்து சென்ஸார் போர்டுக்குத் தணிக்கைக்காக அனுப்பியிருந்தோம். ஏப்ரல் முட்டாள் தினத்தன்னைக்கு 'ரிலீஸ்' பண்ணலாம்னு இருந்தோம். ஆனா, இன்னும் உங்க கிட்டேயிருந்து சர்டிபிகேட்டே வரலையே.

அதிகாரி: ஓ..பில் கலெக்டரா? அந்தப் படத்தை ரிலீஸ் பண்றதுக்கு சர்டிபிகேட் கொடுக்க முடியாது ஸார். ஸாரி.

தயா: என்ன ஸார், ஐம்பது லட்சம் செலவு பண்ணி படம் எடுத்திருக்கோம். ரிலீஸ் சர்டிபிகேட் தரமுடியாதுன்னா எப்படி?

அதிகாரி: படம் ரொம்ப அபத்தமா இருக்கு.

தயா: ரொம்ப தாங்ஸ் ஸார். படம் இந்த மாதிரி அமையணுங்கறதுக்காக நாங்க எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுங்களா?

அதிகாரி: வெறும் அபத்தமா மட்டும் இருந்திருந்தா நாங்களும் உங்களைப் பாராட்டியிருப்போம். ஆனா, படத்துலே வன்முறைக் காட்சிகளும் ஆபாசக் காட்சிகளும் ரொம்ப அதிகமா இருக்குது. அதையெல்லாம் எடுத்துடணும்.

தயா: எல்லா வன்முறைக் காட்சிகளையும், ஆபாசக் காட்சிகளையும் எடுத்துட்டா படத்துலே டைட்டில் ஸீன் மட்டும் தானே ஸார் மிஞ்சும்.

அதிகாரி: இல்லையே. முதல் காட்சியில், பிள்ளையார் படத்துக்கு முன்னாலே நின்னுக்கிட்டு 'கடவுளே எல்லாம் நல்லபடியா நடக்கணும்னு' யாரோ வேண்டிக்கிறாங்களே, அந்த ஸீனும் மிஞ்சுமே.

தயா: இருந்தாலும் இரண்டரை மணி நேரத்துக்கு அதையே காட்ட முடியுமா ஸார்? இப்ப பக்திப் படத்துக்கு மார்க்கெட் கூட இல்லையே!

அதிகாரி: அப்ப வேறே புதுசா எடுங்களேன்.

தயா: என்ன ஸார், விளையாடறீங்களா? நீங்க பாக்கறதுக்கு ஒரு படம் ஜனங்க பார்க்கறதுக்கு ஒரு படம்னு, ரெண்டு ரெண்டா எடுக்க முடியுமா?

அதிகாரி: ஸென்ஸார் விஷயத்திலே நாங்க ரொம்பக் கண்டிப்பாதான் இருப்போம். சமுதாயத்தைப் பாதிக்கிற காட்சிகளை நாங்க எப்படி அனுமதிக்க முடியும்?

தயா: அப்படி எந்தக் காட்சி சமுதாயத்தைப் பாதிக்குதுன்னு சொல்றீங்க?

அதிகாரி: க்ளைமாக்ஸ்லே ஹீரோ, வில்லன் தலையை கத்திரிக்கோலாலே கட் பண்ணி சமுத்திரத்திலே போட்டதும், கடல் தண்ணீர் அப்படியே ரத்தமா மாறி, ரத்த அலை வீசுதே... அது வன்முறையில்லையா?

தயா: அதாவது கடல் ரத்தக் கண்ணீர் விடுதுன்னு ஸிம்பாலிக்கா காட்டியிருக்கோம்.

அதிகாரி: அது சமுதாயத்தைப் பாதிக்குமே. இந்தக் காட்சியைப் பார்த்த பிறகு ஜனங்க பீச்சுக்கே போக மாட்டாங்க. காட்சியை மாத்தணும்.

தயா: மாத்திட்டாப் போச்சு. கத்திரிக்கோலால கட் பண்ணப்பட்ட தலையை அந்த முண்டத்தோட கையிலேயே கொடுத்துடறோம். அதுலே வன்முறையே இல்லை. தன்னோட தலையை ஒரு கையிலே வெச்சுக்கிட்டே மற்றொரு கையால வில்லனோட சண்டை போடற மாதிரி மாத்திடறேன்.

அதிகாரி: ஒரு ஸீன்லே 'சரிதான் போடி'-ன்னு புருஷன் சொன்னதும் 'பொண்டாட்டியைப் போடின்னு சொன்னீரும் ஒரு ஆம்பளையாடா'-ன்னு கத்திக்கிட்டே மனைவி தாலியைக் கழட்டிக்

கொடுத்துடறா. இதைக் கேள்விப்பட்டதும், அந்தக் கிராமத்துப் பொம்பளைங்க எல்லாரும் அவளுக்கு ஆதரவா அவங்கவங்க தாலியைக் கழட்டி அவன் மூஞ்சியிலே வீசி எறியறாங்க. இந்தக் காட்சி நம்ம பண்பாட்டைப் பாதிக்குதே...

தயா: தாலியை விட பெண்களோட மனசுதான் புனிதமானதுன்னு சொல்லியிருக்கோம், ஸார். இருந்தாலும் அது பண்பாட்டைப் பாதிக்கும்னா மாத்திட வேண்டியதுதான். ஆ! ஐடியா! வில்லன் மூஞ்சி மேலே தாலியை எறியறதை விட, எல்லா பொம்பளைங்களும் தாலியைக் கழற்றி அவங்கவங்க புருஷன் கையிலேயே கொடுத்துடற மாதிரி மாத்திடறேன். நம்ம பண்பாட்டை விட்டுக் கொடுக்கலாமா?



அதிகாரி: ஓ.கே. நல்ல ஐடியாதான்: ஆனா பாருங்க, உங்க படத்துலே பாட்டெல்லாம் ரொம்ப கன்றாவியா இருக்குது...

தயா: நீங்க பாராட்டினா போதுமா ஸார்? இதே மாதிரி ஜனங்களும் பாராட்டணுமே. நீங்க சொல்றதைப் பார்த்தா எல்லா பாட்டும் ஹிட் ஆயிடும்னுதான் தோணுது. பார்க்கலாம்.

அதிகாரி: வார்த்தைகளில் ரொம்பக் கெட்ட அர்த்தம் மட்டும் தான் இருக்கிற மாதிரி தெரியுது. அதனால நாங்க பாடல் காட்சிகளை வெட்டிடுவோம்.

தயா: அதுக்கென்ன சார். பாட்டுக்களிலே டபுள் மீனிங் வர மாதிரி எழுதச் சொல்லிடறேன். நீங்க ஒரு அர்த்தத்தை மட்டும் பார்த்து ஓ.கே. சொல்லிடுங்க.

அதிகாரி: அப்படி எல்லாப் பாடல்களையும் திருத்தி எழுதிட முடியுமா?

தயா: அப்படி திருத்த முடியாத பாடல்களைக் கோவில்லேயும் திருவிழாவிலேயும், கடவுள் விக்கிரகத்துக்கு முன்னாலேயும் பாடற மாதிரி காட்சிகளை அமைக்க ரெடிக் பண்ணிடறேன். பக்திப் பரவசத்தில் கெட்ட அர்த்தத்தைக் கூடக் கவனிக்காம பாடிட்டாங்கன்னு வெச்சுக்கலாமே!

அதிகாரி: அப்ப, சரி. ஆனா அந்த இன்னொரு ஸீன்...

தயா: எந்த ஸீன் ஸார்?

அதிகாரி: ஹீரோயின் குளிக்கிறா. அப்ப திடீர்னு புயல் அடிக்க அவ ட்ரெஸ் எல்லாம் பறக்குது. தன் மானத்தைக் காப்பாத்திக்கிறதுக்காக, அவ ட்ரெஸ்ஸைத் தூக்கிக்கிட்டு ரோடுக்கு வரா. வெளியே ஹீரோ நிக்கறான். அவனைப் பார்த்ததும், வந்த விஷயத்தை மறந்துட்டு அவன் கூட டூயட் பாடறா. இப்படி வெச்சிருக்கீங்களே...

தயா: ஆமா.. கதைக்குத் தேவையான காட்சி ஸார் அது. கதாநாயகிக்கு அடிக்கடி குளிக்கிற பழக்கம் உண்டு. இதை எப்படியோ தெரிஞ்சுகிட்ட வில்லன் கோஷ்டி, அவ குளிக்கும் போது கடத்தறதுக்கு முயற்சி செய்யுது. அதனாலே தயவு செஞ்சு அந்த ஸீனை மட்டும் மாத்தச் சொல்லாதீங்க.

அதிகாரி: நான் சொல்றதைதான் நீங்க கேக்கணும். நீங்க சொல்றதைக் கேக்கறதுக்கு நான் இல்லை. சென்ஸாரை ஏமாத்த முடியாது. ஹீரோயின் பாத்ரூம்லே குளிக்கும்போது ஹீரோ எட்டிப் பார்க்கிற மாதிரி காட்சி வெச்சிருக்கீங்களே. அது எவ்வளவு அசிங்கமா இருக்கு தெரியுமா? குழந்தைகள் இந்தப் படத்தைப் பார்ப்பாங்கன்ற பொறுப்புணர்ச்சியே உங்களுக்கு இல்லையே?

தயா: அடடா, இந்த முக்கியமான விஷயம் எனக்குத் தெரியாமப் போயிருச்சே. சாரி ஸார். ம் ம் ம்..டோண்ட் ஒர்ரி. அதையும் மாத்திடலாம். எட்டிப் பார்க்கிற மாதிரியெல்லாம் வேண்டாம். ஆபாசம். இவனும் சேர்ந்து அவளோட குளிக்கிறான். பாடிக்கிட்டே வெளியே வராங்க. அப்படியே காஷ்மீர் வரைக்கும் போயிடறாங்க. அப்ப புயல் அடிக்குது. அப்பதான் ரெண்டு பேருக்கும் ட்ரஸ் ஞாபகம் வருது. அதைத் தேடிக்கிட்டே பாத்ரூமுக்குத் திரும்பி ஓடறாங்க.


அதிகாரி: கரெக்ட். இதுலே துளிக்கூட ஆபாசம் இல்லை. இந்த மாற்றத்தையெல்லாம் செஞ்சுட்டு, சென்ஸார் சர்டிபிகேட்டை வாங்கிட்டுப் போங்க. சென்ஸார் விதிமுறைகளை யாரும் மீற முடியாது, ஆமா!




* பெண்களை ஒதுக்குகிறீர்களா...?

'அரங்கா, உறங்கியது போதாதா?'

* வாசகர்கள் கூட்டம்





* வேங்கடேச தீக்ஷிதரைக் கௌரவிக்கிறார் இறை வணக்கம் பாடிய வீணை ரங்கராஜன்.

"நான் ஒரு பள்ளி ஆசிரியை. மாணவர்களுக்கு எந்தப் பாடம் நடத்துவதானாலும் அதற்கு முதலில் அவர்களை மனத்தளவில் தயார் செய்ய வேண்டும் (Mind Preparation) என்பது எங்களுக்குச் சொல்லித் தரப்பட்ட அடிப்படைப் பாடம். இதைக் கடைப்பிடிக்க எனக்கு கல்கி இதழ் பெரிதும் உதவி வருகிறது. அதில் வெளியாகும் கட்டுரைகள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பற்றிய செய்திகளை எடுத்துச் சொல்லி விட்டு வகுப்புப் பாடங்களைத் துவங்குகிறேன்...."

- பேரியவர் சௌமித்ரி கண்ணன்.

இடம்: ஸ்ரீரங்கா மெட்ரிகுலேஷன் மேல் நிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம். இங்கு நடந்த கல்கி வாசகர் சந்திப்பு நிகழ்ச்சியில் பெண்கள் அதிக அளவில் கலந்து கொண்டதைக் குறிப்பிட வேண்டும். இதன் காரணமாகவோ என்னவோ, பெண் எழுத்தாளர்கள் கல்கியால் ஒதுக்கப்படுகிறார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டும் எழுந்தது! இது உண்மையல்ல என்பதை ஆதாரங்களுடன் எடுத்துச் சொன்னபோது, வாசகர்கள் எல்லோருமே ஒப்புக் கொண்டார்கள்.

அடுத்த சர்ச்சை ஸ்ரீரங்கம், திருவானைக்கோவில், சமயபுரம் சிறப்பிதழின் கவர் ஸ்டோரி குறித்தது. வெறும் பரபரப்புக்காக எழுதப்பட்ட கவர் ஸ்டோரி அது; உண்மையில் எந்தவொரு அபாயமும் ஸ்ரீரங்கத்துக்கு இல்லை என்று ஓரிருவர் பேசினார்கள். நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய வேங்கடேச தீக்ஷிதரோ தமது துவக்கவுரையிலேயே

ஃப்ளாட் கலாசாரம் பற்றிக் கவலையுடன் குறிப்பிட்டிருந்தார். வாசகர்களுக்காக நாம் நடத்திய கவிதைப் போட்டியில் பரிசுக்குரிய தாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதையும் அதே கவலையை எதிரொலித்தது:

அபார்ட்மெண்ட்டுகள் உயர்கின்றன
டிபார்ட்மெண்டுகள் தூங்குகின்றன
உறங்கியது போதாதா?
அரங்கா, கண்விழிப்பாய்!
எழுதியவர்: எஸ்.பிரபாகரன்

கவிதையின் கடைசி இரு வரிகளை மட்டும் நாம் கொடுத்து விட்டு, பத்து வரிகள் வரை எழுதி, சுற்றிரண்டு அடிகளைக் கொண்டு முடிக்கும்படி கேட்டிருந்தோம். இப்போட்டிக்கு நடுவராகச் செயல்பட்ட திருவானைக்கோவில் ரவி, பரிசுக்குரிய தாகத் தேர்ந்தெடுத்த மற்றொரு கவிதை இது:

புகார் தரப் போன குப்பன்
தூக்குப் பிணமாய்
லாக்கப் அறைக்குள்

கணவனைத் தொலைத்த கையோடு
கற்பையும் தொலைத்து விட்ட
கைம்பெண் மனைவி-
தீயில் தற்கொலை செய்து கொள்ள
அக்கிரமத்தை அனுமதிக்கும்
அரசாட்சி-

உறங்கியது போதாதா?
அரங்கா கண் விழிப்பாய்!
எழுதியவர்: மு.மு.அஷ்ரப் அலி.

குவிஸ் போட்டி தவிர, குவிஸ் போட்டியும் நடத்தப்பட்டது. சிறப்பிதழில் இடம் பெற்ற செய்திகளின் அடிப்படையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அதிகபட்ச பதில்கள் அளித்துப் பரிசைத் தட்டிக் கொண்டவர் வாசகர் கிருஷ்ணமூர்த்தி.

வீணைக் கலைஞர் ரங்கராஜன் இறை வணக்கம் பாடித் துவக்கி வைத்த வாசகர் சந்திப்புக்கு, ஏராளமான கலைஞர்கள் வந்திருந்தார்கள். நடனமணி ரேவதி முத்துசாமி, கார்டூனிஸ்ட் 'பாபுஜி' (கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற அஷ்ரப் அலி இவர்தான்), எழுத்தாளர்கள் அஸ்வினி, ஜெயந்தி சுந்தரம் (இருமாமகள்), தமிழினியன், கிருஷ்ணா, சத்யா சீனிவாசன்; துணுக்கு எழுத்தாளர்கள் சாந்தா, தென்னூர் யாதவன் என்று ஒரு இன்லண்ட் இதழ் தயாரிக்கும் அளவுக்குக் கலைஞர்கள், எழுத்தாளர்கள்! தவிர, ரோஹிணி அபார்ட்மெண்ட்ஸ் நிறுவன அதிபர் மருதாசலம், ரோட்டரி போன்ற அமைப்புகளிலிருந்தும், கோயில் நிர்வாகத்திலிருந்தும் முக்கிய பிரமுகர்கள் என்று பலர் ஆரம்பம் முதல் கடைசி வரை இருந்து நிகழ்ச்சியை நிறைவாக்கினார்கள்.


பிரமுகர்களும் சரி, வாசக நண்பர்களும் சரி, மிகவும் உணர்ச்சி வசப்பட்டு கல்கியை விமர்சித்தார்கள். தங்களது சொந்த இதழ் என்றே உரிமை கொண்டாடி அவர்கள் பேசியவற்றை எடைபோட்டு நடைமுறைப் படுத்த ஆசிரியர் குழு முனைந்து இறங்கியிருக்கிறது.

''இவ்வளவு வருடங்களாக ஸ்ரீரங்கத்தில் இருக்கிறேன். எனக்கும் பழைய நாணயங்கள் சேகரிப்பதில் ஆவல். ஆனால் என்னைப் போன்ற இன்னொரு ஆர்வலர் இதே ஊரில் இருப்பதை, கல்கி ஸ்ரீரங்கம் சிறப்பிதழைப் படித்துத்தான் தெரிந்து கொண்டேன்'' என்று ஒரு வாசகர் கூறியபோது, நகரச் சிறப்பிதழ்கள் தயாரிப்பதில் உள்ள ஒரு புதிய பலன் நமக்குத் தெரிய வந்தது.

- சீதா ரவி

படங்கள்: கோபிநாத்

* கவிதைப் போட்டி நடுவர் ரவியைக் கௌரவிக்கிறார் ஸ்ரீரங்கம் கல்கி ஏஜெண்ட் ரங்கநாதன்.





* குவிஸ் போட்டியில் பரிசு கிருஷ்ணமூர்த்திக்கு



* கவிதைப் போட்டியில் பரிசு பெறும் பிரபாகரன்...



* ...அஷ்ரப் அலி.

கல்கியின் பாணி தனி பாணி

◆ தலையங்கம் படித்தேன். தமிழக அரசின் குறைபாடுகளை இடித்துக் காட்ட, இதை விடச் சிறப்பாகத் தலையங்கம் எழுத இயலுமா?
சென்னை - 33, சி. ராமநாதன்.

◆ அறிவுரை கூறுவதற்குத் தகுதி வேண்டும். தகுதியை விடத் தைரியமும் வேண்டும். உங்களுக்கு ரொம்பத்தான் தைரியம். இல்லாவிட்டால், முதல்வரையும், ஆட்சியின் குறைபாடுகளையும் விமர்சிக்க முடியுமா?
தைலாபுரம், தைலை. மகாலிங்கம்.

◆ ஸ்ரீரங்கம் சிறப்பிதழைப் படித்து விட்டு, அரவணை துயில் அரங்கன், இடமாற்றம் செய்து கொள்ள முற்படும் முன், அவன் இணையடி நிழலில் இளைப்பாறும் பக்தர்கள் தங்கள் இருப்பிடங்களைப் பற்றிச் சிந்திக்கத் தூண்ட வைத்த விதம்தான் சிறப்பு!
கும்பகோணம் - 1, கே. மதுரகீதா.

◆ ஸ்ரீரங்கம் ஏரியாவைப் பிடித்திருக்கும் பிளாட் புற்றீசல் சீரழிவுகளை இத்தனை சிரத்தையாக விளக்கி, அவலங்களுக்குக் குரல் கொடுப்பதில் எங்கள் 'கல்கி'யின் பாணி தனி என நிரூபித்து விட்டீர்கள்!
திருச்சி - 1, என். தட்சிணாமூர்த்தி.

◆ புதுமையான தலைப்பில் அருமையான கதையை (வட்டு கதைதான்) வெளியிட்ட 'கல்கி'யை மறக்க முடியாது!
சிவகங்கை, துரை. குருவாயூர் கண்ணன்.

◆ லட்சத்தியோராவது முறையாக 'ஏமாற்றம்' உள் கருத்தான காதல் கதையாக ''வைஜெயந்தி - அலைஸ் - லட்டு முழுங்கி'' சிறுகதையைப் படிக்கிறேன்... சரளமான நடை உத்தியும், எடுத்தாண்ட கதைக்களனும் பாராட்டத் தக்கன! கே. ரவிசங்கர் இளைஞரா?
சென்னை - 1, மண்ணடி. எஸ். பாலாஜி.

◆ கமலமனராஜனின் கட்டுரை படித்தேன். சரளமான அழகு நடையை வியப்பதா? ரசனையோடு கண்டு ரசித்த - குமுறிய செய்திகளை அப்பட்டமாகச் சொன்ன நேர்த்தியை ரசிப்பதா? சமயபுரம் பற்றிய செய்திகள் குறைவாக இருப்பதற்கு நாங்களும் ஒரு காரணம் இல்லையா? விட்டுப் போன தகவல்கள் இருக்கிறதுதான். அவையும் புராதன கோவில்களின் கவனிப்பாரற்ற நிலை பற்றியதுதான். வருகிற ஆட்சிகள் நாத்திகம் பேசுவதாகவும், பகட்டு மேனாமினுக்கிகளாகவும் இருக்கையில், இந்த அவல நிலையில் என்ன வியப்பு இருக்கிறது?
திருச்சி, தாயு. செந்தில் குமார்.

◆ அழகாக ஆரம்பித்து, எதிர் பாராத திருப்பங்களுடன் நிறைவாக முடிந்துள்ளது கோபுர வாசல் சிறுகதை. நீங்கள் சொல்லாவிட்டால் இவர் எழுதிய கதை என்றே தெரியாது. கட்டுக்கோப்பாகக் கதை வளர்ந்து முடிந்திருக்கிறது.
பொள்ளாச்சி, சி.ஆர். நாகராஜன்.

◆ 'கோபுர வாசல்' சிறப்பாக இருந்தது. மாறுபட்ட பாணியில் ஓர் புதுமைப் படைப்பை வழங்கிய கல்கிக்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுக்கள்!
சீர்காழி, எஸ். நடராஜ்.

◆ திருமணத்திற்குப் பிறகு ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் உண்டாகும் உறவு தெய்வீகமானது. தம்பதிகள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, மனம் ஒன்றி வாழும் வாழ்க்கை தெய்வ சந்நிதானத்திற்கு ஒப்பானது. அந்த சந்நிதானத்திற்குள் நுழைய கோபுரவாசல் போன்றது முதலிரவு. நித்யா - ரவி உறவு அந்த கோபுரவாசலில் நுழையும் முன்பே நின்று விடுகிறது. எனவே ''கோபுர வாசல்'' என்னும் டைட்டில் பொருத்தமானதே.
தஞ்சாவூர் - 2, வெ. முருகானந்தம்.

(இன்னும் ஏரான வாசகர்கள் தலைப்புக்கும் கதைக்கும் உள்ள பொருத்தம் பற்றி நூதனமான பல விளக்கங்கள் அளித்துள்ளனர். அனைவருக்கும் நன்றி. ஆர்.)

◆ 'முக்கொம்பில் ஒரு முனகல்; கல்லணையில் ஒரு கம்பீரம்!' படித்த போது புகைப்படக்காரர் கோபிநாத்துக்கு மட்டுமல்ல; கட்டுரையாளர் பா. ராகவனுக்கும் கேமராக்கண்கள் தான் என்பது புரிந்தது.
மங்கைநல்லூர், சின்னஞ்சிறுகோபு.

ஆஸ்கார் அவார்டுகளை அள்ளிக் குவித்த படம்!



ஸ்பீல்பர்க்

ஆஸ்கார் கிடைக்காதா என்று பதினைந்து வருஷங்களாகக் காத்திருந்தார் ஸ்டீவன் ஸ்பீல்பார்க். Encounter of a Third Kind, E. T., Jurrasic Park என்று எத்தனையோ வெற்றிப் படங்கள். பெரும்பாலும் விஞ்ஞானக் கதைகள். வெற்றி மேல் வெற்றி குவித்தவருக்கு ஆஸ்கார் வெற்றி மட்டும் நழுவிக் கொண்டே போயிற்று.

இந்த ஆண்டு அள்ளிக் கொண்டார். ஒன்று இரண்டு அல்ல; ஏழு ஆஸ்கார் பரிசுகள் இவரது ''ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்'' படத்துக்கு. இவற்றுள் சிறந்த படம், சிறந்த டைரக்டர் ஆகிய இரண்டும் அடக்கம். தவிர காமிரா, திரைக்கதை, எடிட்டிங், இசை, ஆர்ட் டைரக்ஷன்.

இவற்றைத் தேர்வு செய்ய ஆஸ்கார் அமைப்பின் 5000 கலைத்துறை அங்கத்தினர்கள் வோட்டுப் போட்டார்கள்.

அப்படி ஷிண்ட்லர்ஸ் லிஸ்ட்' படத்தில் என்ன இருக்கிறது என்றால், இந்த நாளைய பிரும்மாண்ட வண்ண வண்ணச் சித்தனைகளுடன் ஒப்பிட்டால் ஒன்றும் பிரமாதமில்லைதான்.

மூன்று மணி நேரக் கறுப்பு - வெளுப்பு டாகுமெண்டரி படம் என்றே கூறிவிடலாம்!

ஆனால் நிலைக்களன். அதுதான் எல்லோரையும் கட்டிப் போட்டுவிட்டது. கண்ணீரைத் தருவித்தும் விட்டது. யூதர்களுக்கு எதிராக ஹிட்லரும் அவனது ராணுவ அதிகாரிகளும் இழைத்த கொடுமைகளை விவரிக்கும் படம் இது. அந்தக் கொடுமைகளை மறுபடியும் திரையில் காட்ட வேண்டுமா என்றால், இத்தகைய கொடூரம் மறுபடி நிகழவே கூடாது என்பதற்காக ஒரு நினைவூட்டல் என்பது தவிர, படம் அளிப்பது நம்பிக்கைச் செய்தி; இத்தனை அழிவுக்கும் மத்தியில் ஒரு ஜனசமூகம் துளிர்க்கும்... தழைக்கும்... மனம் மட்டும் தளராமலிருந்தால்.

படத்தின் கதை, கொடுமைகளிடையே மன மென்மையை உணர்த்துவது, ஜெர்மானியன் ஷிண்ட்லர், தனது தொழிலகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட யூதர்களையே வேலைக்கு வைத்துக் கொள்கிறான். காரணம், அவர்களுக்குச் சம்பளம் மிகவும் குறைவு. அதட்டி, மிரட்டி அடிமைகளாக நடத்தி வேலை வாங்க முடியும். ஆனால் அவர்கள் விஷவாயு உட்கொண்டு சாக வேண்டும் என்று ஹிட்லரின் கட்டளை பிறப்பிக்கப்படும்போது ஏனோ ஜெர்மானியனாக இருந்தும் அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அவனுக்குத் தோன்றுகிறது. அது மனச்சாட்சியும் நன்றியுணர்வும் கலந்த ஒரு காரணமாக இருக்கலாம். கடைசி காட்சியில் காப்பாற்றப்பட்ட யூதர்கள் - நேற்றுவரை ஷிண்ட்லரை வெறுத்தவர்கள் - ஷிண்ட்லரின் கல்லறையில் நன்றியுணர்ச்சியுடன் நின்று, அஞ்சலி செலுத்திப் போகிறார்கள்!

ஸ்டீவன் ஸ்பீல்பார்க் தாமே ஒரு யூதர் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் அவர் உள்ளத்தில் ஏற்பட்ட ஆழமான பாதிப்பு, இந்தப் படத்தை உருவாக்கத் துணை நின்று ஆஸ்கார்களையும் அள்ளிக் கொடுத்திருக்கிறது.

கொடூரமான காட்சிகளைத் தாங்கிக் கொள்ளக் கூடியவர்கள், அதன் சரித்திரப் பின்னணியைப் புரிந்து கொண்டு நெஞ்சம் நெகிழக் கூடியவர்கள், திரைப்படம் வழங்கும் செய்தியை உணர்ந்து கொள்ளக் கூடியவர்கள் வீடியோ லைப்ரரி நோக்கிப் படையெடுக்கலாம். தியேட்டருக்குப் படம் வர ரொம்ப காலமாகும்!


– கே. ஆர். எஸ்.

பி. கு : படம் குழந்தைகளுக்கு ஏற்றதல்ல.

படத்தில் ஒரு காட்சி.....



மேக்-அப் இல்லாமல் வந்த சினிமா பாடல்கள்!



● ''இதுதான் முதலும் கடைசியுமான முயற்சி...''

கர்நாடக சங்கீதக் கச்சேரிதான். ஆயினும் ஹவுஸ் ஃபுல். உட்கார இடமின்றி நின்றபடியே கச்சேரியைக் கேட்டவர்களும் உண்டு! 'Classical Music in Tamil Films' என்று அதிக விளம்பரமின்றி அரங்கேறிய அந் நிகழ்ச்சியில் விஜய் சிவா முழுக்க முழுக்க சினிமா பாடல்களைப் பாடினார்.

கல்யாணப் பந்தல்போல் விஸ்தாரமான காம்போதி ராக ஆலாபனை. தொடர்ந்து 'குஞ்சிதபாதம் நினைந்துருகும்..' என்ற திரைப்பாடல், நிரவல், கற்பனை சுவரம் என்று அந்தப் பாடலுக்கு அமர்க்களமாக அலங்காரம் செய்கிறார் விஜய் சிவா.

அடுத்து 'கல்லிலே கலைவண்ணம் கண்டான்...' என்று விறுவிறுப்பாக ஆரம்பிக்க, ஆடியன்ஸிடையே திருப்தி நிறைந்த சலசலப்பு. அது 'ஜோன்புரி' ராகப் பாடல் என்று அறிவிக்கிறார்கள்.

மியூசிக் அகாடமி மினி ஹாலில் ஒய்.ஏ.சி.எம். (Youth Association for Classical Music) ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி இது.

''ஒரு முழு நீள கர்நாடக இசைக் கச்சேரியைக் கேட்ட உணர்வே ஏற்பட்டது. இவை சினிமா 'மேக்-அப்'பைக் களைந்து விட்டு, கச்சேரி காஸ்ட்யூம் அணிந்து கொண்டது எப்படி...?'' என்று கேட்கிறோம் விஜய் சிவாவிடம்.

''இந்த நிகழ்ச்சியின் நோக்கமே சினிமாவில் ஒலித்த தூய கர்நாடக இசையைத் தேர்ந்தெடுத்து வழங்குவதுதான்...'' என்கிறார் விஜய். ''திரை இசையாக இப்பாடல்கள் ஒலிக்கும்போது பின்னணிசங்கீதமாக நிறைய வாத்தியங்கள் சேர்ந்து கொள்ள, பாடலுக்கு வேறு ஒரு பரிமாணம்

கிடைக்கிறது. நான் இந்தக் கச்சேரியில் பக்க வாத்தியக் கலைஞர்களை வழக்கத்தைவிட சற்று அடக்கி வாசிக்கும்படி கேட்டுக் கொண்டேன். காரணம் ரசிகர்கள் பாடல் களைக் கூர்ந்து கவனித்து ராக சித்திரத்தைப் புரிந்து கொள்ளட்டும் என்றுதான். இதன் விளைவாகப் பாடல்கள் நீங்கள் சொல்வது போல் வித்தியாசமாகத் தொனித்திருக் கும்...''

அன்று நிகழ்ச்சியில் விஜய்சிவா வுக்குப் பக்க வாத்தியம் வாசித்த எஸ். கண்ணன் (வயலின்), கே.பாலாஜி (மிரு தங்கம்), எஸ். கார்த்திக் (கடம்) ஆகிய மூன்று இளைஞர்களுமே மிக அனு சரணையாக வாசித்தது கச்சேரிக்குக் களை சேர்த்தது.

இந்த இரண்டு மணி நேர நிகழ்ச்சிக் காக இரண்டு மாதங்கள் உழைத்திருக்கிறார் விஜய் சிவா. முதலில் பாடல்கள் தேர்வு... ''இதில் நிறைய உதவியவர் என் அப்பா தான். கூடுமானவரை பழம்பெரும் பாட கர்கள், இசையமைப்பாளர்கள், பாட லாசிரியர்கள் எல்லோருக்கும் நிகழ்ச்சியில் இடம் கொடுக்க முயற்சி செய்தோம்.... அப்படியும் பி.யு. சின்னப்பா, டி.ஆர். மகாலிங்கம் போன்ற சில பிரபலங்கள் விடுபட்டுப் போனார்கள். இதில் ரசிகர்களுக்கு ரொம்ப வருத்தம்...''

''தற்காலப் பாடல்களுள் ஒன்று கூட இடம் பெறவில்லையே...?''

''தற்காலப் பாடல்களை நாங்கள் பரிசீலிக்காமல் இல்லை... ஆனால், கர்நாடக சுத்தம், ஒரு கச்சேரி மேடையில் பாடக்கூடிய வார்த்தை சுத்தம் என்ற இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய பாடல்கள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. உதாரணமாக 'கூந்த லிலே மேகம் வந்து...' என்ற பாலநாகம்மா படப் பாடல் - அருமையான பிலஹரி ராகம். ஆனால் வார்த்தைகள் எங்கள் நோக்கில் சரிப்படவில்லை. வேறு பல பாடல்களில் அங்கங்கே சுத்தமான ராக சாயல் தெரிகிறது. ஆனால் சட்டென்று வேறு ராக கலப்பு வருகிறது... இன்னும் சில பாட்டுக்கள் இருவர் மாறி மாறிப் பாடுவ தாக அமைந்துள்ளது. உதாரணமாக 'தன் தன தன் தன தாளம் வரும்...' இதை என் ஒருவனால் பாட முடியாது.

நிகழ்ச்சியில் பாடப்பட்ட ஒவ்வொரு பாடலும் யார் யார் இயற்றி, இசை யமைத்துப் பாடினார்கள்; எந்தப் படம் போன்றவை அறிவிக்கப்பட்டன. இந்தத் தகவலைச் சேகரிக்க ஃபிலிம் நியூஸ் ஆனந்தன், வி.ஏ.கே.ரங்காராவ் போன்ற வர்கள் விஜய் சிவாவுக்கு உதவியிருக் கிறார்கள்.

''இதே போல் மீண்டும் ஒரு கச்சேரி செய்தால் எடுபடுமா...?'' என்று கேட்க,

''சந்தேகம்தான்'' என்கிறார் விஜய் சிவா. ''இந்த நிகழ்ச்சியைத் தயாரித்து அளித்தது எனக்கு மகிழ்ச்சியான, துடிப் பான அனுபவமாக இருந்தது. 'அடுத்து என்ன பாட்டு வரும்..?' என்ற எதிர் பார்ப்பை ரசிகர்கள் முகத்தில் வழக்கத்தை விட கூடுதலாகப் பார்க்க முடிந்தது... ஆனா

* விஜய் சிவா



ஓம் இதுதான் என் முதலும் கடைசியுமான முயற்சி. இனிமேல் இதைப் போன்ற ஒரு நிகழ்ச்சியை நான் தயாரித்து அளிப்பதாக இல்லை...''

''ஏன்...?''

''அதற்கான முயற்சிகளில் நான் என் தனித்தன்மையை ரொம்பவும் மறக்க வேண்டியிருக்கும்... இப்படி அடிக்கடி செய்ய முடியாது...'' என்று கூறும் விஜய் சிவா, தேச பக்திப் பாடல்களை மட்டும் கொண்ட ஒரு முழு நீளக் கச்சேரியை அமைத்து வழங்கியிருக்கிறார் 1991ல். ''அந்த நிகழ்ச்சிதான் எனக்கு அதிக திருப்தி அளித்தது'' என்றும் சொல்கிறார்.

- அலமேலு கணேசன்

படங்கள்: கோபிநாத்



'பொருள்'... அதை 'தர்மத்தின்' மூலம் பெறலாம் என்ற மகாபாரதத்தின் கருத்தைப் பின்பற்றினார் ஒரு சிறந்த தொழிலதிபர்.

'பொருள்' - உலக வாழ்க்கைக்கு அனைவரும் விரும்பும் பொருளாதாரத் தேவை.

'தர்மம்' - உலக வாழ்க்கையில் நல்லொழுக்கத்துடன் கூடிய நல்வாழ்வுக்கு வழி. திரு. பி.ஏ.சி. ராமசாமி ராஜா அவர்கள், வேதாந்தத் தத்துவங்கள் மற்றும் புராண இதிகாசங்களில் தாம் கற்று அறிந்தவற்றை எல்லாம் பயன்படுத்தித் தம் தொழில்களின் மதிப்பை ஆரவாரமின்றி வளர்த்து உயர்த்தினார். சேவை, நேர்மை, நல்லிணக்கம் மற்றும் ஒத்துழைப்பு, பணிவு, தன்னடக்கம், விட்டுக் கொடுத்தல் மற்றும் நன்றி பாராட்டுதல் போன்ற சிறந்த நற்குணங்களில் அவர் கொண்டிருந்த நம்பிக்கை, அவர் செய்த தொழில்களில் எல்லாம் பின்னிப் பிணைந்திருந்தது.

ஒவ்வொரு மனிதரையும் மதிக்க வேண்டும்... ஏனெனில் ஒவ்வொருவரும் ஆண்டவனால் படைக்கப்பட்ட ஒரு வடிவம். செய்யும் தொழிலே தெய்வம். ஒரு தொழிலதிபர், "மற்றவர்களின் செல்வத்திற்குக் காப்பாளர்" ஆவார். பெறுவதைவிடக் கொடுப்பதே அதிக திருப்தி தரும். இந்தக் கருத்துக்கள் எல்லாம் அவரை 'தர்மத்தை' நோக்கிச் செல்ல வழி காட்டின. சுயநலத்திற்கான பலன்கள், வெகுமதிகள், தான் என்ற ஆணவத்திற்கான தேவைகள் இவற்றை எல்லாம் விட்டு விலகிச் செல்ல உதவின.

'பொருள்'- இதற்கு விளக்கமும் தாராளம். மொத்த விற்பனைப் புரள்வு ரூ. 300 கோடி. ஆஸ்திகளின் மதிப்பு ரூ. 300 கோடி. 16 தொழில் பிரிவுகளைக் கொண்ட ஒன்பது நிறுவனங்கள். இவை எல்லாம் சேர்ந்து தென் இந்தியாவில் மிக வலிமை யானதும், மதிப்பில் மிகச் சிறந்ததுமான தொழில் குழுக்களில் ஒன்றாகத் திகழ்கிறது ராம்கோ. அவர் தொடங்கிய ஆலை-ராஜபாளையம் மில்ஸ் - இன்று இவ்வகைத் தொழிலில்

நன்னெறியும் நல்லறமும் கொண்ட நிர்வாக முறையைப் பின்பற்றிய ராம்கோ குரூப் நிறுவனருக்கு இது ஒரு புகழாரம்

ராஜபாளையம் மில்ஸ் லிமிடெட் • ராஜபாளையம் ஸ்பின்டெக்ஸ் • மதராஸ் சிமெண்ட்ஸ் லிட் • ராம்கோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் • ராம்கோ சிஸ்டம்ஸ் • ஸ்ரீ ராம்கோ ஸ்பின்னர்ஸ் • தி ராமராஜு சர்ஜிக்கல் காட்டன் மில்ஸ் லிமிடெட் • சுதர்சனம் ஸ்பின்னிங் மில்ஸ் • ஜெயராம் மில்ஸ் லிமிடெட் • ஸ்ரீ விஷ்ணு சங்கர் மில்ஸ் லிமிடெட் • ஆர்த்தோப்பிக்ஸ் இந்தியா லிமிடெட்



ராம்கோ குரூப்

க நவீனமான மற்றும் லாபகரமான நூற்பு ஆலைகளில் ஒன்றாக விளங்குகிறது. தொடங்கியது முதலே இடைவிடாது டிவிடெண்டு வழங்கிய சாதனையையும் இது படைத்திருக்கிறது. அவர் நிறுவிய சிமெண்டு ஆலை - மதராஸ் சிமெண்ட்ஸ் - நம் நாட்டிலேயே அதிகசெயலாற்றல் மிக்க, லாபகரமான ஆலையாகும். அவர் உதவியுடன் தொடங்கப் பெற்ற ராமராஜு சர்ஜிக்கல் காட்டன் மில்ஸ், உலகெங்கும் வாடிக்கையாளர்களைக் கொண்டிருக்கிறது அவருடைய தர்ம சிந்தனைகள் மூலம் பல மருத்துவ மனைகள், டிரஸ்டுகள், மற்றும் 1000-க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் வகையில் ஆறு பெரிய கல்வி நிலையங்கள் ஆகியவை எல்லாம் தொடங்கி நடத்தப் பெற்று வருகின்றன.

தர்மத்தின் மூலம் பொருளை அடையலாம் என்பதை நான் இரு கரம் கூப்பி மன்றாடிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்... ஆனால், கேட்பவர் யாரும் இல்லையே" - மகாபாரதத்தின் இறுதியில் வியாச பகவான் இவ்வாறு முறையிடுகிறார். ஆனால் அப்படி ஒருவர் இருந்தார்... அவர்தாம் எங்கள் ராம்கோ குரூப்பின் நிறுவனர், திரு பி. ஏ. சி. ராமசாமி ராஜா அவர்கள்.




திரு. பி. ஏ. சி. ராமசாமி ராஜா அவர்கள்
ராம்கோ குரூப் நிறுவனர்.



● பாராட்டு



● அதிர்ஷ்டம்



● மணி விழா

● கே. ஆர். உபேந்திரன், தஞ்சாவூர்.

? மணப்பாக்கம் என்ற இடத்தில் ஜெயலலிதாவுக்கு ஒருவர் கோவிலே கட்டியிருக்கிறாராமே?

! அதில் அதிசயமில்லை; அங்கே போய் நமது அமைச்சர்கள் இன்னும் அபிஷேகம் பண்ணாமலிருக்கிறார்களே, அதுதான் ஆச்சர்யம்!

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? வீராணம் திட்டம், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் இவற்றில் எது மிகுந்த பயன் தரும்?

! வீராணம் திட்டம் ஒரு மாநில அரசோடு போச்சு; கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் இரண்டு மாநில அரசுகள் சம்பந்தப்பட்டது. எதிலே யாருக்குப் பிரயோஜனம் அதிகமாயிருக்கும், தெரியாதா!

● இல. சண்முகவேலு, திருத்தங்கல்.

? "சமூக நீதி காத்த வீராங்கனை" என்று முதல்வருக்குப் பட்டமளித்து வீரமணி பாராட்டியது குறித்து....?

! போகப் போக, "பெரியாரின் கொள்கை காத்த வீராங்கனை' என்று கூட மானமிகு வீரமணி பாராட்டக்கூடும்!

● தி.மா. தமிழழகன், திருச்சி.

? தங்களின் பார்வையில் சட்ட மன்றம் எப்படி?

! சத்த மன்றம்.

● மஞ்சுதேவன், பம்பாய்.

? 'மகளிர் மட்டும்' பிரமாதமாமே?

! Nine to Five என்ற ஆங்கில வெற்றிப் படத்தின் தமிழாக்கம் என்பதை மட்டும் இன்னும் யாரும் சொல்லவில்லை.

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன் கோட்டை.

? 'வாழ்க்கையில் முன்னேற பகல் கனவு காண்பது சிறந்தது' என்று நெடுஞ்செழியன் கூறுகிறாரே?

! என்னதான் கனவு காணட்டும் நெ. 1 ஆகும் சான்ஸ் இந்த ஜென்மத்தில் அவருக்கு இல்லை.

● ச. ஜான் ரவி, கோவில்பட்டி.

? திரைப்படங்களில் எம்.எல்.ஏக்களைக் கேவலமாகச் சித்திரிப்பது தமக்கு வேதனை அளிப்பதாக முதல்வர் கூறுகிறாரே?

! 'உண்மை சுடும்' என்பது ஜெயகாந்தனின் ஒரு சிறுகதைக்கான தலைப்பு.

● தமிழ்ச் செல்வன், தஞ்சை.

? ஸ்ரீரங்கம் கோப்பி தூரில் இராசகோபுரம் பற்றியோ அதனைக் கட்டி முடித்த ஸ்தபதி வெப்பிரகாசம் பற்றியோ ஒரு வரி கூட இல்லை....?

! இராசகோபுரம் கட்டி முடிக்கப்பட்ட போதே அது பற்றிய விரிவான கட்டுரைகள் கல்கியில் வந்தாச்சே!

● வி.கே. பிள்ளை, திருபுவனம்.

? இங்கேயெல்லாம் அறிவிக்கப்படாத மின் வெட்டால் (நேரம் காலம் கிடையாது) ஹிம்சிக்கிறார்கள். அங்கே எப்படி?

! ஐய்யோ! அதை ஏன் கேட்கறீங்க? அங்கே ஹிம்சைன்னா இங்கே சித்திரவதைதான்! தனி மனிதர்களை விடுங்க; தொழில் துறை பாதிக்கப்படுவதால் நாட்டுக்கே எத்தனை நஷ்டம்!

● அ. ராஜா ரஹ்மான், திருப்பரங்குன்றம்.

? சமீபத்தில் தங்களை மிகவும் திகைப்புக்குள்ளாக்கிய செய்தி?

! மேற்கு வங்கத்தில் சுமார் நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள எலெக்ட்ரானிக் வாக்குப் பதிவு இயந்திரங்கள் வீணாகக் கிடக்

● கோயில்



ஜெயலலிதாவுக்குக் கோயில் கட்டப்பட்டுள்ளதாமே?

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
தேனம்மாள் ராமசாமி,
61, பெருமாள்பட்டி நாடார்
மேலத் தெரு,
ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125.

கின்றனவாம். இவற்றைப் பயன்படுத்தச் சட்டம் வருமுன்னரே ஆர்டர் தந்து மூலையில் தூங்க வைத்துவிட்டது தேர்தல் கமிஷன். இது பற்றி டி.என்.எஸ். ஏன் வாய் திறப்பதில்லை?

● வி. எஸ். கணேஷ் வைத்தியா, கோவை.

? போலீஸ் நிலையங்களில் அநாகரிகச் செயல்கள் அதிகரித்து வருகின்றனவே....?

! எல்லா காவல் நிலையங்களையும் மகளிர் காவல் நிலையங்களாக்கி விட்டால் என்ன!

● ஆர். பாபு, காரைக்குடி.

? சித்து 98 ரன் எடுத்து சதத்தைக் கோட்டை விட்டது ஏன்?

! துரதிர்ஷ்டம் தொடர்வதுதான் காரணம். ஸ்ரீலங்காவுக்கு எதிராக 99 எடுத்து விட்டுப் பெருமூச்சு விட்ட மனிதர்தானே!

● எஸ். பிரகாஷ், தஞ்சாவூர்.

? திறப்பற்றாக்குறையால் தமிழக அரசு யாரையும் வேலைக்கு எடுக்காதாமே?

! 'வேண்டப்பட்டவர்களைத் தவிர' என்று சேர்த்துக் கொண்டு படிக்கவும்.

● வைத்தியா, டி.வி. நல்லூர்.

? கவர்னரிடம் தமிழக அரசு மீதான காங்கிரஸ்காரர்கள் கொடுத்த ஊழல் புகாருக்கும் பாண்டிச்சேரி அரசு மீதான அ.தி.மு.க. காரர்கள் கொடுத்த ஊழல் புகாருக்கும் என்ன வித்தியாசம்?

! ஏட்டிக்குப் போட்டியாகச் செயல்படுவதால் பின்னணியில் சாரம் இருந்தால் கூடச் சப்பென்று ஆகிவிடும். அதேபோல் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்களை விஞ்சி அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் பாண்டி சட்டமன்றத்தில் கலாட்டா செய்ய நினைத்துச் செயல்படும் போது, தங்களுக்குத் தாங்களே தலைவலி வைத்தான் ஏற்படுத்திக் கொள்கிறார்கள்.

● ஆர். ஆறுமுகம், கொடிமங்கலம்.

? 'கவர்னர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு, மயிலாப்பூர் தொகுதியில் நிற்கத் தயாரா' என்று நிதி அமைச்சர் சென்னாவுக்குச் சவால் விட்டது குறித்து....?

! மயிலாப்பூரில் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை அவரால் மறக்க முடியவில்லை போலும், சென்னாவுக்கும் ஏற்படட்டுமே என்று ஆசைப்படுகிறார்.

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? "ராஜரத்தினம் நாதஸ்வரத்தில் தமிழிலா அழுவார்?" என்ற சுப்புடுவின் கேள்வி குறித்து....?

! கர்நாடக சங்கீதம், மேல் நாட்டு மரபு வழி சங்கீதம் போல் இசையை மட்டும் அடிப்படையாகக் கொண்டது அல்ல. ராகத்தைத் தொடர்ந்து சாகித்தியம் இங்கு உண்டு. சாகித்தியம் என்று வந்த பிறகு மொழியும் உண்டு. வாய்ப்பாட்டானாலும் வாத்தியமானாலும் சாகித்தியத்துடன் ஒன்றி, பாவத்துடன் இழைந்துதான் இசையை வழங்க வேண்டும்.

● தேனம்மாள் ராமசாமி, ஸ்ரீவில்லிபுத்தூர். ❑

? ஜெயலலிதாவின் 48 கோடி வரி விதிப்பு பற்றி....?

! என்னமோ சிகரெட்டுக்கு வரி, மதுவுக்கு வரி, வாகனத்துக்கு வரி ஏழைகளுக்கு ஒன்றுமில்லே என்பது போல் பட்ஜெட் பேச்சில் ஒரு மாய்மாலம் பண்ணினார் நிதி அமைச்சர். ஆனால் விற்பனை வரி விலக்கு இருந்து வந்த பல இனங்களுக்கு அந்தச் சலுகையை நைஸாக ரத்து செய்ததன் மூலம் ஒருவர் பாக்கி இல்லாமல் எல்லாரையும் வயிற்றில் அடித்து விட்டார். பருப்பு முதல் தேன் வரை, பென்சில் ரப்பர் முதல் புத்தகம் நோட்டுப் புத்தகம் வரை, துடைப்பக் கட்டை முதல் மெழுகுவர்த்தி அரிக்கேன் விளக்கு வரை, கைக்குட்டை முதல் படுக்கை விரிப்பு வரை என்று எதையும் விட்டு வைக்காமல் வஞ்சனை இன்றி வரி நீட்டியிருக்கிறார். எல்லாவற்றிலும் கொடியது, புத்தகங்கள் மீதான வரி. ஏற்கெனவே இங்கே டி.வி. வீடியோ பாதிப்பில் புத்தகங்கள் படிக்கும் பழக்கமே குறைந்து வருகிறது... இப்படியா அறிவுக்கு வரி விதிப்பது!

★ கேள்வி



● எம். ரேவதி, மன்னார்குடி.

? சமீபத்தில் நீங்கள் மனதாரப் பாராட்ட வேண்டும் என்று எண்ணிய நபர்?

! அண்மையில் மணிவிழா கண்ட குமரி அனந்தன். தாம் சார்ந்துள்ள காங்கிரஸ் கட்சிக்காகவும் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதற்காகவும் அவ்வளவு பாடுபட்ட இன்னொருவர் அக் கட்சியில் இல்லை - சம காலத்தில். எல்லோரும் பெருந்தலைவராக எண்ணும் போது அவர் தொடர்ந்து சிறந்த தொண்டராகவே இருப்பதில் திருப்தி அடைகிறார். அப்புறம் அந்த இலக்கிய ஆர்வம், சொற்பொழிவு ஆற்றல்.... வார்த்தைகளில் அடங்குவதல்ல; கேட்டு அனுபவிக்க வேண்டியது.





பிறந்த குழந்தைக்கு மூச்சுத் திணறினால்..?

பிறந்து மூச்சு விடத் துடித்துக் கொண்டிருந்த சிசுவை, பெங்களூரில் உள்ள மணிப்பால் மருத்துவமனையில், ஒரு புதிய முறையில் காப்பாற்றியிருக்கிறார்கள். இந்தியாவைப் பொறுத்தமட்டில் நடந்த இந்த முதல் முயற்சி பற்றி விளக்கும்படி, குழந்தைகள் நல மருத்துவ நிபுணர் டாக்டர் ரகுபதியிடம் கேட்டோம்.

முழுமையான கர்ப்பம் இன்றிச் சில வாரங்கள் முன்பாகவே பிரசவிக்கப்படும் குழந்தைகள், ஹையலைன் மெம்ப்ரேன் டிஸீஸ் (Hyaline Membrane Disease) என்ற நோய்க்கு ஆளாவதுண்டு. இதையே அமெரிக்காவில் ரெஸ்பிரேடரி டிஸ்ட்ரஸ் ஸிண்ட்ரோம் (சுருக்கமாக RDS) என்பார்கள்.

''சில சிசுக்கள் இதன் காரணமாக மரணமடைவதுண்டு. சிசுவின் நுரையீரல் போதிய அளவுக்கு Surfactant ஊச் சுரக்காமல் இருந்து விடுவதால்தான் இப்படி நிகழ்கிறது.

''Surfactant தான் மூச்சுக் குழாயிலுள்ள நுண்ணிய காற்றுப் பகுதிகள் மூடிக் கொண்டு விடாமல் திறந்து வைத்திருக்க உதவுகிறது. இந்த நுண்ணிய காற்றுப் பகுதியை Alveoli - அல்விேயோலை - என்பார்கள்.

''சர்ஃபக்டன்ட்டை மாட்டுநுரைச்சியிலிருந்தும், மனித உடலிலிருந்தும் தயாரிப்பது தவிர, செயற்கைப் பொருளிலிருந்தும் ரசாயன முறையில் தயாரிக்கிறார்கள். சர்ஃபக்டன்ட்டைப் பொடியாகத் தயாரிப்பார்கள். தேவைப்படும்போது திரவம் சேர்த்து, பாதிக்கப்பட்ட குழந்தையின் மூச்சுக் குழல் - நுரையீரல் வழியாகச் செலுத்துவார்கள்.

''இந்தியாவில் கடந்த மூன்று நாலு வருடங்களாகத்தான் கிடைக்கத் தொடங்கியிருக்கிறது என்றாலும், சர்ஃபக்டன்ட் புழக்கத்துக்கு வந்து பத்து வருடங்களுக்கு மேலாகிறது.

''ஜப்பானில் ஃபுஜிவாரா என்பவர் வெற்றிகரமாகச் செயற்கை முறையில் சர்ஃபக்டன்ட் தயாரித்து வருகிறார்; இவர் தயாரிப்பு குழந்தைகளுக்கு மிகச் சரியாக ஒத்துப் போகிறது.

''சாதாரணமாக ஒரு டோஸ் செலுத்தினால் போதும். சில கேஸ்களில் மட்டும் இரண்டு முறை செலுத்த வேண்டியிருக்கும். ஒரு டோஸ் மருந்து என்பது 12,000 முதல் 13,000 ரூபாய் வரை ஆகிறது!

''உரிய காலத்துக்கு முன்னதாகவே பிறந்த எல்லாக் குழந்தைகளுக்கும் இந்த நோய் வரும் என்று சொல்ல முடியாது. சிசு எத்தனை சிறியதாக இருக்கிறதோ, அத்தனைக்கு இந்த நோய் தாக்கும் அபாயம் அதிகம்.

''அமெரிக்க நிறுவனம் ஒன்று EXOSURF என்ற பெயரில் சர்ஃபக்டன்ட் தயாரிக்கிறது. இதை ஒரு தகவலாகச் சொல்லுகிறேன். விலை அதிகம் என்றாலும் குழந்தைகள் மருத்துவத்துக்கு என்றே ஏற்பட்ட ஸ்பெஷல் மருத்துவமனைகளிலேனும் வாங்கி வைத்துக் கொள்வது நல்லது.''

– எஸ். வி. என்.

வாசகர் யோசனை : தாமல் கண்ணன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



உங்கள் மழலைச் செல்வம் அவனது
மென்மையான மிருதுவான உலகம்.
Nestlé
NESTUM
Baby Cereal
Weaning Food
Rice
mix with milk
Refill Pack
லேபினில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.
அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல்
திட உணவும் அவனைப் போலவே
மிருதுவாக இருக்கட்டும்.
உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.
ஆம், நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.
பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு ஸ்பூனால் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சக்திகளும் கிடைக்கின்றன.
உங்கள் செல்வ மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை ருசியை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.
இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25,
புதுதில்லி-110016
நெஸ்டம்
எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.
TB McCann/NESTUM/1492 TM
முக்கிய அறிவிப்பு : உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka